


# ஞானச்சுடர்



சந்நிதியான் ஆச்சிரமம்

வைகாசி

2016

221 ஆவது மலர்

ஓம்

முருகா



வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



**தீவினையா ரஞ்சார் விழுமியா ரஞ்சுவர்**
**தீவினை யென்னுஞ் செருக்கு.**

**பொருள் :** தீவினை செய்து பழகியவர் தீவினையை யோசனையின்றிச் செய்வர்; உயர்ந்தோர் அதைச் செய்யப் பயப்படுவர்.

(201)

**தீயவை தீய பயத்தலால் தீயவை**
**தீயினு மஞ்சப் படும்.**

**பொருள் :** தனக்கு இன்பம் கருதிச் செய்யப்படும் தீவினைகள் பின்பு தனக்கே துன்பம் தருதலால் அவை தீயினும் பார்க்க அஞ்சப்படத் தக்கன.

(202)

---

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

## முத்தி நல்குமே

### ஓதுக அதுநாம் ஓம்தத் சத்ஓம்



கோகனகத் தானுங் கோவிந் தனுந்தேடி
ஆகம் நொந்து அறிவழிந் தார்கள்
மோகஞ்சேர் மாரன் முழுது மழிந்தான்
யோக நாதன்றன் னுரைக்கா ரொப்பார்
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 65

சக்கரம் மாலுக்குத் தந்த பரமனை
அக்கரந் தோறு மமர்ந்த பெருமானைத்
துக்கம் வெட்கம் தொலைய நினைந்து
தக்க வன்பொடு சமர்ப்பிக் குதும்நாம்
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 66

சாதலும் பிறத்தலுந் தவிர்த்தெம்மை யாண்ட
போத குருவைப் புண்ணிய மூர்த்தியை
நாதங் கடந்த ஞான வெளியிடை
பேத மின்றிக் கண்டுபிறப் பற்றோம்
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 67

# ஞானச்சுடர்



வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 221

2016 வைகாசி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| இறைபக்தியில்... | ஆர்.வீ. கந்தசாமி | 01 -02 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 03 -06 |
| தொட்டாலும் போதும்... | கே.எஸ். சிவஞானராஜா | 07 -09 |
| சந்தம், இராகம், தாளம்... | மு.க. மாசிலாமணி | 10 -13 |
| நம்பியாண்டார் நம்பி | கு. சோமசுந்தரம் | 14 -15 |
| திருவருட்பயன் | ஆ. ஆனந்தராசன் | 16 -19 |
| நினைவகலா குருக்களின்... | பொ. சண்முகநாதன் | 20 -22 |
| பகவத்கீதையின் உலகம்... | பூ. சோதிநாதன் | 23 -26 |
| காயத்ரீ மந்திரம் | வி. செல்வரத்தினம் | 27 -28 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 29 -30 |
| சனி பகவான் | அ. சுப்பிரமணியம் | 31 -34 |
| விதுரநீதி | இரா. செல்வவடிவேல் | 35 -37 |
| பாம்பன் சுவாமிகள் | மூ. சிவலிங்கம் | 38 -42 |
| கண்டோம் கதிர்காமம் | அன்னைதாசன் | 43 -45 |
| படங்கள் தரும் பதிவுகள் | சந்நிதியான் ஆச்சிரமம் | 46 -47 |
| சந்நிதியான் ஞானச்சுடர்... | வ. சிவனேசன் | 48 -50 |
| சித்தர்களின் ஞானம் | சிவ. மகாலிங்கம் | 51 -55 |
| மலேசியாப் பயணத்தின்... | செ. மோகனதாஸ் சுவாமிகள் | 56 -57 |
| வைகாசிப் பெருவிழா | தொகுப்பு | 58 -60 |
| தமிழகத் திருக்கோயில் ... | வல்வையூர் அப்பாண்ணா | 61 -64 |


வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

# ஞானச்சுடர் சித்திரைமாத வெளியீடு

## வெளியீட்டுரை:-

ஞானச்சுடர் 220ஆவது மலருக்குரிய வெளியீட்டுரையினை சந்நிதியான் ஆச்சிரமத்தோடு ஒன்றிணைந்தவரும் வில்லிசை ஆற்றுவதில் மிகவும் திறன்வாய்ந்த வில்லிசைப் புரவலர் திரு க. சத்தியதாஸ் அவர்கள் மேற்கொண்டார்.

அவர் ஆற்றிய உரையில் சந்நிதியான் ஆச்சிரமம் ஆற்றும் பலவித சமய சமூக அறப்பணிகளின் தன்மை பற்றி சபையில் உள்ளோருக்கு விதந்து கூறியதுடன் தனது ஆரம்பகால வில்லிசை வளர்ச்சிக்கு ஆச்சிரமமும் பேரவையும் அடித்தளமாக நின்று எமது வளர்ச்சியைத் தாங்கி இன்று எம்மை ஒரு நல்நிலைக்கு ஆளாக்கி உள்ளதை நன்றியுடன் நினைவுகூர்ந்து முதன்முதலாக இம்மலர் வெளியீட்டில் பங்குபற்றி வெளியீட்டுரையினை ஆற்றுவது சந்நிதி வேலவனது பேரருள் என்று கூறியதுடன் தனது வெளியீட்டுரையினை நிறைவு செய்தார்.

## மதிப்பீட்டுரை:-

சித்திரைமாத ஞானச்சுடர் மலருக்காகிய மதிப்பீட்டுரையினை இளைப்பாறிய அதிபரும் ஆச்சிரம பேரவையின் செயற்பாட்டுக்கு சமூகத்தில் ஒரு அங்கமாக விளங்கும் திருமதி தவமலர் சுரேந்திரநாதன் அவர்கள் ஆற்றினார்கள்.

ஒரு மலரை வெளியிடுவதென்பதே ஒரு பெரிய சிரமமான விடயம். ஆனால் மாதம் ஒரு மலர் வீதம் 220ஆவது மலர் ஒரு பேரவை வெளியீடு செய்வதென்பது சைவ மக்களாகிய நாம் அனைவரும் பெருமைப்படவேண்டிய விடயம். அதிலும் குறிப்பாக எவ்வித விளம்பரம் அற்ற ஒரு ஆன்மீகம் சார்ந்த மலராக ஆரம்ப மலர் தொட்டு இன்றுவரை தொடராக எவ்வித தடங்களும் இன்றி வெளிவருவது செல்வச்சந்நிதி வேலவனது பூரண அருள் என்றே கூறவேண்டும்.

இச்செயற்பாட்டில் நானும் உள்வாங்கப்பட்டு வருடம் ஒருமுறை இம்மலர் வெளியீட்டில் மதிப்புரை ஆற்றுவது முருகன் எனக்கிட்ட கட்டளை என்றே கூறத் தோன்றுகிறது என்று கூறியதுடன் மலரில் இடம்பெற்ற ஆக்கங்களில் உள்வாங்கப்பட்ட கருத்தை சபையில் உள்ள அடியார்களுக்கு எடுத்துக்கூறியதுடன் தனது உரையை நிறைவு செய்தார்.

# சுடர் தரும் தகவல்

சந்நிதி வேற்பெருமானது பூரண அருட்கடாட்சத்தோடும், ஆச்சிரம சுவாமிகளது அர்ப்பணிப்புடனான சேவையினூடாகவும் கடந்த பதினெட்டு வருடங்களாக மாதம் ஒரு சுடராக வெளிவந்துகொண்டிருக்கும் ஞானச்சுடர் மலரானது எதிர்வரும் புரட்டாதி மாதம் 225ஆவது மாத மலராக வெளிவர இருக்கின்றது. இத்தகு சாதனைக்கு மலருக்கு ஆக்கங்களை வழங்கிக்கொண்டு வரும் ஆன்மீக சிந்தனையாளர்களும், அச்சிந்தனைகளினூடாக உள்வாங்கப்பட்ட வாசக அன்பர்களும், சந்நிதியான் ஆச்சிரமத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் சகல சமூகப் பணிகளுக்கு உந்துசக்தியாக விளங்கும் ஆச்சிரமம் சார்ந்த அன்பர்களும் உரித்துடையோராக விளங்கி வருகின்றனர்.

இதனடிப்படையில் 225ஆவது மலராக வெளிவர இருக்கும் புரட்டாதி மாத ஞானச்சுடர் மலரின் வெளியீட்டினை ஒரு காத்திரமான செயற்பாடாக செயற்படுத்த வேண்டும் என்னும் பேரவாக்கொண்டு எம்மனதில் தோன்றிய எண்ணக்கருத்தைச் சமர்ப்பிக்கின்றோம்.

இக்கருத்தினை வலியுறுத்தும் வண்ணம் 225ஆவது சுடரில் இடம்பெறும் ஆக்கங்கள் அனைத்தும் சந்நிதியான் ஆச்சிரமம் ஆற்றிவருகின்ற பலவித சமய சமூகப் பணிகளை முதன்மைப்படுத்தியும், ஞானச்சுடர் மலரின் ஆரம்பகாலம் முதல் இன்றுவரையுள்ள வளர்ச்சி பற்றியும் தமது எண்ணக் கருத்தினை ஆக்கங்களாக எழுதுவதன்முலம் 225ஆவது மலர் ஆச்சிரமம் சார்ந்த ஒரு ஆவண மலராக வெளிவர இருக்கின்றது. அம்மலருக்காக கிடைக்கப்பெறும் ஆக்கங்களின் தராதரம் பரிசீலிக்கப்பட்டு மலரில் இடம்பெறச் செய்வதோடு அவ் ஆக்கங்களை வழங்கியோருக்கு பெறுமதியான பரிசில்களும் வழங்கப்பட உள்ளது என்பதை மனநிறைவோடு உங்கள் முன் வைத்துள்ளோம்.

ஆகையால் 225ஆவது புரட்டாதி மாத மலரில் இடம்பெறும் ஆக்கங்கள் அனைத்தும் மேற்கூறிய விடயம் சார்ந்ததாகவே அமைய வேண்டும். அவ்வகையில் எதிர்வரும் ஆடிமாத நடுப்பகுதிக்கு முன் தத்தமது ஆக்கங்களை வழங்குவதன்மூலம் இம்மலர் வெளியீட்டினைச் சிறப்படையச் செய்ய நாம் அனைவரும் ஒன்றிணைவோம்.

அன்றைய விஷேட நிகழ்வாக பலவித சமய சமூகப் பணிகளை எவ்வித பிரதிபலனும் கருதாது செயலாற்றும் ஆச்சிரம சுவாமி அவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் முருகன் திருவருளினால் நடைபெற உள்ளது.

# எமதூதர் இடர் எம்மை வருத்தாது காப்பாய் முருகா!

விரும்பினும் விரும்பாத போதினும் மரணமும்
விளைவது உறுதியாமே
விரும்பியே துறவினை வேண்டிய முனிவரும்
மரணத்தை அடைவது உண்மை
கரும்பினைப் போலவே இறைவனைக் கருதியே
கடுவான இயம தூதரைக்
கண்டதும்பண் டைய வினைப்பயன் என்றவர்
பாவங்கள் தனை நினைப்பார்
கந்தனே செந்திற் பரமனே என்னையும்
கண்டவர் வெருட்டும் போதில்
முந்தை பிறவில் நான் செய்த பாவங்கள்
முருகா நீ முறியடித்தே
எந்தையாய்த் தாயாகத் தாங்கக் கருதியே
ஏறுக மயில் மீதிலே
செந்திலோய் வேல் கொடு வந்தெனைக் காக்கவே

**சேவலங் கொடி உயர்த்தியே**
**காலன் வரும்போது கலங்காமல் காப்பாய்**

என்னுயிர் நீங்குமுன் பிராண சங்கடங்களும்
எத்தனை நேர்ந்திடுமோ
கண்பஞ் சடைந்திடும் கருதுவாய் அடைக்குமே
கடவுளைப் பாடவறியேன்
என்னெஞ்சம் அல்லலை ஏற்றிம் இப்போதே
இதற்கொரு முடிவு காண்பேன்
என்றென்றும் காத்திடும் செந்திலோன் அப்போது
எனைவந்து காத்தருள்வாயே
பொன்மலைப் பிறந்தவன் பூவினில் வளர்ந்தவன்
புணரியின் அஞ்சி நின்றான்
கண்ணருள் தருபவன் கந்தனே செந்திலோன்
கருதுவான் மயில் வாகனன்
அன்பருக்கருள்வதில் அழகினுக் கழகோன்
அருமையுள் அருமையா னோன்
என்பெலாம் உருகினும் இவனுக்காய் உருகுக
ஏற்றமும் பெறலாகுமே.

-அமரர்: முதுபெரும்புலவர் வை.க. சிற்றம்பலம் அவர்கள்-

# வைகாசிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**Dr T. ஸ்ரீஸ்கந்தராசா**
(லண்டன்)

**பொ. கஜேந்திரகுமார்**
(யாழ்ப்பாணம்)

**ச. கந்தசாமி**
(தேவன் ஸ்ரோர்ஸ், ஆவரங்கால்)

**மா. நாகலிங்கம்**
(லக்ஷ்மி வெதுப்பகம், பத்தமேனி, அச்சுவேலி)

**க. அரியரத்தினம்**
(கதிர் தொலைத்தொடர்பு நிலையம், வல்வெட்டி)

**கா. அருந்தவராசா**
(பிரதானவீதி, தொண்டைமானாறு)

**சி. தங்கவேல்**
(கேம்பிரிட்ஜ் கல்வி நிறுவனம், நவிண்டில்)

**க. கிருபாகரன்**
(சந்தைவீதி, உடுப்பிட்டி)

**நா. சுந்தரம்**
(இளைப்பாறிய பிராந்திய நிர்வாக அலுவலர், உரும்பராய்)

**ந. நற்குணராசா**
(தாதி உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை)

**P. சாந்தரூபன் G.S**
(சாருகாந் தொலைத்தொடர்பு நிலையம், கெருடாவில்)

**திருமதி இ. லோகநாதன்**
(இளை. பொது முகாமையாளர், மானிப்பாய்)

**Dr V. பாலகிருஷ்ணன்**
(கரவெட்டி)

**இ. கணேசலிங்கம்**
(கிராம உத்தியோகத்தர், ஆவரங்கால்)

**ச. தெட்சணாமூர்த்தி**
(மூர்த்தி கட்டுமாணப் பணிப்பாளர், கோண்டாவில்)

**வி. நடராசா**
(சாவகச்சேரி)

**சி. கஜன்**
(சண்டிலிப்பாய்)

**S. இராசரத்தினம்**
(இளை. பிரதேச அத்தியட்சகர், நல்லூர்)
**சி.மு. தம்பிராசா**
(வியாபாரிமூலை, பருத்தித்துறை)
**த. விக்னேஸ்வரன்**
(தங்கராசா நகை மாளிகை, யாழ்ப்பாணம்)
**அ. தனேஸ்வரன்**
(இரசாயனவியல்துறை, யாழ் பல்கலைக்கழகம்)
**உரிமையாளர்**
(சுந்தரம் பிறதேர்ஸ் மருந்துக்கடை, திருநெல்வேலி)
**K. அருள்வேல்**
(விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்)
**ஆ. குலேந்திரநாயகம்**
(கிராம உத்தியோகத்தர், ஆவரங்கால்)
**செ. கஜேந்திரன்**
(கந்தர்மடம், யாழ்ப்பாணம்)
**ஐ.கோ. சந்திரசேகரம்**
(மார்ஷல், யாழ் பல்கலைக்கழகம்)
**செல்வி T. பெரியதம்பி**
((முன்னாள் கல்விப் பணிப்பாளர், பருத்தித்துறை)
**செல்வி ரதிவதனி**
(மாயக்கை, தம்பசெட்டி)
**Dr P. சிவபாலன்**
(உரும்பராய்)
**மாணிக்கம் குட்டித்தம்பி**
(வல்லியாவத்தை, கரணவாய்)
**திருமதி சீ. ஆதவன்**
(வல்லிபுரக்கோவில் வீதி, புலோலி)
**சாவித்திரி அருணாசலம்**
(தும்பளை, பருத்தித்துறை)
**க. பொன்னுச்சாமி**
(அம்மன் கோவிலடி, கரணவாய்)
**பேரின்பபாலசுப்பிரமணியராசா கபிலேஷன்**
(அரசவீதி, உரும்பராய் கிழக்கு)
**ஐ. புவனேஸ்வரன்**
(அச்சுவேலி)
**நி. ஜெயந்தன்**
(மங்கை ஸ்ரோர்ஸ், நீர்வேலி)

சு. சந்திரலிங்கம்
(ஆனைக்கோட்டை)
பாலகுரு விமலேந்திரன்
(குரு பிறிண்ரேஸ், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி)
பொ. கந்தையா
(புருடிலேன், அரியாலை)
செ. கிருஷ்ணராஜா
(கலட்டி வீதி, கோண்டாவில்)
வை. சிற்றம்பலம்
(தேவி வாசம், கொக்குவில்)
மா. தங்கவேல்
(சுண்ணாகம்)
வரதலிங்கம் செல்வமோகன்
(மோகன்கடை, ஆவரங்கால்)
திருமதி கண்மணி கணபதிப்பிள்ளை
(பத்தமேனி, அச்சுவேலி)
தா. தர்மலிங்கம்
(கொக்குவில்)
ச. தங்கராசா J.P
(இளை. அதிபர், சிறுப்பிட்டி)
வ. புவிநாதன்
(ஐயனார் வீதி, பருத்தித்துறை)
ம.செ. சபாநாயகம்
(மாலிசந்தி, கரவெட்டி)
K. வேணுகோபாலு
(வேணி இல்லம், புலோலி)
க. செல்வராசா
(கட்டைவேலி, கரவெட்டி)
திருமதி S. உமாரதி
(மங்கை இல்லம், உடுப்பிட்டி)
நா. இராசசுந்தரம்
(அராலி)
செ. ஶ்ரீதரன்
(விமலவாசா, உச்சில் ஒழுங்கை, கரவெட்டி)
சி. மதியழகன்
(திக்கம், அல்வாய்)
ஜெகநாதன் ஜனனி
(யாழ்ப்பாணம்)

கி. சரஸ்வதி
(போதராமடம், துன்னாலை)
ஐ. சிவஞானம்
(கமலவதி, கரவெட்டி)
அ. சின்னத்தம்பி
(மாய்க்கிராயன், துன்னாலை)
கதிரவேலு சதாசிவம்
(அந்திரான், கரவெட்டி)
ச. ஜெகசோதிராசா
(ஆனைக்கோட்டை மேற்கு)
த. உருத்திரா
(யாழ்ப்பாணம்)
த. முருகானந்தா
(பிரம்படிலேன், கொக்குவில்)
A.T. கதிரவேல்
(திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)
த. யாழினி
(கந்தர்மடம், யாழ்ப்பாணம்)
ஆறுமுகம் மயில்வாகனம்
(இணுவில் கிழக்கு)
சின்னத்தம்பி அன்னம்மா
(இளை. ஆசிரியர், நீர்வேலி)
வே. பாண்டியர்
(கைதடி தெற்கு)
வ. இராசையா
(இருபாலைவீதி, கோப்பாய்)
சோ. இராசலிங்கம்
(ஆவரங்கால் கிழக்கு)
சி.க. இராசரெத்தினம்
(பத்தமேனி, அச்சுவேலி)
K. குலரெட்ணம்
(நவாலி வடக்கு, மானிப்பாய்)
சி. பாலபாரதி
(கற்கோவளம், பருத்தித்துறை)
சு. பானுஜா
(துன்னாலை, கரவெட்டி)

# இறைபக்தியில் உண்மையும் பொய்யும் உண்டா?

– திரு ஆர்.வீ. கந்தசாமி அவர்கள் –

நாம் எல்லோரும் ஆலயம் செல்கின்றோம். இறைவனை வணங்குகின்றோம். ஆனால் எம்மில் இறைவனைக் காணவோ இறைவனை அடையவோ சொல்பவர்கள் மிகவும் குறைவானவர்களே. ஆனால் சில சமயம் இறைவனே யார் இறைவனைப் பார்க்க விரும்புகின்றார்கள்? எல்லோரும் சொத்து சுகங்களுக்காக ஏங்குகின்றார்களே தவிர கடவுளுக்காக யார் ஏங்குகின்றார்கள்? என்று வருந்துகின்றார்.

நாம் கடவுளைப் பார்க்க ஏங்குகின்றோமா? என்னும் கேள்வியை நமக்குள்ளேயே கேட்க வேண்டும்.

நாம் தினமும் ஒரு பெரிய பட்டியலை வைத்துக்கொண்டு கடவுளிடம் வேண்டுகின்றோம். ஆனால் கடவுளிடம் நீ மட்டும்தான் வேண்டும், உன்னைத் தவிர வேறு எதுவும் வேண்டாம் என்று என்றாவது சொல்லியிருக்கின்றோமா? கடவுள் நேரில் வந்தாலும் அவரை அடைய நினைப்போமா? சந்தேகம் தான்.

இவற்றினை ஒரு சிறு கதையால் நாம் விளங்கிக் கொள்ள முடியும். ஒரு சிவராத்திரி இரவில் சிவன் கோயிலில் ஆயிரக் கணக்கான பக்தர்கள் பூசையும், பஜனையும் செய்துகொண்டு இருந்தார்கள்.

சிவனும் பார்வதியும் ஆகாயத்தில் சென்று கொண்டிருந்தனர். பார்வதி மகிழ்ச்சியுடன் "பாருங்கள் உங்கள் பக்தர்கள் எவ்வளவு பக்தியோடு உங்களை வழிபடுகின்றார்கள்'' என்றார். சிவபெருமான் சிரித்துக் கொண்டே என்னைப் பார்க்க இங்கு யாரும் வரவில்லை என்று கூறினார். பார்வதி "ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?" என்று வினவினார். "சரி அப்படியென்றால் கோயிலில் சென்று பார்க்கலாம் வா" என்று சிவன் கூற, இருவரும் கோயிலுக்குச் சென்றனர்.

சிவலிங்கத்தின் முன் சிவன் நின்று கொண்டு "நான்தான் பரமசிவன் உங்களுக்கு என்ன வேண்டும் கேளுங்கள் என்று உரத்த குரலில் கூறினார். ஆனால் அங்கிருந்த எவரும் நம்பவில்லை.

அர்ச்சகர் மிகுந்த கோபத்துடன், "நீங்கள்தான் சிவன் என்றால் அதை நிருபித்துக் காட்டுங்கள்" எனக் கூறினார்.

"எப்படி நிருபிக்க வேண்டும்?" என்று கேட்டார் சிவபெருமான். அர்ச்சகர், அருகில் இருந்த பித்தளையால் ஆக்கப்பட்ட செம்பைச் சுட்டிக்காட்டி"இதைத் தங்கமாக மாற்றினால் நீங்கள் சிவன் என்று ஒத்துக் கொள்வேன்" என்றார்.

சிவன் செம்பைத் தொட்டார் உடனே அது தங்கமாக மாறியது. ஆச்சரியத்தால் அர்ச்சகர் "இதோ சிவபெருமான் வந்திருக்கிறார்" என்று மிக்வும் சந்தோஷமாகக் கூறி, தங்கச் செம்பைத் தூக்கி மக்களுக்குக் காண்பித்தார். உடனே பக்தர்கள் அனைவரும் ஒரே ஓட்டமாகக் கோவிலை விட்டு ஓடினார்கள்.

சிவனைப் பார்க்காமல் இவர்கள் ஏன் இப்படி ஓடுகிறார்கள்? என்று பார்வதி மனங் கலங்கி குழம்பி நின்றார். பக்தர்கள்

*சொன்ன சொல்லைக் காப்பாற்றுவதை உன் கடமையாகக் கொள்; நீ உயர்வடைவாய்.*

எல்லோரும் சிறிது நேரத்தில் ஆளுக்கொரு குடம், கிடாரம், செம்பு, அண்டா, குண்டா எடுத்துக்கொண்டு திரும்பி ஓடி வந்தார்கள். சிவனிடம் இவைகளையும் தங்கமாக மாற்றுங் கள் என்று வேண்டினார்கள்.

பார்வதிதேவி மலைத்துப் போய் நின்றார். சிவன் சிரித்தார். அந்தப் பக்தர் களுக்குத் தேவை தங்கம்தான் சிவன் அல் லர். பூஜை, பஜனை எல்லாம் தங்கத்தைப் பெறுவதற்குத்தான் சிவனை அல்ல என் பதைப் பார்வதிதேவி புரிந்து கொண்டார்.

நம் வாழ்க்கையிலும் அப்படித்தான். நம்முடைய குறைகளைத் தீர்க்கத்தான் நாம் ஆலயம் செல்கின்றோம். ஆனால் இறை வனை அடைய விரும்பி வேண்டுவதில்லை.

நாம் உண்மையாக விசுவாசமாக இறை நாமத்தை ஜெபித்தால் நம்மனம் இறைவன்பால் ஈர்க்கப்படும் தீய குணங்கள் நம்மைவிட்டு அகன்று நம்மனம் தூய்மைப் படுத்தப்படும் சத்வகுணத்தால் மனம் நிரப்பப் படுகின்றது. இவற்றின் மூலமாக நாம் பிறவிப் பிணியறுத்து இறைவன் கழல் அடையலாம். ஆகையால் உண்மையான, தூய்மையான இறையன்பே நமது துன்பங்களை நீக்கவல் லது. அதை உணராமல் பொன்னும் பொரு ளும் போகமும் நிலையானவை என நம்பி ஏமாந்து விடுகிறோம். "நாடகத்தால் உன்னடி யார் போல் நடித்து" என மாணிக்கவாசகர் பாடியதுபோல் கடவுள் பக்தி கொண்டோர் போல் நாடகமாடுகின்றோம். இவற்றை விட்டு விட்டு எங்கிருந்தபோதும் எளிமையாக இறை வனை மனம், வாக்கு, காயம் ஆகியனவற் றால் வழிபட்டால் இறையருள் எளிதில் சித் திக்கும் பொய்யான வழிபாடு நன்மை தராது. உண்மையான வழிபாடே பெருந்தவமாகும். நம்பிக்கையுடனான இறை வழிபாடே நமக்கு நலந்தரும். அசலையும் நகலையும் இறைவன் அறியாதவரா, நம்மை நாமே ஏமாற்றிக் கொள் வதை விடுத்து, உண்மையான இறைபக்தி கொண்டோராய் வாழ்வோமாக.

## சந்நிதியானைச் சரணடைந்து பாரும்

எந்நிதி தந்திடும் சந்நிதி முருகா

என்றும் எமக்குத் துணையாய் இரப்பா

வந்தனை செய்து வணங்கும் அடியார்

வாழ்வில் வளம்பல பெற்றுய் வார்கள்

சிந்தையில் இருத்தித் தினம்தினம் அவன்புகழ்

செப்பிடு தீராத் துன்பம் தீர்ந்திடும்

சந்நிதி யானைச் சரணடைந் துபாரும்

சஞ்சலம் இன்றி வாழ்வு செழிக்கும்.

-வ. யோகானந்தசிவம்-

மணிக்கணக்கில் செய்யும் போதனையைவிட, ஒரு கணப்பொழுது உதவி புரிதலே சிறந்தது.

# திருச்சதகம்

(தொடர்ச்சி...

## பக்திவைராக்கிய விசித்திரம்

(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
– சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

### 2. அறிவுறுத்தல்

17. வருந்துவனின் மலர்ப்பாத மவைகாண்பான் நாயடியேன்
இருந்துநல மலர்புனையேன் ஏ த்தேன்நாத் தழும்பேறப்
பொருந்தியபொற் சிலைகுனித்தாய் அருளமுதம் புரியாயேல்
வருந்துவனத் தமியேன்மற் றெனேநா னாமாறே.

ப.உரை:

பொருந்திய பொன் சிலை குனித்தாய்- பொன்னுருவாகப் பொருந்திய மேருமலையை வில்லாக வளைத்தவனே, நாய் அடியேன்- நாய் போன்ற சிறுமையையுடைய அடியேன், நின் மலர் பாதம் அவை காண்பான் வருந்துவன்- நின்னுடைய தாமரை மலர்போன்ற திருவடிகளாகிய அவற்றைக் காணும்பொருட்டு வருந்தி முயல்கின்றேன்; இருந்தும்- அவ்வாறு வருந்தி முயன்றிருந்தும், நலமலர் புனையேன்- திருவடிகளைக் காண்பதற்குச் சாதனமாக நல்ல மலர்களை மாலையாகத் தொடுத்து நினக்கு அணியேன்; நா தழும்பு ஏற ஏத்தேன்- நின்னை மேன்மேலும் துதித்தலால் நாவில் தழும்புண்டாகும்படி நின் புகழைப் பாடேன்; அருள் அமுதம் புரியாயேல்- என்னிடத்து அச்ச தனங்களின்மையால் நினது திருவருளாகிய அமுதத்தினை அடியேனுக்கு வழங்கல் செய்யா தொழிகுவையாயின், அ தமியேன் வருந்துவன்- அச்சாதனத் தகுதிகளில்லாது துணையி லாதேனாகிய யான் மேன்மேலும் வருந்துவேன்; நான் ஆம் ஆறு மற்று என்- நான் அங்ஙனம் வருந்தாது உய்யும்வழி வேறு யாது உளது?

பொற்சிலை குனித்தாய், நாயடியேன் நின் மலர்ப்பாதங்களாகிய அவற்றைக் காணும் பொருட்டு வருந்தி முயல்கின்றேன்; அவ்வாறு முயன்றிருந்தும் திருவடிகளைக் காண்பதற்குச் சாதனமாக நல்ல மலர்களைத் தொடுத்து நினக்கு அணியேன்; நாத்தழும்பேற ஏத்தேன்; என்னிடத்து அச்சாதனங்களின்மையால் நின் திருவருளாகிய அமுதத்தினை அடியேனுக்கு வழங்கல் செய்யா தொழிகுவையாயின் அத்தமியேன் வருந்துவன்; நான் வருந்தாது உய்யும் வழி வேறு யாது உளது என்பதுதான்.

வருந்துவன் என்றது நின் மலர்ப்பாதங்களைக் காணும் பொருட்டு வருந்தி முயல்கின்றேன் என்னும் பொருளது. மலர்ப் பாதம்- மலர் போன்ற பாதம். "மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்" (திருவெம் 2) "மாலறியா மலர்ப்பாத மிரண்டும்" (திருப்படை 1) எனப் பிறாண்டும் வருவன காண்க. மலர் என்றது தாமரை மலரை. "தாமரைத் தாள்" (சத 45) எனவும், "சொற்பதங் கடந்த அப்பன் தாள தாமரைகள்" (அச்சப் 6) என அடிகள்

பிறரைச் சீர்திருத்தும் கடமையைவிட தன்னைச் சீர்திருத்திக் கொள்வதே முதல் கடமை.

அருளியவாறுங் காண்க. பாதமவை என்பதிற் சுட்டு பாதங்கள் என்னும் துணையாய் நின்றது இருந்தும் என்றது மலர்ப்பாதங்களைக் காணும் பொருட்டு வருந்தி முயன்றிருந்தும் என்னும் பொருளது.

நாமலர் என்றது உரியகாலத்து உரிய முறைப்படி உரியனவாகக் கொய்தெடுக்கப்பட்ட நல்ல மலர்களை, புனையேன் என்ற வினையினால் அம்மலராற் றொடுக்கப்பட்ட மாலை என உரைக்கப்பட்டது. "பூமாலை புனைந்தேத்தேன்" (சத 14) என வந்தமையுங் காண்க.

நாத்தழும்பு ஏற என்றது பல்காற் பாடுதலால் நாவில் தழும்பு உண்டாகும்படி என்றவாறு. "கூத்தனை நாத்தழும்பேற வாழ்த்தி" (திருப்பொற் 15) என வருதலுங் காண்க. நாத்தழும்பு ஏறுதற்குச் செயப்படுபொருளாகிய இறைவன் புகழ் வருவிக்கப்பட்டது.

சிலை- மலை. "சிலையளித்த தோளான்" (பு.வெ.மா. 33) என்பதற்கு "மலையையொத்த தோளான்" என அதன் உரையாசிரியர் பொருளுரைத்தமையுங் காண்க. பொற்சிலை என்றது பொன்னுருவாகப் பொருந்திய மேருமலையை குனிதல்- வளைத்தல். குனித்தாய் என்னும் வினையினால் வில்லாக என்பது வருவிக்கப்பட்டது. இறைவன் பொற்சிலை குனித்தமை அடையார் புரங்களை அழித்தற் பொருட்டாகும்.

"விண்டார் புரம்வேவ மேருச் சிலையாகக், கொண்டான்"

ஞான 83:6.

"நினையாதார் புரமெரிய வளைத்தமேருச், சிலையானை"

நாவு 277:6.

"வரியர நாணதாக மாமேரு வில்லதாக
அரியன புரங்கள்ளவை யாரழ லூட்டலென்னே" சுந் 99:8.

எனத் தேவாரத்தும்,

"அடையார் புரங்கள் இகல்குன்ற வில்லிற் சென்றோன்" (4)

எனத் திருக்கோவையாரினும் வருவன காண்க.

வில்லாதற்குப் பொருந்தாத மலையை வளைத்த நீ, மலர் புனைதற்கும் ஏத்துதற்கும் என்னைத் தூண்டாத மனத்தை வளைத்து உதவலாமன்றோ. அதனால் அருளமுதம் வழங்குதல் செய்தலும் இயையுமே. அங்ஙனம் வழங்குதல் செய்யா தொழிவையாயின் என்பார் "அருளமுதம் புரியாயேல்" என்றார். அருளமுதம்- திருவருளாகிய அமுதம். "புயங்கன் அருளமுதம் ஆரபருகி" (யாத்திரைப் 9) எனவும், "உண்டேன் அவரருள் ஆரமிர்தத்தினை" (11ஆந் திருமுறை. கோயில் திருப்பள்ளி 14) எனவும் வருவன காண்க. ஏத்துதல் அருள் பெறுதற்கே துவாதல்.

"எப்பரி சாயினும் ஏத்துமின் ஏத்தினால்
அப்பரி தீசன் அருள்பெற லாமே" 36.

"ஏத்தியு மெம்பெரு மானென் றிறைஞ்சியும்
ஆத்தஞ்செய் தீசன் அருள்பெறலாமே" 39.

எனத் திருமந்திரத்து வருவனவற்றாலுமறிக.

அத்தமியேன் என்பதில் சுட்டு மலர் புனைதலும் ஏத்துதலுமாகிய அச்சாதவை களின்மையை உணர்த்தியது. தமியேன்- துணையில்லாதேன். திருக்கோவை 90 பேர் உரை. பற்று, பிறிது பொருளது. ஆம் ஆறு என்றது வருந்துவேனாகிய யான் வருந்தாது உய்யும் வழி என்னும் பொருளது. ஏ- அசை.

*என் மனதில் அமைதி நிறைந்திருப்பதன் காரணம் என் மனச்சாட்சி சாந்தமாயிருப்பதே.*

இதன்கண் நின்மலர்ப்பாதங்களைக் காண்பான் வருந்தி முயல்கின்ற யான் மலர்புனையவும் ஏத்தவும் உதவி செய்யாது புறப்புலன்களில் அலைந்து திரியும் என் மனத்தின் அவ்வாறு திரியாது அடக்கித் தரவேண்டுமென இறைவனை வேண்டிக் கொள்ளு தலினால் மனத்திற்குக் குறிப்பான் அறிவுறுத்தியமை பெறப்படுதலின் அறிவுறுத்தல் என்னும் இரண்டாம் பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க.

18. ஆமாறுன் றிருவடிக்கே யகங்குழையேன் அன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்துரையேன் புத்தேளிர்
கோமானின் றிருக்கோயில் தூகேன் மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே.

**ப.ரை:**

புத்தேளிர் கோமான்- கடவுளர் தலைவனே, உன் திருவடிக்கே ஆம் ஆறு- உன்னுடைய திருவடிகளுக்கே ஆளாகும் வண்ணம், அகம் குழையேன்- அன்பினால் மனம் நெகிழ்ந்திலேன்; அன்பு உருகேன்- அன்பினால் மனம் உருகுதலும் இல்லேன்; பூமாலை புனைந்து ஏத்தேன்- பூவாலாகிய மாலையைச் சாத்தித் துதியேன்; புகழ்ந்துரையேன்- புகழ்ந்து பேசேன்; நின் திருக்கோயில் தூகேன்- நின் திருக்கோயில்களைத் திருவலகிட்டு விளக்கஞ் செய்யேன்; மெழுகேன்- திருமெழுக்கிடேன்; கூத்து ஆடேன்- ஆனந்தக் கூத்து ஆடுதல் செய்யேன்; சதுராலே சார்வான் விரைகின்றேன்- என் அறிவின் ஆற்றலினால் நின்னை அடைதற்கு முற்படு கின்றேன்; சாம் ஆறே- அங்ஙம் முற்படுதல் பிறவிப் பயன்பெறாத இறந்துபடும் வழியேயாகும்.

புத்தேளிர் கோமன்! உன் திருவடிக்கு ஆளாகும் வண்ணம் மனம் குழையேன்; அன்பினால் மனம் உருகேன்; மலர் மாலையைச் சாத்தித் துதியேன்; நின் பெருமைகளை யெல்லாம் புகழ்ந்து உரையேன்; உனது திருக்கோயிலை அலகிடேன்; மெழுகிடேன்; கூத்தாடேன்; ஆற்றலால் நின்னை அடைதற்கு முற்படுகின்றேன்; அங்ஙனம் முற்படுதல் பிறவிப் பயன் பெறாது இறந்துபடும் வழியேயாகும் என்பதாம்.

கடவுளர் தலைவன் இறைவனாதலின் அவனைப் "புத்தேளிர் கோமான்" என்றார். கோமான், அண்மைவிளி, திருவடிக்கே ஆமாறு- திருவடிக்கே ஆளாமாறு, திரு- ஞானச் செல்வம், ஏகாரம் தேற்றப்பொருளது. குழைதல்- நெகிழ்தல்; உருகுதல்- நீர்போல் உருகுதல் அகம் குழைதலுக்கும் உருகுதற்கும் அன்பு ஏதுவாகும். "அன்பினாலடியேன் ஆவியோ டாக்கை ஆனந்தமாய்க் கசிந்துருக" (கோயிற் 2) என வருதலுங் காண்க. இறைவன் திருவடிக்கு ஆளாதற்கு அன்பினால் அகங்குழைதலும் உருகுதலும் சிறந்த சாதனங்களாகும்.

"அன்போ டுருகி யகங்குழை வார்க்கன்றி
என்போல் மணியினை எய்தவொண் ணாதே" (272)

எனத் திருமந்திரத்து வருதலுங் காண்க.

*பொழுது போகாமை, வறுமை ஆகியவற்றிற்குக் காரணம் உழைப்பின்மையே.*

ஏத்தேன்- துதியேன். புகழ்ந்துரைத்தல்- இறைவன் பெருமைகளைப் புகழ்ந்து பேசுதல் தூகல்- திருவலகிடுதல்- மெழுகல்- கோமயத்தால் மெழுகுதல். குழைதலும் உருகுதலும் மனத்தின் செயல்களாகும். ஏத்துதலும் உரைத்தலும் மொழிகளின் செயல்களாகும். தூகலும் மெழுகலும் உடலின் செயல்களாகும். இறைவனை வழிபட்டு அதன் பயனாக ஆனந்தத்தால் கூத்தாடுதலும் செய்திலேன் என்பார். கூத்தாடேன் என்றார். பூமாலை புனைந்தேத்தல் தூகல் மெழுகல் கூத்தாடல் என்பன இன்றியமையாதன என்பது,

"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடி" (245:3)

என அப்பரடிகள் திருவாக்காலும் தெளிக.

சதுர்- ஆற்றல். ஏ- தேற்றம். சார்வான், வானீற்று வினையெச்சம், ஏ- அசை. சார்வான் விரைகின்றேன் என மாற்றிக் கூட்டி முடிக்க. இறைவன் திருவடிக்கு ஆமாறு அகங்குழைதல் முதலியனவற்றைச் செய்யாது சதுராகலே சார்தற்கு முற்படுதல் பிறவிப் பயனைப் பெறாது இறந்துபடும் வழியேயாகும் என்பார் சாமாறு என்றார்.

இதன்கண் மனமொழிமெய்கள் சரியையாகிய சைவ நன்நெறிக்கணின்று வழிபடுதற்கு இயைந்து வாராமையை இறைவனிடத்துக் கூறுமுகத்தால் நெஞ்சிற்குக் குறிப்பினால் அறிவுறுத்தலின் அறிவுறுத்தல் என்னும் இரண்டாம் பத்து நுதலியபொருள் போதருதல் காண்க. 14. (தொடரும்...

---

### வாசகர் உள்ளத்திலிருந்து...

மாதந்தோறும் ஞானச்சுடரைப் பெற்றுவரும் வாசகி என்ற வகையில் இக்கடிதத்தை வரைகின்றேன்.

தங்களது பங்குனி இதழில் திரு முருகவே பரமநாதன் எழுதியுள்ள "ஆருக்கு ஐயா அக்கறை" கட்டுரை ஆழமானதும் காலத்தின் அவசரத் தேவையானதுமான கருத்துப் பெட்டகமாக அமைந்திருந்தது. "அனுநெறி"யிலும் அவரது கருத்துக்களைப் படித்து உள்ளேன்.

அக்கட்டுரையின் தலைப்பு சைவ சமயிகள் எல்லோரையும் விளிக்கின்றது. அவர்தம் மெத்தனப்போக்கும், தூரநோக்கற்ற பகட்டுப் போக்குகளும் சைவத்தை உலக அரங்கில் நகைப்புக்கிடமாக்குவது கண்கூடு. நாளாந்தம் நடக்கும் நிகழ்வுகளைக் கண்டும், சைவ சமயிகள் என்ற அடையாளத்துடன் உலவுவோரின் நுனிப்புல் மேயும் ஆரவாரங்களைக் கேட்டும் மனம் நொந்துபோன ஒருத்தியாக நான் உங்களுக்கும் எழுத்தாளருக்கும் ஒரு வேண்டுகோளை முன்வைக்க விழைகின்றேன்.

இக்கட்டுரையில் பொதிந்துள்ள விடயங்கள் ஒவ்வொன்றும் பல கட்டுரைகளாக- அதாவது தொடராக எழுதப்படல் வேண்டும். அத்துடன் பரந்த வாசகர்களைச் சென்றடையும் முகமாக அத்தொடர் ஞாயிறு பத்திரிகை ஒன்றில் வெளிவரவேண்டும். அங்ஙனமே, எமது சைவசமயிகளின் மனப்பாங்கில் நன்மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

-வசந்தி தயாபரன்-

*தலைவனாக இருக்கத் தெரிந்தவனுக்கு ஊழியனாகவும் இருக்கத் தெரிந்திருக்க வேண்டும்.*

# தொட்டாலும் போதும் பட்டாலும் போதும் எட்டாதனவெல்லாம் ஈட்டி நிற்பது திருவாசகம்

– திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் –

நாயிலும் பார்க்கக் கேவலமாக இருந்த என்னைத் தாயாகி நின்று, பாசம் அறுத்து, பற்று அறுத்து. நேசமோடு எனை அணைத்து, அஞ்ஞானம் எது, மெஞ்ஞானம் எது என்று உணர்வித்து, விஞ்ஞான உலகிலும் ஓராதார் உள்ளத்துள் ஒளிக்கும் ஒளியாக விளங்கும் எல்லாம் வல்ல சிவபெருமானை, இமைப்பொழுதும் எம் நெஞ்சில் நீங்காமல் இருக்க, வரம் தரும் நூலாக விளங்குவது, மாணிக்கவாசக சுவாமிகள் இயற்றியருளிய திருவாசகம் ஆகும். இது தேனாக இனிக்கும் தெவிட்டாத நூலாகும்.

சிறப்பு:

தொல்லை இரும் பிறவிச் சூழும் தளை நீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எம் கோன்
திருவாசகம் என்னும் தேன்.

கற்பாந்த காலம் கடவாக் கடல் கடக்கத்
தெப்பமாய் வந்து எனக்குச் சேர்ந்ததே - அப்பன்
உருவாசகம் கொண்டு உரைத்த தமிழ் மாலைத்
திருவாசகம் என்னும் தேன்.

"திருவாசகத்திற்கு உருகாதார்
ஒரு வாசகத்திற்கும் உருகார்"

திருவாசகத்தைத் தினமும் பாடிவந்தால் கருவில்
உருவாகிப் பேறடைவாய் இல்வாழ்வில் அருளாகும்
குருவாசகத்தை எந்நாளும் சிந்திக்க வேண்டுமாயின்
திருவாசகத்தை ஒருமுறை தொட்டுப்பார் - துலங்கும்.

சுகம் வரும்

மார்கழி மாதம் பிறந்துவிட்டால் முன்பெல்லாம் வீட்டிலும் சரி, கோவிலிலும் சரி திருவாசகம் பாடுவார்கள். இப்போதும் இது பேணப்பட்டு வருகிறது. 2000ஆம் ஆண்டிலே போக்குவரத்துத் தடைப்பட்டிருந்தபோது, கப்பல் இல்லாமல் பல்லாயிரம்பேர் திருகோணமலையில் தங்கித் தவித்திருந்தோம். அந்நிலையில் பலர் ஒன்றுசேர்ந்து திருவாசகம் ஓதினோம்.

*நற்செயலைச் செய்வதற்கு எந்த நேரமும் ஏற்ற நேரமே.*

முற்றாக ஓதி முடிக்கும் தறுவாயில் கப்பல் புறப்படும் செய்தி கிடைத்தது. எண்ணூறு பேருக்கு ரிக்கற் கிடைத்தது. எல்லோரும் திருவாசகத்தைத் தொட்டுக் கும்பிட்டார்கள். அன்று தான் ஒருசிலருக்கு திருவாசகத்தின் அருமை புரிந்தது. தொட்டாலும் சரி, பட்டாலும் சரி, திருவாசகத்தைக் கேட்டாலே போதும். சுகம் வரும். இன்னும் சொல்வதானால், நீங்கள் படிக்கின்ற மேசையிலே, திருவாசகப் புத்தகம் இருக்கட்டும். ஒரு நாளைக்கு ஒரு முறையாவது திறந்து பார்த்துவிட்டாவது மூடிவையுங்கள். திருவாசகம் மருந்து போன்றது. அமுதம் போன்றது, இனிப்புடையது. எந்த நோய்க்கும் நிவாரணியாக அமைவது. நீரிழிவு, குருதி அமுக்கம், கொழுப்பு, கட்டி, புற்றுநோய், இயலாமை எதுவாயினும் சுகமாக்கவல்லது திருவாசகம். எல்லாவற்றுக்கும் மேலாக, நான் என்ற அகங்காரத்தையும், பேராசையையும் அறவே நீக்க வல்லது திருவாசகமாகும். இனியாவது பாடிப் பாருங்கள், எழுதிப் பாருங்கள். வாசித்துப் பாருங்கள். அதைத் திறந்து பாருங்கள். உள்ளம் தெளியும். ஊனுடம்பு ஆலயமாகும். பிறகென்ன சிவபெருமான் விரும்பி வந்து நிரந்தரமாக விடுதலையளித்து, பரிபூரண பேரானந்த நிலைக்குள் உங்களை ஆழ்த்தி விடுவான். வேறு என்னதான் எங்களுக்கு வேண்டும். பதவி பதவியென்று பேராசைப்படுகிறாயே? ஆசையை அறு!.

**ஆனந்தப் பரவசம்**

"யானே பொய்; என் நெஞ்சும் பொய்; என் அன்பும் பொய்;
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே
தேனே, அமுதே, கரும்பின் தெளிவே, தித்திக்கும்
மானே, அருளாய் அடியேன் உனைவந்து உறுமாறே".

ஆம் எமது முகம் ஒரு கண்ணாடி. என்ன தவறு செய்தாலும் காட்டிக் கொடுத்துக் கொண்டேயிருக்கும். என்னதான் உன்னை மூடினாலும் நீ செய்த திருவிளையாடல்களெல்லாம் படம் மாதிரி ஓடிக்கொண்டேயிருக்கும். மாணிக்கவாசகர் அடடா அருமையாகச் சொல்லி அழ வைத்து விடுகிறார். "யானே பொய், என் நெஞ்சும் பொய், என் அன்பும் பொய்" என்று தன்னிலையுணர்ந்து சரணாகதியடைந்து விடுகிறார். இந்நிலை வந்துவிட்டால், CCTV கமராவுக்கு வேலையே இல்லையப்பா. இறைவன் எதையும் காட்டிக்கொடுப்பான். பிறகெதற்கு CCTV கமெரா! பூட்டுவித்தவருக்கே முதலில் கமரா பூட்ட வேண்டும்.

**பரிசு**

வேண்டத்தக்கது அறிவோய் நீ, வேண்ட முழுதும் தருவோய் நீ, வேண்டும் அயன்மாற்கு அரியோய் நீ, வேண்டி என்னைப் பணிகொண்டாய், வேண்டி நீ யாது அருள் செய்தாய், யானும் அதுவே வேண்டின் அல்லால், வேண்டும் பரிசு ஒன்று உண்டெனில், அதுவும் உன் தன் விருப்பன்றே! இறைவா! நீ விரும்பினால் மட்டும் பரிசாம் அதை எனக்குத் தா! உனக்கு விருப்பமில்லையென்றால் அதுவும் எனக்கு வேண்டவே வேண்டாம். இறைவன் தரு கின்ற பரிசுகளுக்கு நாம் பெயர் போடவேண்டிய அவசியம் இல்லை. பலன், புகழ், பேராசை,

*கனவுகள் நனவாக வேண்டுமெனில் முதலில் தூக்கத்திலிருந்து விழிக்க வேண்டும்.*

பதவி கருதி ஆலயப் பொதுவிடயங்களில் சொந்தப் பெயரைப் போட்டுப் போட்டு, தாளிதம் பண்ணினால், அங்கு "நான்" என்பதும் ஆசையென்பதும் நிரம்பியிருக்கிறதென்பதே அர்த்தமாகும். முன்பு எல்லாம் பொது விடயங்கள் எதுவாயினும் கௌரவ செயலாளர், கௌரவ தலைவர் என்றுதான் போட்டு சமநிலையை ஏற்படுத்துவார்கள். இப்போது அதனை மீண்டும் ஏற்படுத்த வேண்டும். ஏனைய உறுப்பினர்களது அர்ப்பணிப்பும் கவனத்திற் கொள்ளப்படவேண்டும். முன்னர் எல்லாம் திருமணப் பத்திரிகையைப் பார்த்தால் பட்டங்கள் பதவிகள் எல்லாம் போட்டு அடேயப்பா என்னவெல்லாம் செய்து மணமகனை அடடா சொல்லால் பொருளால் அலங்கரித்திருப்பார்கள். இப்போ பலர் திருவாசகம் படித்ததனாலோ என்னவோ பெயருக்கு முன்னுக்கும் பின்னுக்கும் யாதொன்றுமே போடுகின்ற வழக்கம் இல்லவே இல்லை. சிவபதம் கூட பொதுவாகக் குடும்பத்தினர் என்றே போடுவார்கள். அது என்னவென்றால், நாம் சிவனுடைய சொத்துக்கள். அப்படியென்றால் நாமெல்லாம் அவனே. அவனெல்லாம் நாமே. நாம் என்பது நிர்வாகத்தையும், குடும்பத்தையும் குறிக்கும்போது எப்படி நான் என்ற எனது பெயரைப் பிரபல்யப்படுத்துவது? ஆலயம் பொதுவானதாகும். எல்லோர்க்கும் அது சொந்தம். நான் யார்? அவனேதான்!!

திருக்கோத்தும்பி

"வைத்தநிதி, பெண்டிர், மக்கள், குலம், கல்வி என்னும்
பித்த உலகில், பிறப்பொடு இறப்பு என்னும்
சித்த விகாரக் கலக்கம் தெளிவித்த சிவமாம்
வித்தகத் தேவற்கே சென்று ஊதாய் கோத்தும்பீ!"

ஆம்! பித்த உலகில் பிறப்பொடு இறப்புவரையான கலக்கத்தினைத் தெளிவித்த வித்தகப் பெருமானிடம் சென்று ஊதுமாறு தூதுவிடும் பாங்கில் இப்பாடல் இவ்வுலகின் நிலையாமையை சொன்ன பிறகாவது நாம் திருந்தக்கூடாதா என்ன? கொஞ்சமாவது நாம் இந்த விடயத்தில் இறங்கி வாழவேண்டாமா?

பொய் ஆய செல்வத்தே புக்கு அழுந்தி நாள்தோறும் மெய்யாகக் கருதிக் கிடந்த என்னை- ஆட்கொண்ட- சிவபெருமானே, அம்பலவா, பேயேனது உள்ளப் பிழை பொறுத்து, என் கல் நெஞ்சினை உருக்கி என்தனை மனிதனாக்கிய இறைவா, இந்தமண் ஆணவ, அக்கிரமங்களிலிருந்து விடுதலை பெற அருள்புரிய வேண்டும். ஆபாசக் காட்சிகளினாலும், அளவுக்கு மிஞ்சிய கவர்ச்சிகளினாலும், கண்ட கண்ட இடங்களிலெல்லாம் வைக்கப்படுகின்ற மெத்தக் காட்சியினாலும், வயது வித்தியாசமின்றி துவம்சம் செய்கின்ற பலாத்கார கொலை முயற்சிகளினாலும் நாடு சின்னாபின்னமாகிப் போயுள்ள நிலையில், திருவாசகம் எனும் தேனை மார்கழி மாதத்திலாவது பருக வேண்டாமா? பருகமுடியாதவர்கள் திருவாசகப் புத்தகத்தினையாவது வாங்கி சாமியறையில் வைத்திருக்கக் கூடாதா? அதனைத் தொட்டாலும் போதும். அது பட்டாலும் போதும். வீட்டில் அது இருந்தாலே போதும். ஒவ்வொருவரையும் மட்டுமல்ல, வீட்டையும், நாட்டையும் பேறாக்கி நல்லவண்ணம் வாழ வைக்கும்.

*நல்லசேவை செய்யத்தேவையான ஆற்றலைக் கெட்ட மனிதனிடம் காணமுடியாது.*

# சந்தம், இராகம், தாளம் அனைத்தும் நிறைந்த இசைக் கருவூலமே அருணகிரிநாதரின் திருப்புகழ்

– திரு மு.க. மாசிலாமணி அவர்கள் –

(தொடர்ச்சி...

ஈகையின் உயர் தனிச் சிறப்பை அருணகிரிநாதர் சில பாடல்களில் மிக அழுத்தமாக உரைப்பர். ஏழைகளுக்கு ஒருபிடி உணவு கொடுக்க முடியாவிடில் இறப்பதே மேலென்பர்.

"கவடு கோத்தெழு முவரி மாத்திறல்" என்ற பொதுத் திருப்புகழில்

தவிடி னார்ப் பதமெனினும் மேற்பவர்
தாழா தீயேன் வாழாதே சாவது சாலத்
தரமு மோஷமு மினியெனாக்கைச
தாவா மாறே நீ தானாதா புரிவாயே...."

என்றவாறு ஈகையின் சிறப்பை மிக அழுத்தமாக விளக்கி உலகியலளிக்கும் அற்ப சுகங்களிலிருந்து விடுபட ஈகைதான் வழிகாட்டுமென்றும் அதனால் பெயர் புகழுக்காகவன்றி நிறைந்த மனத்துடன் தானம் வழங்க வேண்டுமென்றும் நாம் ஈவது பல மடங்காகத் திரும்பி வருமென்றும் எங்களிதயம் இறைவனின் படைப்பான ஏழை எளியவர்க்கு இரங்கவேண்டுமென்றும் பலவாறாக அறிவுறுத்துவர்.

நான், எனது என்ற அகங்காரம், மமகாரங்களை அறவே நீக்கிச் சினத்தை ஒழித்து எல்லாம் இறைவனாலேயே நடப்பவை; நாம் எமது என்று பெருமைப்பட எதுவுமில்லை; பிறக்க, இறக்க, துதிக்க, நடக்க, இருக்க, நினைக்கவும் இங்கு நான் ஆர்? எல்லாச் செயல் செய்யும் ஆற்றலும் முருகன் தந்தவையே.

"என்னால் பிறக்கவும் என்னாலிறக்கவும்...
என்னால் தரிக்கவும் இங்கு நானார்
கன்னாருரித்த என் மன்னா எனக்கு நல்
கர்ணாமிர்த பதம் தந்த கோவே..."

-வயலூர் திருப்புகழ்.

என எல்லாம் இறை செயலே என்று இறைவன் கழல் பணிதலே மேல் என்கிறார்.

அருணகிரிநாதர் தன் காலத்தில் வாழ்ந்த வித்துவக் காய்ச்சலுள்ளவர்கள், ஏனைய சமயங்கள் பிழையென விவாதிப்பவர்கள் தாம் சகலதும் கற்ற பேரறிஞர்கள் என்ற அகம்பாவத்துடன் உரக்கக் கத்தித் திரியும் அறிவிலிகளைக் கடுமையாகக் கண்டிப்பதுடன் வெறுமனே அறிவினால் இறைவனைக் காண முடியாதென்று திட்டவட்டமாகக் கூறுவர். இந்த வகையில்தான் சக்தி உபாசகனான சம்பந்தாண்டான் என்பவனுடன் வாதிட்டுச் சக்தியின் தரிசனத்தை அவனால் காண்பிக்க இயலாது தோல்வியுறத் தான் திருவண்ணாமலையில் முருகன் தரிசனத்தைக் காண்பித்து அத்தகைய மிலேச்சரைத் தோற்கடித்து இறைவனை உணர்ந்து அனுபவிக்கக் கல்விகற்க வேண்டுமேயன்றி அகம்பாவம் கொள்வதற்காகவல்ல என்றும் தற்பெருமையும் நான் என்ற முனைப்பும் கல்வியினால் பெற்ற நல்லறிவையும் அழித்துவிடும் எனவும் எச்சரிக்கின்றார்.

*சுலபமானதை முதலில் செய்யாதே; கடினமானதைச் செய்து பழகிக்கொள்.*

"…. சயிலம் எறிந்தகை வேற்கொடு
மயில்மிசை வந்தெனை யாட்கொளல்
சகமறியும்படி காட்டிய குருநாதா"

என திருவண்ணாமலையில் மயில்மீது தோன்றித் தரிசனம் அளித்த அற்புதத்தினைப் பாடுகின்றார்.

கோடை நகர் திருப்புகழில் தீய குணங்கள் பலவற்றைப் பட்டியலிட்டுக் கூறி அவற்றைச் செய்வோர் நரகக் குழியில் விழுந்து வருந்துவார்கள் என எச்சரிக்கை செய்து எல்லோரையும் நல்லாற்றுப்படுத்துகின்றார்.

"தோழமை கொண்டு சலஞ்செய் குண்டர்கள்" எனத்தொடங்கும் திருப்புகழில் நண் பருக்கு வஞ்சனை செய்தல், குருநிந்தனை செய்தல், பெரியோரை நிந்தித்தல், பொய் சொல்லல், நீதி, தருமம் கைவிடல், ஆணவம் மிகுதல், பிறர் சொத்தை அபகரித்தல் எனக் கூறி, "வாதை நமன்றன் வருந்திடும் குழி விழுவாரே" என்கிறார்.

முருகனே கண்கண்ட தெய்வம் என்ற கோட்பாடுடையவரான அருணகிரிநாதர் கந்தனின் திவ்ய வரலாற்றைக் கூறும் கந்தபுராணத்தைத் தான் படித்துணர்ந்து அனுபவித்தவாறே திருப்புகழில் அப்புராணம் விபரிக்கும் முருகனின் வீரதீரச் செயல்களை பேரருளை எல்லாம் மிக அழகாகப் பல இடங்களில் உளமுருகிப் பாடுகின்றார்.

"அசுரர் குல வேரை வெட்டி அபயமென வோலமிட்ட
அமரர் சிறை மீள விட்ட பெருமாளே" (பொதுத் திருப்புகழ்)

என்று பாடுகின்றார். தமிழ் நாட்டில் சமணசமயம் மேலோங்கிச் சைவம் தாழ்நிலையுற்று இருள் சூழ்ந்திருந்த வேளையில் முருகனே சீர்காழியில் சம்பந்தராக அவதரித்து சமண சமயத்தின் ஆதிக்க அழிவிலிருந்து சைவத்தை, சைவப் பண்பாட்டை, தமிழை மீட்டு நிலை நிறுத்தியவரென்பதனைத் திருப்புகழில் பல இடங்களில் அருணகிரிநாதர் வலியுறுத்துகின்றார்.

"கவுணியோர்குல வேதியனாய் உமை கனபாரக்
களப பூண்முலை யூறிய பாலுணு
மதலையாய் மிகு பாடலின் மீறிய
கவிஞனாய் விளையாடிடம் வாதிகள் கழுவேற"
(வேதாரணியம் திருப்புகழ்)

"புத்தரமணர்கள் மிகவே கெடவே தெற்கு நரபதி நீறிடவே
புக்க அனல்வய மிக ஏகுயவே உமையாள்தன்
புத்ரனென இசை பகர் நூல் மறை நூல்
கற்ற தவமுனி பிரமாபுரம் வாழ்
பொற்ப கவுணியர் பெருமான் உருவாய் வருவோனே"
(வயலூர் திருப்புகழ்)

என உமையின் குழந்தையாய் அவள் ஞானப்பாலுண்டு கவிஞனாகி சமணர்களைக் கழுவேற்றிச் சைவத்தைக் காத்து வெப்புநோய் பீடித்த பாண்டிய மன்னனுக்குத் திருநீறிட்டும் தேவாரம் எழுதிய ஏட்டை நெருப்பிலிட்டு எரியாது எடுத்தும் அற்புதங்கள் புரிந்த பிரமபுரம் வாழ் கவுணியர் பெருமானான ஞானசம்பந்தர் உருவாய் வந்த முருகப் பெருமானே என்று அருணகிரிநாதர் ஐயத்திற்கிடமின்றிக் கூறுகின்றார். இக் கருத்தினை இவருக்கு முன் வாழ்ந்த

பெரியபுராண ஆசிரியர் சேக்கிழாரும் "நஞ்சணிகண்டர் தந் திருமகனார்" (பெரியபுராணம்-2558) எனத் தேவர்களைத் துரத்திய ஆலகால விஷத்தைத் தான் உண்டு தேவர்களைக் காத்து அதனால் நீலகண்டரான சிவனின் மகனே சம்பந்தர் எனக் கூறுவது இங்கு நோக்கத் தக்கது. இவ்வாறாகத் தனக்கு முன் வாழ்ந்து சிவன்புகழ் பாடிய அருளாளர்களைச் சம்பந்தரைப் போலவே சுந்தரர் மணிவாசகர் போன்றோரின் சிறப்புக்களையும் தன் பாடல்களில் ஆங்காங்கே குறிப்பிட்டு அவர்களையும் நினைவு கூருகின்றார்.

"ஒரு சிறுவன் மணமது செய்போதி லெய்த்து வந்து
கிழ வடிவு கொடுமுடுகி வாசலிற் புகுந்து
உலகறிய இவனடிமை யாமெனக் கொணர்ந்து சபையூடே
ஒரு பழைய சருகுமடி ஆவணத்தை அன்று
உரமொடவனது வலியவே கிழிக்க நின்று
உதறி முறையிடு பழை வேத வித்தகர் தந்த சிறியோனே"

எனத் திருவண்ணாமலைத் திருப்புகழில் "சுந்தரர் திருமணக் கோலத்தில் திருமண மண்டபத்திலிருந்தபோது கிழவராக வடிவங்கொண்டு சபையோர் முன்னிலையில் இவன் எனது அடிமையெனப் பழைய ஆவணம் ஒன்றைக் காட்டித் தர்க்கித்த வேதவிற்பன்னரான சிவனின் இளைய மகன் முருகன் என இப்பாடலடிகளில் சுந்தரர் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

"வாதவூரனை மதித்தொரு குருக்களென
ஞானபாதம் வெளியிட்டு நரியிற் குழுவை
வாசியாமென நடத்து வகையுற்றரசனன் புகாண
மாடையாடை தரபற்றி முனைகத்து வைகை
யாறின் மீது நடமிட்டு மணெடுத்து மகிழ்
மாது வாணி தரு பிட்டு நுகர் பித்தனருள் கந்தவேளே"

என மதுரைத் திருப்புகழில் சிவன் குருவடிவாகி மணிவாசகருக்கு உபதேசித்தும் அவர் பொருட்டு நரிகளைக் குதிரையாக்கியும் பெருக்கெடுத்த வைகையாற்றை அடைக்க மண் எடுத்தும் அதற்குச் செம்மனச் செல்வி கூலியாகக் கொடுத்த பிட்டை உண்ட பித்தனாகிய சிவனின் கந்தவேளே என்றிவ்வாறு சிவனின் அருளுக்காளான அருளாளர்களோடு சிவனைத் தொடர்புபடுத்தி அத்தகைய அற்புதங்களைச் செய்த சிவனாரின் இளைய மகன்தான் முருகன் எனக் கூறுவர்.

இவ்வாறே புராண, இதிகாச, உபநிசத, வேத, ஆகமக் கருத்துக்களை எல்லாம் விரிவாகக் கற்றுணர்ந்த அருணகிரிநாதர் தானுணர்ந்து அனுபவித்த அருமையான கருத்துக் களை எல்லாம் திருப்புகழில் எடுத்தாண்டுள்ளார். இதிகாசங்களான இராமாயணம், மகாபாரதம் ஆகியவற்றிலிருந்தும் இலங்கை வேந்தன் இராமன் மனைவி சீதையைக் கவர்ந்து சமூக ஒழுங்குக்குச் சாவுமணி அடித்த இராவணனை அறத்தின் நாயகனான இராமன் வதம் செய்து மாற்றான் மனைவியை அபகரித்தல் பாவம், ஒருவனுக்கு ஒருத்தி என்ற உயர்ந்த அறம் என்பவற்றை உலகுக்குக் கற்றுக்கொடுத்த இராமாயணம் - அதேபோல் பொது அறத்தின் படியும் அரச நீதியின் படியும் பாண்டவர்களுக்குச் சேரவேண்டிய அரசுரிமையைக் கொடுக்காது முழு அரசுரிமையையும் தமதுடமையாக்கிய துரியோதனன் ஆதியோருடன் கிருஷ்ணன் அறிவுறுத்தலின்படி போரிட்டு ஈற்றில் நீதிக்காகப் போராடிய பாண்டவர் பக்கமே நீதி

நிலைநாட்டப்பட்டு அரச நீதி இவ்வாறுதான் இருக்க வேண்டுமென உலகுக்குக் கற்றுக் கொடுத்த மகாபாரதம் - போன்ற இதிகாசங்கள் போதிக்கும் உயர் போதனைகளைப் பேரருட் கவிஞராக சமூக சீர்திருத்தக் கவிஞராகப் 15ஆம் நூற்றாண்டில் தோன்றிய அருணகிரிநாதர், அனைத்துத் துறையிலும் ஒழுக்கச் சீர்கேடு மலிந்திருந்த தான் வாழுங் காலச் சமூகத்தையும் திருத்தவேண்டுமென்ற பெருநோக்குடன் முருகன் புகழ் பாடும் தனது படைப்பினூடாக அக்காலத்திய கூடாவொழுக்கச் சீர்கேடுகளை எல்லாம் முழு வீச்சுடன் கண்டித்து நற்கருத்துக்களின் பெட்டகமாகவே நமக்குத் தந்துள்ள திருப்புகழில் உயர் அறங்களை நிலைநாட்டிய இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்கள் போதிக்கும் மையக் கருத்துக்களை மேற்கோள்களாக எடுத்தாண்டதன்மூலம் தன் இலக்கிற்கு வலுச்சேர்த்த பெருங் கவிஞராவார்.

(தொடரும்...

### சாயி சிந்தனை

உன்னுடைய செயல்களில் உன்னைப் பந்தப்படுத்திக்கொள்ளாதே. கடவுளின்மேல் சிந்தையை முழுதுமாக வைத்து ஒவ்வொரு செயலையும் புண்ணிய காரியமாக்கிக்கொள் என்கிறது கீதை. இது மிகவும் கடினமான செயலாகத் தோன்றலாம். ஆனால் இதைப் பின்பற்றுபவர்களே அநித்தியமான சுக துக்கங்களிலிருந்து விடுபட்டு நித்தியமான சந்தோஷத்தையும் நிம்மதியையும் அடைகிறார்கள்.

கர்மா என்பது ஓடும் வண்டிக்குப் பின்னே பாதையில் எழும் தூசியைப் போன்றது. எப்பொழுது வண்டி நிற்கிறதோ அப்பொழுது அதன்மேல் புழுதி படிந்து அப்பிக் கொள்ளும். புழுதி படியுமே என்பதற்காக வண்டி நிற்காமல் வேகமாக ஓடிக்கொண்டே இருக்க முடியுமா? இதிலிருந்து தப்ப நல்லவழி எதுவென்றால் மண் பாதையை விட்டு விலகி கற்கள் பதிக்கப்பட்ட நெடுஞ்சாலையில் செல்வதுதான். அதாவது மனிதன் கடவுளின் அருளைப்பெற்று அதனால் செம்மையாக்கப்பட்ட வாழ்க்கைப் பாதையில் செல்லவேண்டும்.

ஏழைகளிடமும் துன்பப்படுபவர்களிடமும் உதவியற்றுத் தவிப்பவர்களிடமும் கருணையாய் இருக்க பழகிக்கொள்ளுங்கள். இந்த இரக்க குணம் இடைவிடாமல் பெருகட்டும். பிறர் துன்பம் தன்னுடையதாக எண்ணி அதைத் தவிர்க்க முயற்சி செய்து அவர்களைத் துன்பத்திலிருந்து கரையேற்றுங்கள்.

கடவுள் அன்பு மயமானவர். அவரை வெல்ல அன்புதான் ஒரேவழி. தந்திரங்களால் அவரை அடையமுடியாது. அவரை அடையவேண்டுமானால் எல்லோரிடமும் அன்பு செலுத்து எல்லோருக்கும் சேவை செய் இவற்றை நீங்கள் பின்பற்றும்போது அவரது அருள் பொங்கிப் பிரவாகிக்கின்றது.

மனித உடல் இறைவன் அருளைப் பெற ஒரு கருவி. அதனால் அதை மிகக் கவனமாகப் பாதுகாக்க வேண்டும் வலுவானதாக வைத்திருக்க வேண்டும். பல பிறவிகளில் செய்த நற் கருமங்களால் கிடைத்த இந்த மனிதப் பிறவியை ஒருகணமும் வீணாக்காது இறைவன் அருளைப் பெறும் ஆன்மீக சாதனைகளுக்குப் பயன்படுத்துங்கள்.

என்னை உங்களில் பாருங்கள். ஏனெனில் நான் உங்கள் எல்லோரிடமும் என்னைக் காணுகின்றேன். நீங்கள்தான் என் உயிர் என்மூச்சு என் ஆத்மா என் வடிவம் எல்லாம்.

*நடத்தை என்ற கண்ணாடியில் ஒவ்வொருவரும் தன் பிம்பத்தையே காண்கின்றனர்.*

# நம்பியாண்டார் நம்பி

– திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் –

சைவத்துக்கு அருந்தொண்டு ஆற்றிய பெருந்தகைகளில் ஒருவராகவும், முக்கியமான வராகவும் போற்றப்படுபவர் நம்பியாண்டார் நம்பி. அவர் ஒரு பெரும் விநாயக பக்தன். தம்மால் நிவேதனமாகப் படைக்கப்பட்ட அமுதை, பிள்ளையாரைக் கொண்டு உண் பித்த பெருமைக்கு உரியவர் நம்பியாண்டார் நம்பி. அத்துடன் விநாயகப் பெருமானை வணங்கி, அவரிடமே, அந்த ஞான வள்ள லிடமே, கல்வியை நேரடியாகக் கற்ற பேற்றை யும் பெற்றவர். இன்று தேவாரத் திருமுறை கள் எமக்குக் கிடைத்தனவென்றால், அவற் றையும் தில்லையிலிருந்து பெற்றுத் தந்தவர் நம்பியாண்டார் நம்பியேயாவர்.

இத்துணை பெருமைக்கும் சிறப்புக்கு முரிய நம்பியாண்டார் நம்பி, தமிழ் நாட்டிலே, சோழ மண்டலத்திலுள்ள திருநாரையூரில், அந்தணர் குலத்தில் தோன்றினார். அவ்வூரில் பொல்லாப் பிள்ளையார் கோயில் கொண்டு அருளியிருந்தார். திருநாரையூர்ப் பிள்ளையார் தான்தோன்றீஸ்வரர். மூலஸ்தானத்துப் பிள் ளையார் விக்கிரகம், தாமாகத் தோன்றியது. அது உளி கொண்டு பொழியப்பட்டதல்ல. உளி யால் பொள்ளப்படாத புட்கப்படாத அதாவது பொழியப்படாததால், பொள்ளாப் பிள்ளையார் எனும் பெயர் பெற்றிருக்க வேண்டும். பொள் ளாப் பிள்ளையார் கால ஓட்டத்தில் பொல் லாப் பிள்ளையார் என மாறியிருக்க வேண் டும். பொல்லாப் பிள்ளையார் என்றால் பொல் லாத பிள்ளையார் என்று அர்த்தமாகிவிடும். பிள்ளையார் பொல்லாதவராக இருக்க முடியாதல்லவா? அவர் கருணாமூர்த்தி. நம்பி யாண்டார் நம்பியின் தந்தையார் தினமும், இப்பிள்ளையாருக்குப் பூசை செய்து வந்தார். ஒருநாள் அவர் வெளியூர் சென்று வரவேண்டி இருந்தது. அப்பொழுது பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் சிறுவனாக நம்பியாண்டார் நம்பி இருந்தார். பிள்ளையாருக்கு பூசை செய் யும் பொறுப்பைத் தாம் திரும்பி வரும்வரை, மகனிடம் தந்தையார் ஒப்படைத்திருந்தார்.

தந்தையின் சொல்லை ஏற்று, நம்பி யாண்டார் நம்பி, பிள்ளையாருக்குப் பூசை வழிபாடுகளைச் செய்து, நிவேதனம் படைத்து நைவேத்தியம் செய்தார். சிறிது நேரம் தாம தித்துப் பார்த்தார். ஆனால் பிள்ளையார், தாம் படைத்த அமுதினை உண்ணவில்லை. சிறிய பையன்தானே, தந்தையார் படைக்கும் அமுதினை உண்ணும் பிள்ளையார் தான் நிவேதித்த அமுதினை உண்ணாமை கண்டு வருந்தினார். தந்தை படைக்கும் அமுதைப் பிள்ளையார் உண்பதாக, நம்பியாண்டார் நம்பி நினைத்ததில் தவறில்லை. ஏனென்றால், தந்தையார் படைத்த நிவேதனத்தை ஒரு போதும் வீட்டுக்குக் கொண்டு சென்று கொடுத்ததில்லை.

தாம் படைத்த நிவேதனத்தை உண் ணும்படி, நம்பியாண்டார் நம்பி பிள்ளை யாரைத் துதித்தார். கெஞ்சி வேண்டுதல் செய்தார். நெடுநேரம் ஆயிற்று. பிள்ளையார் உண்ணவில்லை. தம்முடைய பூசை வழிபாட் டில் ஏதோ தவறு நேர்ந்திருக்க வேண்டும். அதனால்த்தான் தாம் படைத்த நிவேதனத்தை ஏற்கப் பிள்ளையார் மறுக்கிறார் போலும், என்று அந்தத் தூய்மையான பிஞ்சுமனம் எண்ணி, வருந்தியது. நம்பியாண்டார் நம்பி, தனது தவறுக்குப் பரிகாரமாக அங்கிருந்த

*எந்த வேலையானாலும் அதனுடன் ஒன்றிச் செய்தால் மட்டுமே பயன் விளையும்.*

கல்லில் தன் தலையை மோதிக்கொள்ள முயன்றார். அப்பொழுது, நம்பியின் உண்மை அன்பை மெச்சி, அவரின் செயலைத் தடுத்து பிள்ளையார் நிவேதனத்தை உண்டு அருளி னார். "அன்பிற்குமுண்டோ அடைக்குந் தாழ்" என்பதன் உண்மை புரிகிறதல்லவா.

நம்பியாண்டார் நம்பி, பிள்ளையார், தமது வேண்டுதலை ஏற்று, அமுதை உண்ட மையைக் கண்டு அளப்பிலா உவகை எய்தி னார். விநாயகப் பெருமானையே தமக்குக் கல்வி கற்பிக்கும்படி வேண்டிக் கொண்டு அவரிடமே கல்வி கற்றார்.

இந்த அற்புதம் உலகெங்கும் பரவி யது. சோழ நாட்டு மன்னன் இராஜராஜ சோழ னுக்கும் இந்த அற்புதச் செய்தி எட்டியது. தேங்காய், பழம் முதலான நிவேதனப் பொருட்களுடன் திருநாரையூருக்கு மன்னன் வந்தான். அவற்றையெல்லாம் பிள்ளையார் முன் படைக்குமாறு நம்பியாண்டார் நம்பி யிடம் வேண்டினான். நம்பியும் அவற்றைப் படைத்து வழிபாடு செய்தார். பிள்ளையாரும் அவற்றை உண்டு முடித்தார். எல்லோரும் மன்னன் உட்பட நம்பியாண்டார் நம்பியின் பக்திப் பெருமையை வியந்து அவரை வணங்கினார்கள்.

இராஜராஜ சோழன், நம்பியாண்டார் நம்பியைக் கொண்டு தில்லையிலே தேவாரத் திருமுறைகளைத் தேடி எடுப்பித்தான். திரு முறைகள் பன்னிரண்டில், பதினொன்றை நம்பி தொகுத்து அளிக்கச் செய்தான். அறுபத்து மூன்று நாயன்மார்களின் வரலாறுகளைத் "திருத்தொண்டர் திருவந்தாதி" என்னும் நூலின்மூலம் நம்பியாண்டார் நம்பி நமக்குத் தெரியப்படுத்தினார். சேக்கிழார் பெரியபுராணம் பாடுவதற்கு இந்நூல் துணையாக விளங்கி யது.

இவ்வாறு சைவசமய வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்புச் செய்த நம்பியாண்டார் நம்பியை நினைவு கூர்வதும் வழிபடுவதும் சைவர்களின் கடமையாகும்.

## தற்பெருமை

சாது ஒருவர் நீண்ட தவம் மேற்கொண்டு சித்திகள் பலவற்றைப் பெற்றார். இதனால் அவருக்கு தற்பெருமை மிகவும் அதிகமானது. அதைத்தவிர, மற்ற எல்லா நல்ல குணங்களும் அவரிடம் இருந்ததால், அவரது தற்பெருமையை நீக்கி, அவரை நல்வழிப்படுத்த நினைத்தார் சர்வேஸ்வரன். ஒரு சன்னியாசிபோல் வேடமிட்டுக் கொண்டு சாதுவைச் சந்தித்தார். சாதுவும் வரவேற்று உபசரித்தார். அந்தச் சமயத்தில், அவர்கள் இருந்த இடத்தின் வழியாக யானை ஒன்று சென்று கொண்டிருந்தது. உடனே சன்னியாசி, "இந்த யானையை உங்களால் கொல்ல முடியுமா?" எனக் கேட்டார். சாதுவும் அந்த யானையைக் கொன்றார். சன்னியாசி, சாதுவின் சக்தியைப் பாராட்டி புகழ்ந்தார். சாது புளகாங்கிதம் அடைந்தார். தனது மகிமையைப் பற்றிப் பெருமைப்பட்டுக் கொண்டார். சன்னியாசி மறுபடியும், "செத்த யானையைப் பிழைக்க வைக்க முடியுமா?" என்றார். சாதுவும் செத்த யானையைப் பிழைக்க வைத்தார். மீண்டும் அவரது மகிமையைப் பாராட்டிய சர்வேஸ்வரன், "இதெல்லாம் சரிதான். ஆனால், இந்தச் செயலைச் செய்து நேரத்தை வீணடித்தீர்களே தவிர, ஆண்டவனை இதன்மூலம் தாங்கள் அணுகவில்லையே" என்றுகூறி மறைந்தார் உண்மையை உணர்ந்தார் சாது. சாதுவுக்கு இருந்த தற்பெருமை விலகியது.

-பக்தி-

ஒருவர் இலட்சியத்தில் கொண்டிருக்கும் உறுதியே, அவரது வெற்றியின் ரகசியம்.

(தொடர்ச்சி...)

# உமாபதி சிவம் அருளிய திருவருட்பயன்

## (விரிவான பொருளுரையும் தெளிவுரையும்)



முனைவர் ஆ. ஆனந்தராசன்

### 41. வெளிவந்து நிற்கின்ற அருள் தலைவன்

அறியாமை உள்நின்று அளித்ததே காணும்
குறியாகி நீங்காத கோ.

**பொருள்:**

உயிர் பக்குவம் உறாதநிலையில் இறைவன் அவ்வுயிரின் உள்ளாக மறைந்து நின்று அவ்வுயிர் அறியாதபடி அதன் அறிவைச் சிறிது சிறிதாக வளர்த்து வருவான். அவ்வுயிர் உண்மையை உணர்ந்து கொள்ளும் பக்குவம் எய்தியபொழுது அவ்விறைவனே கண்ணால் காணும் வடிவினையுடைய ஞானாசிரியனாய்த் தோன்றி வந்து அப்பக்குவ ஆன்மாவுக்குத் திருவருளைத் தெளிய உணர்த்துவான்.

**சொற்பொருள்:**

அறியாமை- (பக்குவம் வராத காலத்தில்) சிறிதும் அறிய முடியாதபடி, உள்நின்று- உயிர்க்குயிராய் உள்ளே மறைந்து நின்று, அளித்ததே- அறிவை வளர்த்து வந்த அப் பரம்பொருளே, (பக்குவம் உற்ற இப்பொழுது) காணும் குறியாகி- கண்ணால் காணத்தக்க வடிவுடன் தோன்றிவந்து, நீங்காத- நீங்காமல் உடனாய் நின்று திருவருளைத் தெளிய உணர்த்துகிற, கோ- ஞானாசிரியனாகிய தலைவன் ஆவான்.

**விளக்கம்:**

ஞானத்தை ஒருவர் பெறவேண்டுமாயின் அதற்குரிய பக்குவத்தை அவர் முதலில் பெற வேண்டும். பக்குவம் என்பது ஞானத்தைப் பெறுதற்குத் தகுந்த அறிவு நிலையேயாகும்.

ஐந்து வயதுக் குழந்தைக்குத் திருக்குறளைச் சொல்லித்தர முடியாது. அதை வாங்கிக் கொள்வதற்கேற்ற அறிவுத்திறன் அ∴தாவது பக்குவம் அக்குழந்தைக்கு அப்பொழுது இல்லை. எழுத்துக் கூட்டிப் படிக்கின்ற அளவுக்குத்தான் அதன் அறிவு நிலை உள்ளது. அதன் அறிவு நிலை படிப்படியாக வளர்ந்த பிற்பாடுதான் நுண்ணிய நூல்களைக் கற்க முடிகின்றது.

மாணாக்கர் ஒரே திருக்குறளைத்தான் கீழ் வகுப்பிலும் பயில்கின்றனர்; இளங்கலை வகுப்பிலும் பயில்கின்றனர்; முதுகலை வகுப்பிலும் பயில்கின்றனர். மேல் மேல் வகுப்புகளில்

*செல்வர்களின் ஆடம்பர வாழ்க்கையைக் கண்டு மற்றவர்கள் ஏமாந்துபோகக் கூடாது.*

செல்லச் செல்ல, திருக்குறளின் பொருள் மேல் மேல் விளக்கம் அடைகிறது. அதனை நுணுகி உணர முடிகிறது. மாணாக்கரின் அறிவுநிலை படிப்படியாக நுணுகிச் செல்கிறது என்பதையே இது காட்டுகிறது. இந்த அறிவு நுணுக்கமே பக்குவம் எனப்படுவது.

உலகியற் கல்விக்கே தகுதி வேண்டுமானால் மெய்ப்பொருளை உணர்தலாகிய ஞானத்தைப் பெறுதற்கு எத்துணைப் பக்குவம் வேண்டும்!

உயிரின் அறிவை அறியாமையுட்படுத்தி மயங்கச் செய்வது ஆணவமலம். ஆணவ மலம் வன்மையாய் உள்ள வரையில் அஃது உயிரறிவை நுணுகிச் செல்லவிடாது, பருப்பொருளாகிய உலகத்தையே நோக்கும்படி செய்யும். அந்த ஆணவ மலம் தேய்ந்து தேய்ந்து வரும்போதுதான் உயிரறிவு படிப்படியே அறியாமையிலிருந்து விடுபடும். அதிலிருந்து விடுபட விடுபட, உயிரறிவு நுணுகி நுணுகிச் செல்லும்; நனிநுண் பொருளாகிய இறைவனை உணரும் செவ்வியை எய்தும்; அந்நிலையில் உலகத்தை நோக்காது இறைவனது திருவருளை நோக்கத் தலைப்படும். இந்நிலையே "சக்திநிபாதம்" எனப்படும். இதுவே ஞானத்தைப் பெறுவதற்குரிய பக்குவநிலையாகும்.

இதுகாறும் உயிர்க்குயிராய் மறைந்து நின்று செயற்பட்டு ஆணவ மலத்தைத் தேயும்படி செய்து உயிரறிவை வளர்த்து வந்த இறைவனே இப்பொழுது இவ்வுயிரின் பக்குவ நிலையைப் பார்த்தருளி அதற்கு மெய்யுணர்வை அளித்தற்கு ஞானாசிரியனாய் வெளிப்பட்டு வருவான் என்பது இச்செய்யுளில் கூறப்பட்டது.

உயிரின் அறிவு பக்குவம் எய்தாதபொழுது சிவன் அதற்கு வினைக்கு ஈடானவற்றையே உணர்த்துவான் என்பதும், பக்குவம் எய்தியபொழுது தன்னையே உணர்த்தி நிற்பான் என்பதும் அறியத்தகும்.

## 42. உள்ளிருந்து காண்பவன்

அகத்துறு நோய்க்கு உள்ளினர் அன்றி அதனைச்
சகத்தவரும் காண்பரோ தான்.

**பொருள்:**

வீட்டில் ஒருவர் நோயுற்றால் அவரது நோயின் தன்மையை அவ்வீட்டினுள் உள்ளவரே அறிவார். வெளியில் உள்ள பிறர் அதனை அறிவாரோ?அறிய மாட்டார்.

அதுபோல, உயிரிடத்துப் பொருந்திய அறியாமையாகிய நோயினது நிலையை உயிரினுள் இருப்பவனாகிய இறைவனே அறியவல்லான். உலகத்தவராகிய பிறர் அதனை எங்ஙனம் அறிதல் இயலும்?

**சொற்பொருள்:**

அகத்து- வீட்டில் உள்ளார்க்கு, உறு- உற்ற, நோய்க்கு- நோயினது நிலையை, உள்ளினர் அன்றி- அவ்வீட்டினுள் இருப்பவர் அறிவரேயன்றி, அதனை- அதனை, சகத்தவரும்- வெளியில் உள்ள பிறர், காண்பரோ- அறிவரோ? அறிய மாட்டார். (அதுபோல) அகத்து- உயிரின் அகத்து, உறு- பொருந்திய, நோய்க்கு- அறியாமையாகிய நோயினது நிலையை,

பிறருக்கு உதவியாக வாழும் வாழ்க்கையே மேம்பட்ட வாழ்க்கை.

உள்ளினர் அன்றி- உயிரினுள் நிற்பவனாகிய இறைவனே அறிவான். அவனையன்றி, அதனை- அவ் அறியாமை நிலையை, சகத்தவரும்- உலகத்தவராகிய பிறர், காண்பரோ- அறிய வல்லவரோ? அறியார்.

**விளக்கம்:**

அகம் என்பது வீடு. "உள்ளினர்" என்பது அவ்வீட்டினுள் உடன் உறைபவரைக் குறிக்கும். உவமைக்கு ஏற்ப, இச்சொற்களுக்கு இவ்வாறு பொருள்கொள்ள வேண்டும்.

இனி, உவமேயப் பொருளுக்கு ஏற்ப, அகம் என்பதற்கு உயிர் எனவும், உள்ளினர் என்பதற்கு உயிரின் உள்ளே உறைபவராகிய இறைவன் எனவும் பொருள்கொள்ள வேண்டும்.

பெரிய பதவியில் உள்ள அதிகாரி ஒருவர். அவருக்கு அன்று தாங்க முடியாத தலை நோவு. அதனால், அலுவலகத்திற்குச் செல்லவில்லை. அவரது மனைவிக்கு மட்டும்தான் நோய்பற்றித் தெரியும். அவள் தன் கணவருக்கு அருகில் இருந்து வேண்டும் உதவிகளைச் செய்து கொண்டிருந்தாள்; நோய்க்கு உரிய மருந்துகளைக் கொடுத்தாள்; அதற்கேற்ற முறையில் உணவு செய்து கொடுத்தாள்.

இதற்கிடையில் வெளியே பல இடங்களிலிருந்து பல மனிதர்கள் அவரைத் தேடி வந்தார்கள். பரிந்துரைக் கடிதம் கேட்டுச் சிலர் வந்தார்கள். தமது குறைகளை முறையீடு செய்யச் சிலர் வந்தார்கள். அவரது அலுவலகப் பணி தொடர்பாகச் சிலர் வந்தார்கள். ஆனால் அவர்களுக்கெல்லாம் அவரது நோய் நிலைபற்றித் தெரியாது. வெளியிலிருந்து ஒரு காரியமாக வந்தனர்; பேசினர்; சென்றனர். அவ்வளவுதான். அவரது நோய்நிலை பற்றித் தெரிந்தவர் ஒருவர்தான். அந்த வீட்டில் உடனிருந்த அவரது துணைவியார்தான் அந்த ஒருவர்.

இதுவரை சொன்னதை உவமையாகக் கொண்டு, செய்யுளின் பொருளுக்கு வருவோம். உயிரை ஒரு பெருநோய் பிடித்து வருத்துகிறது. அதுதான் மலமாகிய நோய். உயிரில் உடனிருப்பவனாகிய இறைவன்தான் அந்த நோயின் தன்மையை அறிவான். அந்த நோய்க்கு ஏற்றவாறு அவன் வினைப் போகம் ஆகிய மருந்தினை ஊட்டி வருகிறான். இவற்றால் மலமாகிய பிணி சிறிது சிறிதாகத் தேய்ந்து வரும்.

அறியாமை தேயாதிருக்கும்பொழுது உயிருக்கு அருளின்மீது நோக்கம் செல்லாது. உலக நாட்டமே மிகுந்திருக்கும். அந்த நிலையில் அவ்வுயிருக்கு அருளை உணர்த்தி என்ன பயன்? பசி ஏற்படாதவனுக்கு உணவை வழங்கினால் அது அவனுக்குப் பயன்படுமா? தாகம் எடுக்காதவனுக்குத் தண்ணீர் தரலாமா? அதுபோல, அருள் வேட்கையில்லாதவர்க்கு அருளை உணர்த்திப் பயனில்லை. அது பற்றியே அறியாமை தேயாதபொழுது அருளை உணர்த்துவது குற்றம் என்று சொல்லப்படுகிறது.

இனி, அறியாமை தேய்ந்த நிலைதான் பக்குவம் எனப்படும். பக்குவம் உடையவர் அருள் ஒன்றையே நாடி நிற்பர். அப்படிப்பட்டவர்க்கு அருளை உணர்த்துவது இன்றியமையாதது. அதுபற்றியே அறியாமை தேய்ந்தபின் அவர்க்கு அருளை உணர்த்தாதிருப்பதும் குற்றம் என்று சொல்லப்படுகிறது.

*நடுநிலையுடன் செலவு செய்வது நல்வாழ்வின் ஒரு பகுதியாகும்.*

அறியாமை தேய்தல் என்பது அகத்தின்கண் நிகழ்கின்ற நிகழ்ச்சியாகும். அதனை வெளியில் உள்ள பிரமாந்தர் அறிதல் இயலாது. உயிர்க்கு உயிராய் உள் நிற்கின்ற முதல்வனே அறியாமை தேய்ந்த நிலையை உணர்வான். உணர்ந்து, ஞானாசிரியனாக வந்து அருளை உணர்த்துவான் என்பது இச்செய்யுளில் கூறப்பட்டது.

**மற்றொரு பொருள்:**

இச்செய்யுளுக்கு இன்னொரு வகையிலும் பொருள் கூறலாம்.

உடம்பிற்கு வந்த நோயின் தன்மையை அந்த உடம்பில் உறைகின்ற உயிர் அறியுமேயன்றி, அதன் தாய் தந்தையர் உற்றார் உறவினர் முதலிய பிறர் அறியமாட்டார்.

எடுத்துக்காட்டுக்கு ஒன்று கூறலாம். ஒருவருக்கு அடிவயிற்றில் குடல் இறங்கியிருக்கிறது. அந்த இடத்தில் வீக்கம் இருக்கிறது. பல ஆண்டுகளாகியும் வலி தெரிவதில்லை. அதனால் அவரும் அதைப் பொருட்படுத்தாமல் விட்டு விடுகிறார்; யாரிடமும் தெரிவிக்காமல் இருந்து விடுகிறார்.

அவருடம்பில் குடலிறக்கம் இருக்கிறது என்பதை அவர் மட்டுமே அறிவார். உலகத்தார் அறியமாட்டார். அவருக்கு வலியும் வேதனையும் ஏற்பட்டு அறுவை மருத்துவம் செய்தே ஆக வேண்டும் என்ற நிலை வரும்போது, அந்த நிலையை உணர்ந்து அவர் அதனைப் பிறருக்கு எடுத்துச் சொல்லும்போதே மற்றவர்களும் அதனை அறியும்படியாக நேர்கிறது. இதுபோலத் தமது உடம்பில் உள்ள நோய்களைப் பற்றி ஏதும் சொல்லாமல் வாழ்வோர் பலர். இதனையே "அகத்துறு நோயை உள்ளினர் அறிவாரேயன்றிச் சகத்தவர் அறிவாரோ" என்று இச்செய்யுள் கூறுகிறது. அகம் என்பது உடம்பைக் குறிக்கும். உள்ளினர் என்பது உடம்பில் உறையும் உயிரைக் குறிக்கும்.

உடம்பில் உற்ற நோயின் நிலையை அவ்வுடம்பில் வாழும் உயிரே அறியமுடியும். அதுபோல, உயிரில் உற்ற ஆணவ மலமாகிய நோயின் தன்மையை அவ்வுயிரில் உறைபவராகிய இறைவனே அறிய வல்லார். உலகத்தார் அறியமாட்டார். இப்படிப் பொருள் கூறுதற்கும் இச்செய்யுள் இடம் தந்து நிற்கிறது.

(தொடரும்...

## குருபூஜை தினங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| யூன் | 08 | வைகாசி | 26 | புதன் | நமிநந்தியடிகள் |
| | | | | | சேக்கிழார் |
| யூலை | 08 | ஆனி | 24 | வெள்ளி | மாணிக்கவாசகர் |
| ஆகஸ்ட் | 09 | ஆடி | 25 | செவ்வாய் | மயில்வாகனம் சுவாமிகள் |
| ஆகஸ்ட் | 10 | ஆடி | 26 | புதன் | சுந்தரமூர்த்தி நாயனார் |
| ஆகஸ்ட் | 16 | ஆடி | 32 | செவ்வாய் | பட்டினத்தடிகள் |

*தன்னைத் தானே கட்டுப்படுத்திக் கொள்வதைவிட மிகப்பெரிய வெற்றி வேறு இல்லை.*

# நினைவகலா குருக்களின் நினைவுகள்

– திரு பொ. சண்முகநாதன் அவர்கள் –

சிவத்தமிழ் வித்தகர், பண்டிதமணி, தத்துவ கலாநிதி, செந்தமிழ் ஞாயிறு சிவத் திரு க. வைத்தீசுவரக் குருக்கள் அவர்கள் 22.04.2015 அன்று தமது 99ஆவது அகவையில் சென்ற ஆண்டு மறைந்தது தமிழுக்கும் இந்து சமயத்திற்கும் ஏற்பட்ட ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். அவர் அறநெறி தவறாத அந்தணர் வழியில் க. கணபதீஸ்வரக் குருக்கள் - சிவயோகசுந்தராம்பாள் தம்பதியினருக்கு 22.09.1916இல் ஈழத்துச் சிதம்பரம் காரைநகரில் தோன்றியவர்.

அவரைப்பற்றி அதி. வண. கலாநிதி எஸ். ஜெபநேசன் அன்றொரு சமயம் குறிப்பிடுகையில் "குருக்கள் நாட்டின் தலைசிறந்த செல்வம். அவருடன் வாழ்கின்ற காரைநகர் மக்கள் பாக்கியசாலிகள் என்றார். பிற்காலத்தில் அந்த மூதறிஞர் கந்தரோடையில் வாழ்ந்து வந்ததனால் அந்தப்பாக்கியம் இங்குள்ள மக்களுக்கும் கிடைத்தது எமக்கெல்லாம் ஒரு வரப்பிரசாதம். அவர் ஒரு பழுத்த பழம் மட்டுமல்ல - பயன்தரும் மரமும்கூட.

அப்படி ஒரு பாக்கியம் அதற்கு முன்னரும் 1931-39 காலப்பகுதியிலும் கந்தரோடை மக்களுக்குக் கிடைத்தது குறிப்பிடத்தக்கது. அவர் தமது சகோதரியார் வீட்டில்- "சிற்பி" சிவசரவணபவன் வீட்டில் வாழ்ந்தவர். அப்பொழுதுதான் தென்கோவைப் பண்டிதர் ச. கந்தையாப்பிள்ளையும் கந்தரோடையில் அவர் வீட்டுக்கு முன்பாக வாழ்ந்து வந்தார்.

அவர் வித்தகம் கந்தையா- திருவாசகம் கந்தையா என்றெல்லாம் அழைக்கப் பெற்ற, சுன்னாகத்தின் பெரும் புலவர்களில் ஒருவர். அவர் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரின் மாணாக்கராக இருந்தவர். சுவாமி விபுலானந்தர், முத்தமிழ்ப்புலவர் மு. நல்லதம்பி, பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை என்போருக்குச் சிலகாலம் தமிழ் கற்பித்தவரும் கூட. "பண்டை நல்வினையால் இவருடன் எனக்குத் தொடர்பு ஏற்பட்டது" எனக் கூறிக் கொள்ளும் குருக்கள் ஐயா தமக்கு திருவாசகம் பற்றி "வித்தகர்" விளக்கமளித்தமையையும் நன்றியுடன் நினைவுகூரத் தவறுவதில்லை.

"வித்தகர் ஒவ்வொரு நாளும் மாலையில் சுன்னாகத்துக்குப் போய்வரும் வழக்கம் உடையவர். போகும்போதும் வரும்போதும் திருவாசகத்தைப் பற்றிய பேச்சுத்தான் நிகழும். சில சந்தர்ப்பங்களில், இவர் தம்மை மறந்த நிலையில் ஓர் இடத்தில் நின்று கொண்டு திருவாசகத்தைப் பற்றிச் சொல்லுவார். அந்த நேரத்தில் எங்களையும் சேர்த்துக் காண்பவர்கள் சிலர் இவர்களுக்குத் "தலையிற் பிழை" என்று சொன்னதுமுண்டு.

தமிழ்ப் பித்தராகத் திகழ்ந்த குருக்கள் ஐயா, ஆரம்பக்கல்வியை காரைநகர் வலந்தலை அ.மி. பாடசாலையில் மேற்கொண்டதுடன், காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலை, காரைநகர் இந்துக்கல்லூரி, அளவெட்டி நாகபூஷணி வித்தியாசாலை, சுன்னாகம் பிராசீன பாடசாலை ஆகியவைகளிலும் கல்வி பெற்றார். பரமேசுவரா பண்டித ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தமிழ் பண்டித பரீட்சையிலும், பயிற்றப்பட்ட ஆசிரிய தராதரப் பரீட்சையிலும் சித்தி பெற்றவர். அத்தனை சிறப்புக்களுடன் சான்றோராகத் திகழ்ந்த குருக்கள் அத்தகைய சான்றோர்களான தென்கோவைப் பண்டிதர் ச. கந்தையாப்பிள்ளையிடமும் பண்டிதர் ச. பஞ்சாட்சரக் குருக்கள், வேதவிசாரத் சிதம்பர சாஸ்திரிகள்,

மகாவித்துவான் சி. கணேசையா போன்றவர் களிடமும் படிக்கின்ற பெருவாய்ப்பைப் பெற்ற வர்.

1935ஆம் ஆண்டு சுன்னாகம் பிரா சீனப் பாடசாலையில் படிக்கும் நேரம் வித்து வான் சி. கணேசையா அவருக்கு ஆசிரியராக வாய்த்தார். பாடசாலைகள் இல்லாத நாட் களில் வறுத்தலை விளானிலுள்ள ஐயரவர் களின் வீட்டுக்கே சென்று திருவாசகத்தின் சில பகுதிகளைக் கற்றுத் தெளிவுபெற்றதை ஐயா அவர்கள் நன்றியுடன் சொல்லுவார். குருக்கள் அவர்கள் 1940இல் கொழும்பு விவேகானந்தா வித்தியாசாலையில் தமது ஆசிரியப் பணியைத் தொடங்கி, வேறு சில பாடசாலைகளிலும் பணியாற்றி 1971இல் ஓய்வு பெற்றவர். விவேகானந்தாவில் பணி ஆற்றிய காலத்தில் அகில இலங்கை சைவ சமயப் பரீட்சைக் குழுவின் உறுப்பினராகி, அந்தச் சபையின் சார்பில் அவர் ஆன்மிகப் பணி ஒன்றையும் மேற்கொண்டார். அப்போது ஞாயிற்றுக்கிழமை தோறும் வெலிக்கடைச் சிறைச்சாலைக்குச் சென்று அங்குள்ள தமிழ்க் கைதிகளுக்கு சமயச் சொற்பொழி வாற்றி அவர்களின் தூய வாழ்வுக்குப் பேருதவி புரிந்தார்.

அந்தக்காலப் பகுதியில் இவர் "தினகரன்" பத்திரிகையின் ஆசிரியர் குழு விலே பகுதிநேர உதவி ஆசிரியராகப் பல வருடங்கள் பணியாற்றியுள்ளார். பரந்தன் பகுதியில் ஆசிரியப் பணிபுரிந்த காலத்தில் வீரகேசரியின் கரைச்சி நிருபராகவும் இருந் திருக்கிறார். இவைகளால் ஐயா அவர்கள் நவீன பத்திரிகைத் தொடர்பு அனுபவங்களும் வாய்க்கப் பெற்றிருந்தார்.

மக்களின் துயரங்களை வெளிப் படுத்துவதில் ஆர்வம் காட்டிய வைத்தீசுவரக் குருக்கள் ஆசிரியத் தொழிலோடு பத்திரிகை- ஊடகத்துறையிலும் நிறைந்த ஆர்வம் காட்டி யவர். தமிழ் மக்களின் தொன்மைச் சிறப்புக் களையும் பாரம்பரிய மேன்மைகளையும் கட்டுரைகளாக "உதயன்", "சஞ்சீவி" பத்திரி கைகளில் எழுதியவர். தமது முதுமையை யும் பொருட்படுத்தாது தள்ளாத வயதிலும் தமிழ் மக்களின் உரிமைகளை நிலைநாட்ட வேண்டிய தேவை கருதி நிறையவே எழுதி னார். தீவக மக்களின் துன்ப, துயரங்களை நேரிலே கண்டவர் என்ற வகையில் அவரது தகவல்கள் மக்களுக்கு நடந்த கொடுமை களைத் தத்ரூபமான செய்திகளாக்கி வெளிப் படுத்த தமக்கு உதவியமை பற்றி, உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் பல வேளை களில் எனக்குக் கூறியுள்ளார். தமிழ்மொழி, சமயம் ஆகிய துறைகளிலும் காத்திரமான பயன்தரும் பல கட்டுரைகளை வடித்தவர். பத்திரிகைகள் செய்கின்ற பணிகளையும் அவை செய்ய வேண்டிய பணிகளையும் அடிக்கடி அவர் சொல்லுவார்.

குருக்கள் அவர்கள் ஈழத்துச் சிதம்பர புராணச் சுருக்கம், பாரத இதிகாசத்தில் வரும் பாத்திரங்களின் குணவியல்பு, பெரியபுராணம்- கிருநகரப்படல உரை, காரைநகரில் சைவ சமய வளர்ச்சி போன்ற பல நூல்களின் ஆசிரியராவார். அத்துடன் பல நூல்களின் பதிப்பாசிரியருமாவார். அவரின் பதிப்புப் பணி மகத்துவத்தைப் பற்றி நாம் சொல்லுவதை விட புலவர்மணி சோ. இளமுருகனார் ஐயா வுக்கு அப்போது தாமே கைப்பட எழுதிய திருமுகம்மூலம் காண்போம்.

"பேரன்பு சான்ற அந்தணப் பெருந் தகை, பண்டிதர் சிவத்திரு வைத்தீசுவரக் குருக்கள் ஐயாவின் திருவடிக் கமலங்களை தலைமிசைச் சூடிக்கொண்டு எழுதும் திரு முகம்.

ஈழத்துச் சிதம்பர புராணத்தை எழுது வதற்கு நீங்கள் எடுத்த முயற்சியிலும், அதனை அழகுற அச்சிடுவதற்கு எடுத்த

*ஒருவனிடம் தூக்கமும் துக்கமும் குறையும்போது அவன் மேதை ஆகின்றான்.*

முயற்சி பல நூறு கோடி பெரிது. அதனைக் காட்டிலும் எம்மை விளம்பரம் செய்ய ஓராண்டுக் காலமாய் எடுத்த முயற்சி ஆயிரம் கோடி பெரிது. அதனைக் காட்டிலும் பாராட்டு விழா எடுத்ததற்குப் பல திங்கள் எடுத்த முயற்சி பத்தாயிரம் கோடி பெரிது.

"இத்தனைக்கும் ஒன்றுக்கும் பற்றாத சிறியேம் என்ன கைமாறு செய்யப்போகிறோமோ என்று அஞ்சுகின்றோம்! பெரிய சாதனை! அறிவும் சாதுரியமும் ஆற்றலும் உடையவர்கள் இந்த உலகில் எல்லாம் செய்வர் என்பதையே தங்களிடம் இருந்து படித்துக் கொண்டோம்".

இப்படியாக வசிட்டர் வாயால் பிரம்மரீ விருது பெற்றவர் எங்கள் ஐயா அவர்கள். பதிப்புப் பணியில் சிகரமாக பின்னர் வெளிவந்த அவரின் "திண்ணபுர அந்தாதி" நூலைக் குறிப்பிடலாம். கார்த்திகேயப் புலவரது ஆக்கங்களில் தலை சிறந்ததாகக் கருதப்பெறும் இந்த ஆக்கம் காரைநகர் "ஈழத்துச் சிதம்பரம்" ஆகிய திண்ணபுரத்தில் கோயில் கொண்டருளிய அருள்மிகு சௌந்தராம்பிகை உடனுறையும் சுந்தரேசப் பெருமான்மீது பாடியதாகும்.

ஏற்கனவே இந்த நூலை முதலில் பதிப்பித்த பெருமையும் இவரையே சாரும். இந்த நூலின் மூன்றாம் பதிப்பினை கனடா சைவசித்தாந்த மன்றத் தலைவர் (அன்புநெறி ஆசிரியர்) தி. விசுவலிங்கம் மூலமாக வெளியிட வைத்திருக்கின்றார். அவரின் அந்தப் பணிக்கு மேலும் பெருமை சேர்க்கும் வகையில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் பெரும்தொகை கொடுத்து அந்த நூற் பிரதிகளை அப்பொழுது கொள்முதல் செய்ததும் குறிப்பிடத்தக்கது.

காரைநகரில் 25.12.2014இல் நடைபெற்ற மணிவாசகர் சபையின் பவளவிழா மலர் வெளியீட்டு விழாவில் குருக்கள் ஐயா என்றுமில்லாத உற்சாகத்துடனும் பூரிப்புடனும் கலந்துகொண்டமை நினைவுக்கு வருகிறது. (அதற்குப் பின்னர் தமக்கு இயலாமற் போகும் என்று நினைத்தாரோ என்னவோ) அந்த நிகழ்வு மலர் வெளியீட்டு விழா என்பதுடன் மணிவாசகர் சபையின் நிறுவுனரான குருக்களையும் அவரின் பல்துறைப் பணிகளையும் பாராட்டிக் கௌரவிக்கும் விழாவாகவும் அமைந்தது சிறப்புக்குரியது.

வாழ்க அவர் புகழ்! வாழும் அவர் புகழ்!

**ஆன்மிகச் சிந்தனை**

நல்ல காரியங்கள் செய்வதன்மூலம் உள்ளத்தைத் தூய்மைப்படுத்திக்கொள்ள வேண்டும். கர்மானுஷ்டங்களில் வழுவாமல் ஈடுபட்டிருக்கும் ஒருவனுக்கு எந்தப் பாவத்தையும் சிந்திக்கவோ, எந்தத் தீங்கையும் செய்யவோ காலம் இராது. விருப்பமும் எழாது. இந்தத் தர்மங்களே கடவுளோடு ஆன்மிகத் தொடர்பையும் ஏற்படுத்துகின்றன. நாம் செய்யும் காரியங்கள் எல்லாவற்றையும் கடவுளுக்கு அர்ப்பணமாகக் கருதிச் செய்யவேண்டும். அறிவுள்ள எந்த ஒரு மனிதனும் மிகச் சிறந்த ஒன்றைத் தவிர வேறு ஒன்றையும் இறைவனுக்கு அளிக்கமாட்டான். ஆகையால் நமது உலக கடமைகள், ஆன்மிக பொறுப்புக்கள் இரண்டையுமே மிகச் சிறந்த முறையில் ஆற்றியாக வேண்டும். இப்படிப் பிரதிபலன் கருதாத பக்தி மனப்பான்மையுடன் செயற்பட்டால், நிச்சயமாகக் கர்மங்களைச் செய்யும் பக்குவம் தானே வந்துவிடும். அதுவே பக்தி மார்க்கத்துக்கு வழிகாட்டும்.

*உழைப்பு சுறுசுறுப்பானது. அது வசதிகளையும் நன்மதிப்பையும் கொண்டுவந்து தருகின்றது.*

# பகவத்கீதையின் உலகம் தழுவிய பரந்த நோக்கு

(தொடர்ச்சி...

– சுவாமி கிருஷ்ணானந்தா –

தமிழில்: திரு பூ. சோதிநாதன் அவர்கள் –

## அத்தியாயம் – 03

## உண்மையான துறவு மனப்பான்மை

### 11. சமூக உறவும் மனமும்.

ஒரு நகரத்திலோ, ஒரு ஆச்சிரமத்திலோ, ஒரு வீட்டிலோ, ஒரு குடும்பத்திலோதான் நாம் ஒரு சமூகச் சூழ்நிலையில் வாழுகின்றோம். இந்த வகையான சூழ்நிலையில் நாம் வாழும்போது, அது மனித சூழ்நிலையாகவும், சமூகச் சூழ்நிலையாகவும் இருப்பதனால் நாம் எமது மனதைப் பூரணமாக அறியமுடியாதவர்களாக இருக்கின்றோம். அது நீரில் இருக்கும் மீன் எல்லாம் நன்றாக அமைந்துள்ளது எனக் கருதுவதைப் போன்றதாகும். எனவே மீனை நீருக்கு வெளியே கொண்டுவந்து பின்னர் அதன் விதியைப் பார்க்கவேண்டும். சில காலத்துக்குச் சமூக உறவுகளில் இருந்து நாம் எம்மை விலக்கிக்கொள்ள வேண்டும். மக்கள் மத்தியில் இருப்பதையும், பொருள்களைக் கொள்வனவு செய்யக் கடைக்குச் செல்வதையும், நகரத்தில் வசிப்பதையும் குடும்ப உறவுகளோடு கூடித் தொடர்பு கொள்வதையும், எவருடன் பேசுவதையும், எவரது முகத்தையேனும் பார்ப்பதையும் நாம் சில மாதங்களுக்குத் தவிர்க்க வேண்டும்.

சமூகத்தில் இருந்ததைவிட அப்போது நாம் எம்மைப்பற்றி நன்றாக அறியக்கூடிய வர்களாக ஆவோம். அப்பொழுது ஆரம்பக் கட்டங்களில் நாம் சற்று அமைதி இழந்தவர்களாக இருப்போம். நாம் இலகுவில் அறியமுடியாத காரணங்களுக்காக மகிழ்ச்சியற்றவர்களாக ஆவோம். மனிதன் அடிப்படையில் ஒரு சமூக விலங்காக இருப்பதனால் மீண்டும் எழுந்து சமூக உறவுகளில் கலந்துகொள்ள நாம் ஓடுவோம். தனிமனிதனது இந்த அம்சத்தைப் புறக்கணித்துவிட்டு அவனது உளவியலைத் தகுந்த முறையில் புரிந்துகொள்ள முடியாது.

### 12. அகமனதின் வெளிப்பாடே நடத்தை.

மனித ஆளுமைகளோடு தொடர்புபட்ட கவர்ச்சி, காழ்ப்பு, விருப்பு, வெறுப்பு என்பன எம்மோடு கூடப்பிறந்த விடயங்கள் ஆகும். இந்தச் சூழ்நிலைக்குள்ளேதான் நாம் பிறந்திருக்கின்றோம். எம்மைச் சுற்றியுள்ள மனிதர்களுக்குச் சார்பாகவும், எதிராகவும் நாம் சிலவற்றைக் கூறவேண்டியவர்களாக இருக்கின்றோம். அவர்களைப் பற்றி எம்மிடத்தில் சில அபிப்பிராயங்கள் உண்டு. அப்படிக் கூறும்போது எங்களைப் பற்றிய சில மதிப்பீடுகளையும் அவர்களுக்கு வழங்குகின்றோம். எம்மைச் சுற்றியுள்ள மனிதர்கள் தொடர்பாக எமது நடத்தைக்கான உந்துசக்தியாக அம்மதிப்பீடுகள் அமைகின்றன.

*அநீதி செய்வதிலிருந்து ஒருவனைத் தடுப்பதே நாம் அவனுக்குச் செய்யும் உதவியாகும்.*

மற்றைய மனிதர் தொடர்பான எமது மனப்பாங்கு அவர்களைப் பற்றிய புரிந்துணர்வின் விளைவாக ஏற்படுவதாகும். இந்த, இந்த வகையான அபிப்பிராயம் எம்மிடம் இருப்பதால், இந்த இந்த வகையான சூழ்நிலையில், இப்படி இப்படி நடந்து கொள்ளவேண்டும் என்ற முடிவுக்கு நாம் வருகின்றோம். வெளியே உள்ள மனிதர்களோடு இவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்ற இந்த விடயமே எமது நடத்தை ஆகும். அது எமது உளவியல் உணர்வு அல்லது அகமனதின் வெளிப்பாடு ஆகும். அந்த வெளிப்பாடே எமது நடத்தை ஆகும்.

**13 ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள்.**

பெரும்பாலும் இருவேறு திசைகளில் எம்மை இழுக்கின்ற விருப்பு, வெறுப்பு என்ற கயிறுகளினால் நாம் கட்டப்பட்டு இருக்கின்றோம். நாம் எமது விருப்பு, வெறுப்புக்களுக்குப் பின்னாலுள்ள ஒரு சுவையான விடயத்தையும் எமது எண்ணங்களோடு மற்றவர்களுக்கு வழங்குகின்றோம். அது என்னவெனில், விருப்பே வெறுப்பு என்பதையும், வெறுப்பே விருப்பு என்பதையும் எமது எண்ணங்களோடு சேர்த்துச் சில சமயங்களில் நாம் வழங்குகின்றோம். அவையிரண்டும் மனதின் இரண்டு வித்தியாசமான செயற்பாடுகள் அல்ல. அவை இரண்டும் ஒரு நோக்கின் இரட்டை மனப்பாங்குகள் ஆகும்.

ஒரு அல்லது ஒரு தொகுதி விடயம் தொடர்பாக மனம் விரும்புவது எதனைக் குறிக்கின்றது என்றால் அதேவேளை அது அல்லது அத்தொகுதி விடயங்கள் அல்லாத சூழ்நிலை அங்கே இல்லை என்பதே ஆகும். ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையைப் பொறுத்தவரையில் உள்ளது ஏனைய சூழ்நிலைகளைப் பொறுத்தவரையில் அங்கே இல்லை என்பதே அதன் அர்த்தமாகும். எனவே ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள்போல எமது விருப்பும் வெறுப்பும் அமைகின்றன. அதனால் ஒன்றில் இருந்தே மற்றதை இலகுவாக அறிந்துவிடலாம். ஆதலால் ஒன்று இல்லாமல் மற்றது இருக்க முடியாது. விருப்பு, வெறுப்பு என்ற திசைகளில் எம்முன் உள்ள சூழ்நிலைகளுக்கு இடையே ஒரு நிரந்தரப் பிணக்கு அல்லது ஒரு போராட்டம் நடந்துகொண்டு இருப்பதையே இது குறிக்கின்றது.

**14. பிரபஞ்ச நோக்கத்தைப் புரிந்துகொள்ளாமை.**

அருச்சுனனும் அப்படியான விருப்பு, வெறுப்புக்கள் உள்ள ஒரு மனிதனே ஆவான். மகாபாரதக் கதை முழுவதுமே பலவகை விருப்புக்கள், வெறுப்புக்கள் என்பவற்றின் மத்தியிலுள்ள பிணக்குகளின் ஒரு வர்ணனையே ஆகும். மகாபாரதம் பகவத்கீதை என்ற இரண்டும் இதிகாசச் சூழலுக்கு ஊடாக வாழ்க்கைப் படிப்பினைகளையும், ஒழுக்கங்களையும் பின்பற்றவேண்டும் என ஆன்மிகச் சாதகர்களுக்குப் போதிக்கின்றன. எமது காரண காரிய அறிவாற்றல், தெளிவு, பொது அறிவு, நாம் எம்மைப் புற உலகோடு இசைவுபடுத்துவது என்பன போதிய பலமில்லாததாக இருக்கின்றன.

பிரபஞ்ச ரீதியாக உள்ள சத்துவ, இராசத, தாமச ஆற்றல்களின் அகத் தூண்டுதலது வெளிப்பாடாக மட்டும் மனித உறவுகள் இருப்பதனால், பிணக்குச் சூழ்நிலை மிகச் சிறிய அளவில் கூட வந்தாலும் அந்தத் தெளிவும், அறிவும் இசைவுபடுத்தலும் எதிர் நிற்க

முடியாது சரிந்து விடுகின்றன. எமது சொந்த விருப்பு, வெறுப்புக்களுக்குப் பின்னால் கூட ஒரு பிரபஞ்ச நோக்கம் இருக்கின்றது என்பதே அதன் அர்த்தமாகும். நாம் விருப்பு, வெறுப்புக்களில் சிக்குவதற்குக் காரணம் எல்லாவித மனித சூழ்நிலைகளுக்கும் அடிப்படையான பிரபஞ்ச நோக்கத்தைப் புரிந்துகொள்ளாமையின் விளைவே ஆகும்.

**15. ஒரு பாரிய கணனி அமைப்பு.**

நாம் எப்பொழுதும் "எனக்கு ஒரு விருப்பம் உண்டு", "எனக்கு ஒரு வெறுப்பு உண்டு" என்று உணருகின்றோம். ஆனால் நாம் ஏன் எமக்கு அந்த விருப்பு வெறுப்பு உண்டு என்பதை அறிவதில்லை. ஏன் நாம் சிலவற்றை விரும்பவும், வேறு சிலவற்றை வெறுக்கவும் வேண்டும்? இதற்கு முற்றும் உணர்ச்சிகரமான பதிலைத் தவிரத் திருப்திகரமான ஒரு விடையை எம்மால் கொடுக்கமுடியாது. ஆனால் இந்த உலகம் உணர்ச்சிகளில் மட்டும்தான் சீவிக்கின்றது என்பதில்லை. உலகம் முற்றும் காரண காரிய அடிப்படையிலேயே அமைந்துள்ளது. பிரபஞ்சத்தின் செயற்பாட்டில் அதன் பகுதிகள் யாவும் விஞ்ஞான முறையில் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கின்றன. எமது அகத்தே உள்ள எண்ணங்களும் உணர்வுகளும், புறத்தே உள்ள நடத்தைகளும், மற்று எல்லாவித உறவுகளும் இந்தப் பிரபஞ்ச அமைப்புக்குள் நின்றே செயற்படுகின்றன.

அருச்சுனனது பிழை யாதெனில் அந்தப் பிரபஞ்சத்துக்குள் தனிமனிதனது பங்கைச் சரியான முறையில் ஆழமாகப் புரிந்துகொள்ள முடியாமையே ஆகும். மேலெழுந்த வாரியாகத் தோன்றுவதற்கு அப்பால் மிக அர்த்தமுள்ளவாறு நாம் தொடர்பு கொண்டிருக்கின்ற வகையினைக் கற்பனை செய்து பார்ப்பது எமக்குக் கடினமாக உள்ளது.

ஒரு மகன் தந்தையோடு உறவு உள்ளவன். ஒரு தந்தை மகனோடு உறவு உள்ளவர். இப்படியே நண்பர்களுக்கு இடையே உறவு உள்ளது. இவ்வாறு மனித உறவுகள் பல வகையாக உள்ளன. எமது கண்முன்னே தோன்றுகின்ற சில உறவுகளின் புறவடிவங்களே இவையாகும். ஆனால் இந்த உறவுகள் எல்லாம் பெரியதோர் அமைப்புக்குக் கட்டுப்பட்டன வாகவும், யாருக்கும் பட்சபாதகம் காட்டாத ஒரு பிரபஞ்ச அமைப்பால் ஒழுங்கு படுத்தப்படுவன ஆகவும் உள்ளன. அந்த அமைப்பு எவ்வித நண்பர்களும் எதிரிகளும் இல்லாத ஒரு பாரிய கணனி அமைப்பைப் போன்றதாகும்.

அந்தக் கணனியை எவ்வாறு நாம் கையாளுகின்றோம். அதற்கு எவ்வகையான தரவுகளைக் கொடுக்கின்றோம், அதனை எப்படி அணுகுகின்றோம், அது தொடர்பாக நாம் எப்படி நடந்துகொள்கின்றோம் என்பவற்றிலேயே அக்கணனி அமைப்புத் தங்கியிருக்கிறது. அது இயங்கும் முறைக்கு தேவையில்லாத வழிகளில் நாம் நடந்து கொண்டால், நாம் எதிர் பாராத, விரும்பாத விளைவுகளையே பெறுவோம். இந்த எதிர்பாராத நிகழ்வுக்கு அந்தக் கணனியில் உள்ள பிழை என்று நாம் காரணம் கூறமுடியாது. அதனைச் செவ்வையாகக் கையாள அறியாத தவறே அன்றி அந்த நிகழ்வுக்கு வேறு எவ்வித காரணமும் இல்லை.

அருச்சுனனோ வேறு எந்த மனிதரோ இந்தச் சூழ்நிலையை இலகுவாகப் புரியவோ, புரிந்திருக்கவோ முடியாது. இதனால் நாம் பலநூறு மகிழ்ச்சியான சூழ்நிலைகளையும்,

துன்பமான சூழ்நிலைகளையும் உடையவர்களாக இருக்கின்றோம். மகாபாரதம் பின்வரும் வார்த்தைகளோடு நிறைவு எய்துகின்றது.

"எப்போது தாம் மகிழ்ச்சியாக இருக்க
முடியும், எப்போது தாம் மகிழ்ச்சியாக
இருக்க முடியாது என்று தினமும்
மூடர்கள் தம்மைப் பல சூழ்நிலை
களில் வைத்துக் காண்கின்றனர்".

அறிஞனன்றி மூடனே இந்த உலகில் மகிழ்ச்சிக்கான சூழ்நிலைகளையும், துன்பத்துக்கான சூழ்நிலைகளையும் பார்ப்பான். எமக்கு இன்பத்தை வாரி வழங்கவோ துன்பத்தை அள்ளிச் சொரியவோ இந்த உலகம் கருதவில்லை. ஒரு பாரிய கணனி அமைப்புக்கு எமக்குத் திருப்தி வழங்கவேண்டும் என்ற நோக்கோ, துன்பம் தரவேண்டும் என்ற நோக்கோ இருக்காது. அப்படியான உணர்வுபூர்வமான அர்த்தம் எதுவும் அக்கணனி அமைப்புக்குப் பின்னால் இல்லை.

### 16. மனித உணர்வு.

ஆனால் மனிதன் உணர்வுபூர்வமானவன். அந்த உணர்வுகள் எல்லா வேளைகளிலும் ஞான ஒளியில் நன்கு நனைந்தவை அல்ல. எம்மிடம் மற்றவர்களுக்குத் தெரியாத இரகசிய நோக்கங்கள் உள்ளன. அவை சில சமயம் காரண காரிய முறையில் இருப்பதில்லை. ஏனெனில், அவற்றை விஞ்ஞான முறையில் விளக்க முடியாது. எனினும், இறுதியாக இந்த உலகத்தில் எல்லாவற்றுக்கும் ஒரு விளக்கம் உண்டு.

(தொடரும்...

**தன்னம்பிக்கை**

மூன்று சீடர்கள் குருவிடம் உபதேசங்களைக் கற்று முடித்து, காட்டு வழியாக ஊருக்குத் திரும்பிக் கொண்டிருந்தார்கள். தூரத்தில் புலி ஒன்று வந்தது.

"நாம் கற்றதெல்லாம் யாருக்கும் உபயோகப்படாமல் போய்விடும். அந்தப் புலி நம்மைக் கொன்று தின்னப் போகிறது!" என்றபடி திகைத்து செய்வதறியாமல் நின்றான் ஒருவன்.

"நாம் தரையில் படுத்துக் கண்ணை மூடியபடி கடவுளை நினைப்போம். அவர் காப்பாற்றுவார்" என்றபடி படுத்துக்கொண்டான் இரண்டாவது சீடன்.

மூன்றாவது சீடனோ, "புலி நம்மிடம் வருவதற்கு இன்னும் நேரமிருக்கிறது. நம் முயற்சியால் நம்மைக் காப்பாற்றிக்கொள்ளப் பார்ப்போம். முடியாத பட்சத்தில் கடவுளிடம் வேண்டுவோம். சும்மா அவரைத் தொந்தரவு செய்யக்கூடாது. மரத்தின்மீது ஏறினால் உயிர் பிழைக்கலாம்..." என்றபடி மற்ற இருவரையும் கூப்பிட்டான். அவர்கள் வரவில்லை. அவன் மட்டும் தாவி மரத்தில் ஏறிக்கொண்டான்.

தன்னம்பிக்கை இல்லாதவனையும், மூடநம்பிக்கை வைத்தவனையும் புலி அடித்துக் கொன்றது. தன் முயற்சியில் நம்பிக்கை வைத்த பக்தன் தப்பித்துவிட்டான்.

-பக்தி-

# காயத்ரீ மந்திரம்

– திரு வீ. செல்வரத்தினம் அவர்கள் –

இறைவனுக்கு நாம் அர்ப்பணிக்கும் மந்திரங்களில் மிகப் பழமையானதாக காயத்ரீ மந்திரம் கருதப்படுகிறது. வேதத்தில் உலகளாவிய பிரார்த்தனையாக காயத்ரீ மந்திரம் அமைந்துள்ளது. இதை வேதங்களின் தாய் என்று கூறுவார்கள். மந்திரங்களுள் தலைசிறந்தது காயத்ரீயே. காயத்ரீ மந்திரத்தைச் சொல்லுவதால், மனத்தில் உள்ள பலவீன உணர்ச்சிகள் மறைந்து போகும். உள்ளத்தில் ஒளி பிறந்து நம்முள்ளே இறைவனைக் காண முடியும். மனித இனத்திற்கு கடவுள் வழங்கிய முக்கியமான நன்கொடை காயத்ரீ மந்திரமாகும். இம் மந்திரம் எல்லாத் தெய்வீகச் சக்தியையும் உள்ளடக்கியுள்ளன.

காயத்ரீ மந்திரமாகவும், பிரார்த்தனையாகவும் ஏக காலத்தில் உதவுகிறது. சக்தியை அளிக்கும் உமாதேவியையும், அறிவைத் தரும் சரஸ்வதி தேவியையும், செல்வத்தைத் தரும் லட்சுமி தேவியையும் ஒன்றாகச் சேர்த்துக்கொண்டு உருவானவள் காயத்திரீ. அதனால்த் தான் காயத்ரீ மந்திரத்தைச் சொல்லுபவர்களுக்கு சக்தி, செல்வம், அறிவு மூன்றும் பெருகும்.

காயத்ரீ மந்திரத்தைக் காட்டிலும் நம்மைத் தூய்மைப்படுத்தக்கூடிய மந்திரம் வேறு இல்லை. தூய்மையான உள்ளத்துடனும், சிரத்தையுடனும் காயத்ரீ மந்திரத்தைச் சொல்லும் போது அது நமக்கு மிக உயர்ந்த பலனை அளிக்கிறது.

இந்தக் காயத்ரீ மகா மந்திரம் பரமாத்மா ஸ்ரீமத் நாராயணனிடமிருந்து வெளிப்பட்டது. கீதையில் கண்ணபிரான் “வேத மந்திரங்களில் நான் காயத்ரீயாக இருக்கிறேன்” என்று கூறுகிறார்.

இந்த மந்திரத்தை விசுவாமித்திரன் என்ற ரிஷியால் கண்டறிந்து உலக மக்களுக்குச் சொல்லப்பட்டது.

*காயத்ரீ மந்திரம்*

ஓம் பூர்புவஸ்வ
தவசவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
த்யோ யோ ந: ப்பிரசோதயாத்.

இதுவே காயத்ரீ மந்திரமாகும்.

காயத்ரீ மந்திரத்தின் பொருள். “நமது புத்தியை இயங்கச் செய்யும் பரமாத்மாவை நாம் வணங்குவோம் என்பதே, காயத்ரீ மந்திரம் ஜபிக்கப்பட்ட பின்னரே மற்ற மந்திரங்கள் ஜபிக்கப்படுகின்றன. மந்திர வழிபாட்டில் காயத்ரீக்குத்தான் முதலிடம். ஓர் இந்து இம் மந்திரத்தை கட்டாயமாக ஜபிக்க வேண்டும்.

காயத்ரீ மந்திரத்தை ஆண்- பெண் என்ற பேதமின்றி யார் வேண்டுமானாலும் சொல்லலாம். ஆனால் உள்ளத் தூய்மையும், உடல் தூய்மையும் உள்ளவர்கள்தான் இம் மந்திரத்தை ஓதவேண்டும்; இல்லாவிட்டால் நன்மைக்குப் பதிலாக தீமைகள் நேரக்கூடும்.

*சமயம் சாராத கல்வியைப் புகட்டுவதால் தந்திரம் மிக்க சாத்தான்களை உருவாக்குகின்றோம்.*

பெண்களுக்கு மாத விலக்கு, கர்ப்பம் போன்ற நிலைகள் இருக்கும்போது அவர்கள் இம் மந்திரத்தை உச்சரிக்கத் தகுதியில்லாதவர் களாகி விடுவார்கள். அதனால்த்தான் பொது வாக பெண்கள் இந்த மந்திரத்தை ஓதக் கூடாது என்று கருதப்படுகிறது.

காயத்ரீ மந்திரத்தை எம்மால் இயன் றளவு அடிக்கடி ஓதுதல் வேண்டும். எவ் வளவுக்கெவ்வளவு காயத்ரீ மந்திரத்தை ஓதுகின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு அதன் மூலம் நமக்கு நன்மைகள் உண்டு. காயத்ரீ மந்திரம் எல்லாத் தெய்வீகச் சக்தியையும் உள்ளடக்கியுள்ளது. இம் மந்திரம் இளம் தலைமுறையினருக்கு மிகவும் அத்தியாய மானது. அவர்கள் இம்மந்திரத்தை ஓதினால் ஒரு பிரகாசமான மங்களகரமான எதிர் காலத்தை நிச்சயப்படுத்தும். காயத்ரீ மந்திரம் ஓதியபின் முடிவில் சாந்தி என்று மூன்று தடவை சொல்ல வேண்டும்.

தனக்கென்று வாழ்பவன் சிறுமை அடைகின்றான். அனைத்தையுமே தன்மய மாக உணர்பவன் மேன்மை அடைகிறான். இந்த மிக உயர்ந்த தத்துவத்தை "காயத்ரீ" மந்திரம் சொல்லுகிறது. காயத்ரீ மந்திரம் உலகைப் புனிதமாக்குகிறது. இந்த காயத் ரீயே விஞ்ஞானம் எனப்படுகிறது.

ஒரு தனிமனிதன் தனக்காக பலன் தேடும் மந்திரம் காயத்ரீ மந்திரம் அல்ல; இது எல்லா உயிர்களுக்காகவும் மனிதன் பிரார்த்தனை செய்யும் மந்திரம். இதுவே காயத்ரீ மந்திரத்தின் தனிச்சிறப்பு. காலை வேளையில் நீராடிவிட்டு சூரியனைப் பார்த்த படி நின்றுகொண்டு மனதை ஒருமுகப்படுத்தி காயத்ரீ மந்திரத்தைச் சொன்னால் மூளை விருத்தியாகும், ஞாபகசக்தி பெருகும். மாலையில் மேற்கிலோ, வடக்கிலோ பார்த்து அமர்ந்தவண்ணம் காயத்ரீ மந்திரத்தை ஓத வேண்டும்.

காயத்ரீ மந்திரத்தின் ஆற்றல் எல்லை யற்றது. இம்மந்திர ஜபத்தால் அற்புதமான மன அமைதியும், சக்தியும் வாய்க்கிறது. மேலும் நோய்களைத் தீர்க்கும், தூக்கம் துன்பம் நீங்கும். சகல விருப்புக்களையும் நிறைவேற்றும், எதிரிகளை வெல்லும் திறமை யும், புத்திக் கூர்மையும் உண்டாகும்.

காயத்ரீ மந்திரத்தை எம் வாழ்நாள் முழுவதும் ஒரு நாளைக்கு ஒரு தடவை என்றாலும் ஓதவேண்டும். இம்மந்திரத்தை 108 தடவை ஓதுபவர்களுக்கு விரைவில் பிரகாசம் கிடைக்கும். 1008 தடவைகள் ஓதினால் அவர் களுக்கு விரைவில் ஞானஒளி கிட்டும்.

காயத்ரீ மந்திரம் மேலைநாட்டில் மிகவும் போற்றி அந்த மந்திரத்தை உச்சரிக் கிறார்கள். தினமும் காயத்ரீ மந்திரத்தை ஓதினால் உங்கள் முயற்சிக்கு அது வலு வளிக்கும். உங்கள் தன்னம்பிக்கையை அது வளர்க்கும். உங்கள் அறிவுச் சுடரை அது ஒளிபெறச் செய்யும். காயத்ரீ உங்கள் வாழ்க்கையில் மிக முக்கியமானது.

---

## *ஆன்மிகச் சிந்தனை*

எப்போதும் இறைவனை நினைவில்கொண்டு வாழ்வதன்மூலம் ஆண்டவனை உள்ளத்தில் கோயில் கொள்ளச் செய்தால் மெல்ல மெல்ல எல்லாம் சீர்படும். ஒருவர் எப்படிப்பட்டவராக இருந்தாலும், இறைவனின் மகா கருணையால் அனைத்து நலன்களையும் பெறமுடியும். இறைவனுடைய கருணை இருந்தால் முடியாததுதான் எது? ஆரம்பத்தில் குற்றம் குறைகள் ஒருவனிடம் இருந்தாலும், கடவுள் கிருபையால் அந்தக் குறைகள் நீங்கி அவன் உயர்ந்தவராக முடியும். அத்தகைய இறைவனின் எல்லையற்ற கருணையால் நீங்கள் நம்பிக்கை வையுங்கள்.

*தன்னை அறிந்தவனே அறிவுடையோரை அறிய முடியும்.*

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் தொடர்ச்சி...

## 2015 உற்சவ காலம் தொடக்கம்...

| | | |
|---|---|---|
| அ. குமாரவேல் ஆசிரியர் | யாழ்ப்பாணம் | 3000. 00 |
| ஆ. தெய்வேந்திரன் தோப்பு | அச்சுவேலி | 3000. 00 |
| சாந்தாமூலம் செ. பரமேஸ்வரி, க. மகேஸ்வரி | உரும்பராய் | 15000. 00 |
| த. பிரகாஷ் | நல்லூர் | 5000. 00 |
| திருமதி தங்கம்மா தம்பிராசா | வேலணை | 30k அரிசி |
| அக்ஷிகா நினைவாக மு. ஜெகநாதசர்மாமூலம் | உடுவில் | 3000. 00 |
| க. நல்லையா குடும்பம் தோப்பு | அச்சுவேலி | 1000. 00 |
| அபிலஷா ஸ்ரீகரன் | பிரான்ஸ் | 10000. 00 |
| செ. நவரத்தினசாமி | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| இ. கிருஷ்ணா குடும்பம் | நெல்லியடி | 5000. 00 |
| ச. திலீபன் குடும்பம் | உடுவில் | 5000. 00 |
| ச. ஆதீசன் | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| ச. அசீதன் | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| க. சிதம்பரநாதன் குடும்பம் | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| சி. சபேசன் குடும்பம் | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| பொ. பெரியசாமி | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| க. தெய்வேந்திரம் | பருத்தித்துறை | 1000. 00 |
| சிவசுப்பிரமணியம் புனிதவதி J.P | சுழிபுரம் மேற்கு | 13500. 00 |
| திரு ரமணன் | அச்சுவேலி | 1மூடை அரிசி |
| சுந்தரரூபன் டாழினி | புத்தூர் (U.K) | 5000. 00 |
| ரஞ்சினி பரமநாதன் குடும்பம் | லண்டன் | 1000. 00 |
| விமலாதேவி ரவீந்திரன் குடும்பம் | லண்டன் | 1000. 00 |
| சாரதாதேவி விஜயரட்ணம் குடும்பம் | கனடா | 1000. 00 |
| ராகுலன் வசந்தகுமார் | அவுஸ்திரேலியா | 3000. 00 |
| நாதன் மெடிக்கல் ஸ்ரோர்ஸ் | நெல்லியடி | 1500. 00 |
| த. ஸ்ரீதரன் குடும்பம் | எழுதுமட்டுவாள் | 10000. 00 |
| சி. கணேசமூர்த்தி | அல்வாய் | 10மூடை அரிசி |
| சி. லதா | திருகோணமலை | 1000. 00 |
| சி. லக்ஷனா | திருகோணமலை | 1000. 00 |
| S. இராஜேஸ்வரி | அச்சுவேலி | 4000. 00 |
| ம. விஜயலெட்சுமி | கொழும்பு | 5000. 00 |

இறைவனுடைய நாமத்தை இடைவிடாமல் உச்சரித்தால் உள்ளமும் உடலும் பரிசுத்தமாகிறது.

| | | |
|---|---|---|
| நா. தில்லைநாதன் | இணுவில் | 1000. 00 |
| சு. விபிஷாந் | கொக்குவில் | 1000. 00 |
| எரிக் கணேஷ் | யாழ்ப்பாணம் | 3600. 00 |
| N. சஞ்சீவன் | கரவெட்டி கிழக்கு | 5000. 00 |
| T. பிரபாகரன் குடும்பம் | U.K | 1000. 00 |
| இ. இராதாகிருஷ்ணன் | ஏழாலை | 1000. 00 |
| தர்ஷினி மகேந்திரன் | திண்ணைவேலி | 4000. 00 |
| ந. பொன்னுத்துரை | சுண்ணாகம் | 1500. 00 |
| ச. லிங்கேஸ்வரி | வட்டுக்கோட்டை | 2000. 00 |
| மா. பகீரதன் | மாவிட்டபுரம் | 500. 00 |
| கோகுலம் கல்வி நிலையம் | பரந்தன் | 3000. 00 |
| சி. இனோஜன்<br>சி. ஹர்சினி<br>சி. மகிஷன் யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் | 1500. 00 |
| கி. பாலச்சந்திரன் | அமெரிக்கா | 10000. 00 |
| அ. மகீதா, அ. மவீதா | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| ம. யுகேந்திரன் | நீர்வேலி | 3000. 00 |
| க. கதிரேசு | ஆனைக்கோட்டை | 1000. 00 |
| தி. ரவீந்திரநாதன் (அதிபர்) | கட்டைப்பிராய் | 1000. 00 |
| தே. மாதுளா | பருத்தித்துறை | 2000. 00 |
| சிவகுருநாதன் மதிவதனி குடும்பம் | வல்வெட்டித்துறை | 20000. 00 |
| குருபரநாதன் சாயிநாத் | கனடா | 10000. 00 |
| ச. தெட்சணாமூர்த்தி | கோண்டாவில் | 2000. 00 |
| பா. விஷ்ணுதாஸ் | சுண்ணாகம் | 1000. 00 |
| பா. செந்தூர்வாசன் | உரும்பராய் | 1000. 00 |
| J. சந்திரப்பிரகாசம் குடும்பம் | பருத்தித்துறை | 5000. 00 |
| க.இ. சிவசுப்பிரமணியம் | சுழிபுரம் | 1000. 00 |
| ப. சந்திரகுமார் | சுழிபுரம் | 1000. 00 |
| இ. யோகம்மா | இமையாணன் | 2000. 00 |
| அ. ஆரூரன் | வெள்ளவத்தை | 2000. 00 |
| பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | கோப்பாய் | 10000. 00 |
| பத்மநாதன் மேகலா | லண்டன் | 5000. 00 |
| S. வேலுப்பிள்ளை | வெள்ளவத்தை | 5000. 00 |
| உ. யோகாம்பிகை | மூளாய் தெற்கு | 2000. 00 |
| பொ. சண்முகநாதன்மூலம் சி. கந்தையா | சுண்ணாகம் | 5000. 00 |
| சி. சிவகணேஸ் | நோர்வே | 35000. 00 |
| பாபு வெதுப்பகம் | புன்னாலைக்கட்டுவன் | 4மூடை அரிசி |

(தொடரும்...

# சனி பகவான்

– திரு அ. சுப்பிரமணியம் அவர்கள் –

"காகம் ஏறும் தம்பிரான்" எனப் போற்றப்படும் - அதாவது காகத்தை வாகனமாகக் கொண்டவர் சனிபகவான். $7^1/_2$ வருடங்கள் மனிதன்மீது சவாரி செய்து கெடுப்பதும் கொடுப்பதுமான பலன்களைத் தந்து வருகிறார். நவக்கிரகம் ஒன்பதில் "ஈஸ்வர பட்டம்" பெற்றவராகப் பெருமை பெற்றுள்ளவர் சனீஸ்வர பகவான் ஒருவராவார்.



நவக்கிரக நாயகனான சூரிய பகவானுக்கும் சாயா தேவிக்கும் புத்திரனாகத் தோன்றிய சனிபகவான் சாவர்ணி எனும் சகோதரனையும் பத்திரை என்னும் சகோதரியையும் உடன் பிறப்புக்களாகவும் கொண்டிருந்தான். ஆகமங்களில் சனி பகவான் கரிய நிறமுடையவராகவும், கறுப்பு ஆடை அணிபவராகவும் கால் முடமானவராகவும் குறிப்பிடப்படுகிறார். இவரது கால் முடமானதற்கு இரண்டு சுவாரஸ்சியமான கதைகள் வழங்கி வருகின்றன.

இராவணன் மனைவியான மண்டோதரி கருவுற்றிருந்தாள். அத்தருணம் இராவணனுக்கு "இட்டமுடன் என் தலையில் இன்னபடியென்றெழுதி விட்ட சிவனை" மறந்து தனது புத்திரன் வல்லவனாக, வீரனாக, விறல் வேங்கையாக, நித்திய வந்தனாக விளங்கவேண்டுமென்ற பேராசை கொண்டு தனது நம்பிக்கைக்குரிய சோதிடரை அழைத்து நவக்கிரகங்கள் இடங்கள் பார்க்க வேண்டிய திசைகளாகியன குறித்து அவரவரை அவ்வவ்விடங்களில் திசாபுத்தி பார்வையில் வைத்து சோதிடர் சகிதம் காவலிருந்தான். அங்கே செவிலியரிடம் சிசு உதயமானதும் தெரிவிக்கும்படி கட்டளையிட்டு இங்கே வினாடிக்கு வினாடி கிரகமாற்றம் பற்றிய சோதிடரின் பணிப்புரைப்படி மாற்றம் செய்தபடி மிகக் கூடிய அவதானிப்பிலும் விழிப்புடனும் காத்திருந்தான். சிசு உதயமான செய்தி செவிலியரது வாயிலிருந்து வந்த குதூகலத்தில் காவல் குறைவு கண்ட சனிபகவான் தனது குறும்புத்தனத்தைக் காட்டிப் பிறந்த குழந்தையின் தலை எழுத்தை மாற்றிவிட்டார். இது கண்ட சோதிடர் "போச்சு, போச்சு எல்லாம் போச்சு எமது முயற்சி முழுவதும் இந்தச் சனியனாலே வீணாய்ப் போச்சு" என்று பதறினார்.

ஆத்திரத்தில் அறிவிழந்த ராவணன் அருகிருந்த கொட்டானால் ஓங்கி விட்டான் ஒரு அடி. கால் உடைந்து சொத்தியானான் சனிபகவான். பிறிதொரு சமயம் சனிபகவான்

*இனிமையான சொற்கள் இறைவனால் அருளப்படும் வரம்.*

எமதர்மராஜனது கோபத்துக்காளாகி அவனிடம் வளமான ஒருதை வாங்கிக் கால் ஊனமாகி முடமானதும் உண்டு. இவையிரண்டு சம்பவங்களுமே சனி பகவான் கால் முடமாகக் காரணமாக அமைந்தவையாகும்.

சனி பகவானுக்குச் சித்திரதா எனும் தேவியை அவரது ஈடுபாடின்றி மணம் முடித்துக் கொடுக்கப்பட்டதால் அவளது சாபத்துக்காளாகியதால் சனி பார்வை வக்கிரமானது. இதுவே இராசிகளின் சுற்றுவட்டத்தில் வக்கிரமடைதல் எனப்படுகிறது. இதனை மனிதனது "வக்கிரபுத்தி" என்கிறோம்.

சிவபெருமானைச் சனி பகவான் பற்றியதால் ஈஸ்வரப்பேறு கிடைத்ததாக வரலாறு. அந்த உற்சாகத்தில் விநாயகப் பெருமானை $7^1/_2$ ஆண்டுகள் மடக்கலாம் என்று ஓடிய வருக்கு ஏமாற்றமே கிடைத்தது. அங்கு விநாயகர் குனிந்த தலை நிமிராமல் ஏதோ எழுதிக் கொண்டிருந்தார். அத்தருணம் முன் போகப் பயந்தான். தும்பிக்கை தூக்கி நெஞ்சில் ஒரு இடி இடிப்பாராயின் சொத்தியன் சுருண்டுவிழ வேண்டியதுதான் என்று கருதிய சனீஸ்வரன் பின்புறமாக வந்து முதுகில் சுரண்டினார். தலை நிமிராமலே யார்? என்றார் விநாயகர். "நான் சனி பகவான்" என்றான். "இப்போது கதைக்க நேரம் இல்லை. நாளை வா; அத்தோடு 'நாளை வா' என்பதை எழுதி முதுகில் ஒட்டிவிட்டுப் போ" என்றார். பிள்ளையாரிடம் வாலாட்ட முடியாத ஈஸ்வரப் பட்டதாரி தினமும் வருவதும் வாசிப்பதும் திரும்பிச் செல்வதுமாயிருந்தாரேயன்றி விநாயகப் பெருமான்மீது ஒரு நொடிப்பொழுது கூடச் சவாரி செய்யமுடியவில்லை.

இதன் பின்பு ராம பக்தனான அனுமனிடம் சென்று $7^1/_2$ ஆண்டுகள் தங்க இடம் கேட்டார். அனுமன் ஒரு குத்து விட்டால் குத்துக்கரணம் போடுவார் முடவர். ஆனால் தனது நிலைமை பற்றிப் பரிந்துரைத்த சனீஸ்வரன் இடம் தருமாறு கெஞ்சினார். எதற்கும் இடமளியாத அனுமனிடம் $7^1/_2$ மாதங்களாவது தங்க இடம்கேட்டு இறுதியாக $7^1/_2$ நொடி (வினாடி)யாவது தங்க இடம்தரும்படி கேட்க நான் தேவை ஏற்படும்போது நினைக்கிறேன். அப்போது வா; இப்போது போ என்று சொல்லி அனுப்பி வைத்தான். லங்காபுரியிலே ராமராவண யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. இரண்டு பக்கமும் பேரழிவு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. திடீரென இராவணன் ஏவிய பிரமாஸ்திரத்தால் இராம இலக்குவன் முதலான வானர சேனையனைத்தும் மயங்கின. அது கண்ட சபரி பதைபதைத்து சஞ்சீவி மூலிகை கொண்டு வந்தால் மாத்திரமே அதுவும் விரைந்து கொண்டு வந்தால் மட்டுமே உயிர் பிழைக்க வைக்க முடியும் என்று விரைந்து செயற்படக் கூடியவனான அனுமனை அனுப்பி வைத்தனர். அவனும் விரைந்து சென்று மூலிகை தெரியாமையால் சஞ்சீவி மலையைப் பிரட்டியெடுத்துச் சுமந்து வந்தான். வரும்போது வழியில் சோர்வுற்று தள்ளாடி உடனே சனி பகவானை நினைக்க ஓடி வந்த சனிபகவானிடம் இதைக் கொஞ்சம் உன் தோளில் வையப்பா; சற்று ஓய்வெடுத்து வாங்குகிறேன் என்றான் அனுமன். மலையை இறக்கி வைத்ததும் "இதேதடா சனியன் தோளை நொருக்குதே"யென்று கதறியவனைப் பார்த்து நகைத்த அனுமன் இதுதான் தம்பி சனியனை சனி பற்றிய கதை. ஒரு நொடிப் பொழுது இம்மலையை வைத்திருக்க முடியாது ஒப்பாரி பாடும் நீ $7^1/_2$ வருடங்கள் உன் பிடியில் சிக்கிய மனிதன் என்ன பாடு படுவான் என்பதைச் சிறிது யோசி தம்பி இங்கே தாரும்; நேரம் போகுது. நான் இதைக் கொண்டுபோய்க் கொடுத்து உயிர் காப்பாற்ற வேண்டும் என்று ஓடுகின்றார். அங்கே சபரி

சஞ்சீவி மூலிகையைச் சாறு பிழிந்து கண்ணில் விட்டு மயங்கியோரை எழுப்புகிறான். அங்கு ராவணன் திகைத்து நிற்கிறான்.

நளமகாராஜன், பாண்டவ சகோதரர்கள், துரியோதனன் போன்ற அரசர் மட்டுமன்றி இந்திராதி தேவரில்கூட சனீஸ்வரனது பார்வை படர்ந்திருந்தது. படைப்புக் கடவுளாய பிரம்மன்மீது சனி பகவானின் பார்வை பட்டதாலன்றோ ஐந்து தலையில் ஒன்று பறிபோனது என்பது ஐதீகம்.

புட்கரன் உருவில் வந்த கலிபுருடன் நள தமயந்தியைப் படுத்தியபாடு வெண்பாவில் புகழேந்தி என்பவர் பாடியுள்ள நள சரித வாயிலாக நாமறிந்ததேயாகும். துரியோதனன் அரசிழக்கவும் வாலி வதைபடவும் சனீஸ்வர பார்வையால் என்பதேயுண்மை.

சனி பகவான் போன்று நன்மை செய்பவரும் தடுப்பவரும் அதாவது கொடுப்பவரும் கெடுப்பவரும் வேறெவரும் இல்லையெனலாம். இவருக்கு மிகவும் பிரியமான உலோகம் இரும்பு. தானியம் கறுப்பு எள். உடை கறுப்பு ஆடை. மலர் கருங்குவளை, கருநீல மலர். சுவை கசப்பு, கோத்திரம் காசிப கோத்திரம். இவரது மகன் குளிகன். நாட்காட்டிகளில் குளிகண் நிற்கும் நேரம் நாம் எது செய்தாலும் நன்மை பயக்கும் என்பது ஐதீகம். இக்காலத்தில் இறந்தவரின் உடலைச் சூரையம் காட்டுக்கு எடுத்துச் செல்லக் கூடாது என்பது நியதி.

சனி பகவான் முடமானவராகவும் இருகரமுடையவராகவும் வலது கையில் ஊன்றுகோலும் இடக்கரத்தில் வரதஸ்தமும் எட்டுக் குதிரை பூட்டிய இரும்புத் தேரில் காக வாகனத்தில் கருநிறக் குடையும் கொடியும் உடையவராய் வலம் வருவர். இவரது அதி தேவதை எமதர்மராஜன். பிரக்யாபதி தேவதை பிரஜாபதி. இவர் ஒவ்வொருவரது நட்சத்திரத்துக்குரிய ராசிக்கு முன் பின் ராசிகளில் $7^1/_2$ வருடங்கள் நின்று அட்டமம், ஏழரை, நீசபங்கம் எனப் பலன் செய்வார். சனி பகவானுக்குச் சனிதோறும் விரதம் அனுட்டித்தலும் சனிவாரந்தோறும் காகத்துக்குச் சோறிடலும் எள் நெய்த்தீபம் ஏற்றி வழிபடலும் ஏற்புடைத்தாம்.

சனி பற்றுவதை மங்குசனி, பொங்கு சனி, மரணச்சனி என்றும் சோதிட நூல்கள் கூறுகின்றன. சனியின் பிடியில் அகப்பட்டவர் அதன் பிடியிலிருந்து விடுபட இலகு வழியாக வெள்ளி இரவு படுக்கமுன் 8 வெற்றிலையும் 8 பாக்கும் எடுத்து ஓரளவு கறுப்பு எள் சேர்த்துக் கறுப்புத் துணியில் முடியிட்டு படுக்கையின் தலையணையின்கீழ் வைத்துச் சனி காலை எழுந்து காலைக் கடன் முடித்து வெற்றிலையையும் பாக்கையும் தலையைச் சுற்றி எறிந்துவிட்டு எள்ளில் சிறிதளவு எடுத்துச் சுடுசோற்றில் கலந்து காகத்திற்கு உணக் கொடுத்து மிகுதி எள்ளைக் கறுப்புத் துணியில் பொட்டணி செய்து நவக்கிரகம் அமைந்துள்ள கோவில்களில் ஒன்றுக்குச் சென்று சிறு சுட்டி ஒன்றில் (தூதை) நல்லெண்ணெய் வார்த்துத் தீபமேற்றி நவக்கிரக மண்டபத்தை மூன்றுமுறை வலம் வந்து ஒவ்வொரு கிரகத்தின் முன்னும் அவர் பெயர் கூறி நின்று தரிசித்து சனிபகவானுக்கு முன்னால் தீபத்தை வைத்து வழிபட்டு பூசகர்மூலம் கறுப்புப் பூக்கள் கொடுத்து அர்ச்சனை செய்வித்து அவரால் தரப்படும் பூவை வாங்கி நவக்கிரக மண்டபத்தைச் சுற்றி வந்து சனீஸ்வரன் முன் போட்டு வழிபட்டு விபூதி, சந்தனம் பெற்றுக் கொண்டு மூலவரை வணங்கி உள்வீதி வலம் வந்து வெளியேறல் வேண்டும். ஞானசம்பந்தப் பெருமானால் பாடப்பெற்ற "கோளறு பதிகம்" படிப்பதாலும் சனீஸ்வர தொல்லை குறைய வாய்ப்புண்டாகும்.

இந்தியாவிலே திருநள்ளாறு என்னும் தலத்தில் சனீஸ்வரனுக்குத் தனிக்கோயில்

உண்டு. அங்குள்ள தீர்த்தம் நள தீர்த்தம் எனப்படும். இதனை நளகூபம் என்றும் சொல் வர். நளமகாராஜன் இங்கு நீராடி ஈஸ்வரனை வழிபட்டு தோஷம் நீங்கப் பெற்றதாக ஐதீகம்.

பன்னிரண்டு ராசிகளையும் ஒருமுறை சனீஸ்வரன் சுற்றி வர 30 வருடங்கள் செல் லும். ஒருவரது ராசி முன் பின் ராசிகள் என $7^1/_2$ ஆண்டுகள் சஞ்சரிப்பார்.

சனீஸ்வர வழி பாடலாக,

“சங்கடம் தீர்க்கும் சனி பகவானே
மங்களம் பொங்க மனம் வைத்தருள்வாய்
சச்சரவின்றிச் சாகா நெறியில்
இச்சகம் வாழ இன்னருள் தா, தா” என்று பாடலாம்
“ஓம் சனீஸ் வரபகவானே நமக”
“ஓம் காக வாகனனே நமக”

## தொண்டர்தம் துயர் களைவான் திடமாக நம்பிடுவோம்

தொண்டைமானாற்றுக் கரையினிலே கோவில் கொண்ட வேலனவன்
தொண்டர்தம் துயர் களைவான் திடமாக நம்பிடுவோம்
வண்டினங்கள் அளிபருக மலர்களிலே அமர்வதுபோல்
அண்ணலவன் ஆலயத்தில் அருள்வேண்டி அடியார்கள் கூடுவரே.

பண்ணிசையில் பாமாலை பாடுவோர் ஓர்புறமும்
கண்களிலே நீர் சொரிய அமர்ந்திருப்போர் ஓர்புறமும்
ஆண்டினில் இளையவர்கள் ஆன்நிரைபோல் நாற்புறமும்
காண்டாமணியோசை கேட்டலுமே கூடிடுவர் ஆலயத்தில்.

அன்னக்கந்தனென ஆன்றோர் அழைத்ததெல்லாம்
வீண்போகவில்லை இன்றும் கந்தனவன் திருவருளால்
சந்நிதியான் ஆச்சிரமம் அமுதசுரபியென அறைகூவ
வந்துபசியாறும் அடியார்திருக்கூட்டம் மிகப் பெரிதே!

உண்பது நாழி உடுப்பது நான்குமுழம் மாத்திரமே
எண்பதுகோடி நினைந்துழலும் மாந்தர்களே
கண்ணின் மணியனையான் கந்தனவன் மலர்ப்பாதமதை
வேண்டித் துதிப்போர்க்கு வினையெதுவும் சாராமே.

பச்சிளங்குழந்தை முதல் நலிவுற்றோர் சறாக
எச்சிலிலை பொறுக்குமிழிலைக்கு ஆளானோம்
உச்சநிலையிலிருந்த எம்மவர் வாழ்வுதனை
இச்சகத்தில் மீண்டும் தருவதெப்போ குமரேசா.

-ஆ. மகேச-

அன்பும் கடவுளும் நாணயத்தின் இரு பக்கங்கள்.

(தொடர்ச்சி....

# விதுர நீதி

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

மறுநாள் காலை சுதன்வா என்ற அந்தணர் அந்தச் சுயம்வரத்தில் கலந்துகொள்ள வந்தார். வந்தவர் நேராக கேசினியும், விரோசனனும் உட்கார்ந்திருக்கும் இடம்நோக்கி வந்தார். அவரைக் கண்ட கேசினி, எழுந்து அவரை உபசரித்து மரியாதை செய்து வரவேற்றாள்.

ஆனால் விரோசனனோ, எழுந்திருக்காததுடன், "என்னுடன் இந்த ஆசனத்தில் உட்காருங்கள்" என்றும் சொன்னான். இதைக் கேட்ட சுதன்வா, "விரோசனா! தந்தை மகள், இரண்டு அரசர்கள், இரண்டு அந்தணர்கள் இப்படிச் சேர்ந்து உட்காரலாமே தவிர அரசனும் அந்தணனும் சேர்ந்து ஒரே ஆசனத்தில் உட்காரக் கூடாது" என்று கூறினார்.

விரோசனன் ஏளனமாக அவரைப் பார்த்து, "உண்மைதான், நீங்கள் என்னுடன் சமமாக ஒரே ஆசனத்தில் உட்காரக்கூடாதுதான். பலகையிலோ, பாயிலோ, தர்ப்பையால் செய்யப்பட்ட ஆசனத்திலோ உட்காரத்தான் உமக்குத் தகுதி உண்டு" என்றான்.

சுதன்வா, "விரோசனா! நீ விவரமறியாமல் பேசுகிறாய். உன் தந்தையான பிரகலாதனே என்னை உயர்ந்த ஆசனத்தில் உட்காரவைத்துக் கீழாக உள்ள ஆசனத்தில் தான் உட்காருவான். அப்போதெல்லாம் நீ பாலகனாயிருந்தாய். வீட்டில் சுகமாக வளர்க்கப்பட்டவனான உனக்கு அதெல்லாம் ஒன்றும் தெரியாது" என்று சொன்னார்.

உடனே விரோசனன், "சுதன்வாவே! நீங்கள் சிறந்தவரா? நான் சிறந்தவனா? என்பதை விவரம் தெரிந்தவர்கள்மூலம் தீர்மானம் செய்யலாம். தங்கம், பசுக்கள், குதிரைகள், அசுரர்களான எங்களுக்குச் சொந்தமான எல்லாவற்றையுமே பந்தயமாக வைக்கிறேன்" என்றான். சுதன்வாவோ அதை மறுத்து, "அதையெல்லாம் நீயே வைத்துக்கொள். அதற்குப் பதிலாக, நாமிருவரும் நம்முடைய உயிரையே பந்தயமாக வைத்துக்கொண்டு, விவரம் தெரிந்தவர்களிடம் கேட்கலாம் வா" என்றார்.

விரோசனன், "சரி, எங்கு போகலாம். நான் தேவர்களையோ, மனிதர்களையோ ஒப்புக்கொள்ள மாட்டேன்" என்று சொல்ல, சுதன்வா, "வா விரோசனா உன் தந்தையான பிரகலாதனிடமே போவோம். பிரகலாதன் தன் பிள்ளைக்காகப் பொய் சொல்ல மாட்டான்" என்றார். விரோசனன் ஒப்புக் கொண்டான்.

இப்படி இருவரும் உயிரையே பந்தயமாக வைத்துக்கொண்டு பிரகலாதனிடம் வந்தார்கள். அவர்களைப் பார்த்த பிரகலாதன், "இதற்கு முன்னால் இவர்கள் இருவரும் இப்படிச் சேர்ந்ததில்லையே. பாம்புகள் போலக் கோபம் கொண்ட இருவரும் ஒன்றாக வருகிறார்கள்" என்று நினைத்துத் தன் மகனாகிய விரோசனனை, "விரோசனா! இதற்கு முன்னால் நீங்கள் இருவரும் இப்படிச் சேர்ந்து வந்தது நான் பார்த்ததில்லையே. இப்போது எதற்காக இப்படி ஒன்றாக வந்திருக்கிறீர்கள்? உனக்கு சுதன்வாவுடன் நட்பு உண்டா?" என்று கேட்டார்.

விரோசனன், "நட்பெல்லாம் ஒன்றும் இல்லை. ஒரு பிரச்சினையில் உயிரையே பந்தயமாக வைத்துக்கொண்டு இங்கே வந்திருக்கிறோம். நீங்கள்தான் அதில் உண்மை

சொல்ல வேண்டும். பொய் சொல்லக் கூடாது" என்று பதில் கூறினான்.

உடனே, பிரகலாதன் சேவகர்களிடம், "சுதன்வாவை உபசரிக்க வேண்டும். தீர்த்தம், தேன் முதலானவைகளைக் கொண்டு வாருங்கள்" என்று உத்தரவிட்டுவிட்டு, சுதன்வாவிடம் "அந்தணரைப் பூஜிக்கத் தகுந்த உங்களுக்குப் பருத்த வெள்ளையான பசுமாட்டைத் தருகிறேன்" என்று கூறினான்.

சுதன்வா, "பிரகலாதா! எங்கள் கேள்விக்குப் பதில் சொன்னாலே போதும், அதுவே நீ எனக்குத் தருகிறேன் என்று சொன்னதெல்லாம் தந்தமாதிரி உண்மையைச் சொல், அந்தணர்கள் சிறந்தவர்களா? விரோசனன் சிறந்தவனா?" என்று கேட்டான்.

இதைக்கேட்ட பிரகலாதன், "அந்தண உத்தமரே! கத்தி முனையைக் காட்டிலும் கூர்மையாயிருக்கும் தர்மத்தைச் சொல்ல யாரால் முடியும்? வணங்கத் தகுந்த நீங்கள், பந்தயத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள். எனக்கோ ஒரு பிள்ளை. அவனும் நீங்களும் நேரில் இருந்துகொண்டு கேட்கும் கேள்விக்கு என்னைப் போன்றவன் எப்படிப் பதில் சொல்ல முடியும்?" என்றான்.

சுதன்வா, "பிரகலாதா! நிகரில்லாத இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லாவிட்டாலோ, அல்லது விபரீதமான பதிலைச் சொன்னாலோ, உன் தலை சிதறிப்போய் விடும்" என்றார்.

அப்போது, "சூரியனோடு வருவதையும் எல்லாம் உணர்ந்ததும், அனைத்தையும் நேரில் காண்பது முதலான இயல்புகளைக் கொண்ட அன்னப் பறவையைப் பார்த்துப் பிரகலாதன், அன்னமே! பிள்ளையும், அடுத்த வரும் பந்தயத்தின் பேரில் விவாதம் செய்தால், அவர்கள் விடயத்தில் எப்படிச் சொன்னால் தர்மமாகும்?" என்று கேட்டான். அன்னம், "அரசே பிள்ளைக்குப் பசுவைக் கொடுக்கலாம். விருப்பமான வேறு செல்வத்தைக் கொடுக்கலாம். இரண்டு பேர்கள் வாதம் செய்யும்போது உண்மையைத் தான் சொல்ல வேண்டும்" என்று பதில் கூறியது. பிரகலாதன் மறுபடியும் அன்னத்திடம், "அன்னமே! உண்மையைச் சொல், ஒருவன் பொய்யையோ அல்லது உண்மையையோ தெளிவாகச் சொல்லவில்லை என்றால் அவன் எவ்வளவு பாவம் செய்தவனாக ஆவான்?" என்று கேட்டான்.

அன்னம், "அரசே! தர்மத்தைப் பற்றிக் கேட்டால், விபரீதமான பதிலைச் சொல்லக் கூடாது. பசுவின் காதுபோல், சஞ்சலமாக நடப்பவன், தர்மத்தைவிட்டு விலகுவான். அவனுக்கு உலகமில்லை, மக்களுமில்லை. தர்மத்தை ஆராய்ந்து அறிந்தவர்கள் அதை அனுபவத்தில் கொண்டு வந்து கடைப்பிடிக்க வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் கரையில் முளைத்த மரங்களை, நதிகள் அழிப்பதுபோலத் தர்மமானது அவர்களை அழித்து விடுகிறது. தவறுக்காக சபையில் வைத்து தண்டிக்கப்பட வேண்டியவனைத் தண்டிக்காது விட்டால், அந்தச் சபையின் தலைவனாக இருப்பவன் தவறினால் ஏற்படும் பாவத்தின் பாதியை அடைகிறான். கால் பங்கு செய்தவனுக்கும் கிடைக்கின்றது. மீதிக் கால்பங்கை அந்தச் சபையில் உள்ளவர்கள் அடைகிறார்கள். சபையில், தண்டனை வழங்கப்படுகையில், சபைத் தலைவனும் சபையில் உள்ளவர்களும் பாவத்திலிருந்து விடுபடுகின்றார்கள். பாவம் அதனைச் செய்தவனையே சேருகின்றது" என்றும் அன்னம் சொல்லியது.

பிரகலாதன் மீண்டும் அன்னத்திடம், "அன்னமே! அறியாமையாலோ, ஆசையாலோ ஒருவன் பொய்யான வார்த்தை சொன்னால் அவன் நிலை என்ன? தத்துவத்தைக் கேட்கிறேன் சொல்" என்று கேட்டான்.

அன்னமும், "ஒரு மனைவி இருக்கும்போது இன்னொருத்தியைத் திருமணம் செய்து கொண்டால் அந்த மூத்த மனைவியும், சூதாட்டத்தில் தோல்வியை அடைந்தவனும், சுமை சுமந்து உடம்பு நொந்தவனும் அன்றைய இரவில் என்ன துக்கத்தை அடைவார்களோ அப்படிப்பட்ட துக்கத்தை அடைவான். அன்பு கொண்ட நண்பனிடம் கபடம் செய்தவன்; துரோகத்தால் பாதிக்கப்பட்டவன்; எல்லாப் பொருட்களையும் இழந்தவன் முதலியோர்கள் சம்பவம் நடந்த இரவு முழுவதும் எப்படி இருப்பார்களோ அதேபோலப் பொய் சொன்னவனும் இருப்பான்.

ஆட்டுக்காகப் பொய் சொல்பவன் முன்னோர்கள் ஐந்து பேர்களையும், பசுவுக்காகப் பொய் சொல்பவன் முன்னோர்கள் பத்துப் பேர்களையும், குதிரைக்காகப் பொய் சொல்பவன் முன்னோர்கள் நூறு பேர்களையும் கொன்ற பாவத்தை அடைவர்.

மனிதனுக்காகப் பொய் சொல்பவன் ஆயிரம் முன்னோர்களை கொன்றவனாவான். தங்கத்திற்காகப் பொய் சொல்பவன் உடன் பிறந்தவர்களையும், இனிமேல் பிறக்கப் போகின்றவர்களையும் கொன்றவனாவான். பூமிக்காகப் பொய் சொன்னால் எல்லாவற்றையும் கொலை செய்தவனாவான். ஆகவே, பொய் சொல்லாதே" என்று தெளிவாகச் சொன்னது.

இதைக் கேட்ட பிரகலாதன் மகனிடம், "மகனே! விரோசனா! சுதன்வாவின் தந்தை "அங்கிரஸ்" என்னைவிடச் சிறந்தவர்; சுதன்வா உன்னைவிடச் சிறந்தவர், உன் தாயைவிட சுதன்வாவின் தாய் சிறந்தவள். நீ தோற்றுப் போனாய், உன் உயிர் சுதன்வாவின் கையில் இருக்கிறது" என்று சொல்லிவிட்டு, சுதன்வா பக்கம் திரும்பி "சுதன்வரே! விரோசனனுக்கு உயிர்ப்பிச்சை அளிக்க வேண்டும்" என்று வேண்டினார்.

சுதன்வா, "பிரகலாதா! தர்மத்தைக் கடைப்பிடிக்கும் நீ, உண்மையைச் சொன்னாய். மகன்மீதுள்ள பாசத்தால் பொய் சொல்லவில்லை. கிடைத்தற்கரிய, உன் மகனை உனக்கே தருகிறேன். கேசினியை விரோசனனே திருமணம் செய்துகொள்ளட்டும்" என்று கூறினார்.

"திருதராஷ்டிரரே! அரசர்களில் உயர்ந்தவரான நீங்கள் அரசாட்சிக்காகப் பொய் சொல்லாதீர்கள். பிள்ளையான துரியோதனனுக்காகப் பொய் சொன்னால் பிள்ளைகளோடும் மந்திரிகளோடும் அழிந்துபோய் விடுவீர்கள்" என்று விதுரர் கூறினார். (தொடரும்...

---

## பக்திச் சுவை

மிகவும் வயதான குரு ஒருவர் வாழ்வின் கடைசி நிமிடங்களில் இருந்தார். சுற்றிலும் சீடர்கள் சோகமாக நின்று கொண்டிருந்தனர். ஒரு சீடன் வேகமாக வெளியே ஓடுகிறான். குரு வழக்கமாக விரும்பிச் சாப்பிடும் ஒரு பலகாரத்தைத் தேடிப்பிடித்து வாங்கி வருகிறான். குருவிடம் நீட்டுகிறான். அவர் ஆவலோடு அதைச் சாப்பிடுகிறார். சாப்பிட்டுவிட்டு அந்தச் சீடனை அருகில் அழைக்கிறார். சீடன் அவர் அருகில் குனிகிறான். ஏதோ கடைசி உபதேசம் சொல்லப்போகிறார் என்கிற எதிர்பார்ப்பில்! குருவின் உதடுகள் மெல்ல அசைகின்றன. "ஆகா! என்ன ருசி" என்று சொல்லிவிட்டுக் கண்களை மூடுகிறார். சீடனுக்கு குருவின் உபதேசம் புரிகிறது. குருவுக்கு வாழ்க்கையின் கடைசி விநாடிகூட ருசியாக இருந்திருக்கிறது. வாழ்வின் கடைசி விநாடியைக்கூட ருசிக்கக் கற்றுக்கொள்ளுங்கள் என்பதுதான் அந்த குருவின் உபதேசம். அந்தச் சுவையைத்தான் நமக்குக் கற்றுக்கொடுக்கிறது பக்தி. அப்படி ஒரு மனத் தெளிவை உண்டு பண்ணுவதுதான் உண்மையான ஆன்மீகம்.

-பக்தி-

*தர்மம் செய்யாவிட்டாலும் தர்மம் செய்பவரைத் தடுக்காதே.*

# பாம்பன் சுவாமிகள்

– திரு மூ. சிவலிங்கம் அவர்கள் –

இந்தியாவில் தீர்த்த யாத்திரைக்குச் சிறப்பான தலங்கள் பல உள்ளன. வடபால் காசியும் தென்பால் இராமேஸ்வரமும் அதி விசேடமானவை. சகல தலங்களையும் தரிசித்தபின் இராமேஸ்வரத்தில் தீர்த்தமாடினால் மட்டுமே எமது ஸ்தல யாத்திரை பூரணத்துவம் பெறும். இராவணனை வதஞ்செய்த இராமபிரான் தமது பிரம்மஹத்திதோசத்தை நீக்குவதன் பேரில் இத்தலத்தில் சிவபூசை செய்ய முற்பட்டார். இதன் தேவை கருதிக் காசியில் சென்று சிவலிங்கம் ஒன்றை எடுத்து வருமாறு அனுமனை அனுப்பினார். அனுமன் லிங்கத்தை எடுத்துவரச் சற்றுநேரம் பிந்தியதால் உரிய வழிபாட்டின் நேரநியதி வந்ததும் தமது மனோபலத்தால் மணலில் லிங்கம் ஒன்றை உருவாக்கிச் சிவபூசையை ஆரம்பித்தார். சிறிது நேரத்தின்பின் அனுமன் கொண்டுவந்த லிங்கத்தை வைத்துப் பூசிக்குமாறு அனுமனை வேண்டினார்.

இத்திருத்தலத்தை இராமபிரான் பூசித்ததால் இராமஈஸ்வரம் என்னும் சிறப்புப் பெற்றது. மேலும் அனுமனும் பல தேவர்களும் இதன் தெய்வீக மகிமை கருதிய முனிவர்களும் மாபெரும் தவயோகிகளும் வணங்கிய பெருமைக்குமுரிய சிவத்தலமாகும். இப்புண்ணிய பூமி நிலவளம், நீர்வளம் குன்றிய பிரதேசமானாலும் இதன் சிறப்பினால் அருள் வளம் மிக்கது. சிவபிரான் தமது யோகநிலை பேணி ஏனைய புற இடையூறுகளின்றியே தவநிலையில் ஆழ்ந்திருப்பார். அவரின் சிவப்பொலிவு இம்மண்ணைப் புனிதமடையச் செய்தது. இப்புனித மண்ணிலும் இதனைச் சூழ்ந்த பகுதியிலும் எத்தனையோ அருளாளர்கள் தோன்றி இம்மண்ணுக்கும் சைவசமயத்துக்கும் சிவதத்துவங்களுக்கும் பெருமை சேர்த்தனர்.

இராமேஸ்வரத்தின் சிறு கிராமமான பாம்பனில் வாழ்ந்தவர்களான சாத்தப்பிள்ளையும் செங்கலத்து அம்மாளும் நற்றவஞ் செய்தவர்கள். "தவமும் தவமுடையார்க்காகும்" என்றாற் போல இத்தம்பதியினர் செய்த முற்றவப் பயனாக 1852இல் அரிய சற்புத்திரனை அடையும் பேறு பெற்றனர். அப்பிள்ளை கருவிலேயே இறைசிந்தனையுடையவராகத் தோன்றியதால் "அப்பாவு" என்னும் பிள்ளைப் பெயருடன் பேணி வளர்த்தனர். அப்பாவு தமது முற்றொடரின் நிறைவை இப்பிறவியில் அடையும் நியதியை நாடினார்.

இவர் பிற்காலத்தில் சிறந்த அருளாளரானதால் பிறந்த ஊரின் பெயரால் பாம்பன் சுவாமிகள் என அழைக்கப் பெற்றார். அப்பாவு வாழ்ந்த காலத்தில் கல்விக்கான சைவப் பாடசாலைகளில்லாததால் அங்கமைந்த கிறிஸ்தவ பாடசாலையிற் கற்றார். மண்ணின் மணம் சைவசமயப் பற்றில் ஓங்க வைத்ததால் இறை நாட்டமேற்பட்டது. சூழலுக்கேற்ப புராண, தெய்வீகப் பாடல்களில் மூழ்கினார். முருக பக்தியில் மேம்பட்டார். இவர் தமது நியதி காரணமாக நாள்தோறும் கந்தசஷ்டி கவசத்தை 36முறை தவறாது பாராயணஞ் செய்தார். இறையருள் இவரின் சித்தத்தைச் சிறைப்பிடித்திருந்தது.

*உண்மையான மகிழ்ச்சி கடமையைச் செய்வதுதான்.*

**பாடல்கள் பாடும் பணி**

ஒரு நாள் அவ்வூரிலுள்ள சிவன் கோயிலில் நடைபெற்ற திருவிழாவுக்காகச் சென்றார். ஆலய வாசலில் தம்மை மறந்து "சிவசிவ" என்று கூறிவிட்டு ஆலயத்தை வலம் வந்து இல்லமேகினார். இவர் தினமும் 36 முறை கந்தசஷ்டி கவசம் பாராயணஞ் செய்த பயனாக கேசர பாதமாகச் சிவனைப் போற்ற முதற் பாடலைப் பாடினார். ஒரு புனிதமான வெள்ளிக் கிழமையன்று தமது பனந்தோப்பில் வீழ்ந்திருந்த பனையோலை ஒன்றை எடுத்துத் தமது பாடல்களை எழுதுவதற்கான சட்டங்களாக வெட்டி எடுத்துக் கொண்டார். அதில் ஒரு ஏட்டுடன் கையில் எழுத்தாணி கொண்டு கிழக்குத் திசை நோக்கி அமர்ந்திருந்து "எனது ஆண்டவனாகிய குமரப்பெருமானே! பாடியேயறியாத யான் நின்னையே பல பாக்களாலும் பாடக்கடவேன். அருணகிரிநாதர் பெயர் வைத்தே பிரபந்தம் முடிக்கக்கடவேன்" என்று இறையருளை வேண்டினார். இறையருளின் பேருளினால் முதற்பாடலின் தொடராக "கங்கை யைச் சிறையில் பறித்து" என்று தொடங்கும் மங்கலகரமான வசனங்கள் ஊற்றெடுக்க அரிய பக்திமயமான பாடலொன்று உதயமானது.

தொடர்ந்து ஆசாரசீலமாக ஒரு பாடல் எழுதிய பின்பே உணவை உண்ணும் நியதியை நாளாந்தம் ஏற்படுத்தினார். இவரின் பாடலின் சிறப்பை அறிந்த அவ்வூர் சேதுராமையர் இவருக்கு ஒரு தைப்பூச நன்னாளில் திருஆறெழுத்து மந்திரத்தை உபதேசித்தார். ஒரு நாளிரவு ஆன்மீகப் பெரியார் உருவில் வந்த முருகப்பெருமான் இவரின் கனவிற்தோன்றி இவரை அழைத்துச் சென்று ஒரு மண்டபத்தில் பாற்சோற்றினைத் தமது கையினாற் பிசைந்து இவருக்குக் கொடுத்துத் தாமும் உட்கொண்டார். அன்று முதல் இவர் அழகிய அருட்பாக்கள் பாடும் திறனையும் பெற்றார். மேலும் தமிழ், வடமொழி நூல்கள் பற்றிய ஞானஅறிவையும் பெற்றார். இதனால் இவர் ஏகாந்தமாய் இறையருளை நாடி ஊரெல்லாம் உலாவந்தார்.

**முருகனின் கருணை**

ஒருநாள் இவர் பாத அணியின்றி வீதியோரஞ் சென்றபோது ஒரு காலில் நெருஞ்சிமுள் குத்தியதால் இறையருளை வேண்டி வருந்தினார். தமது பக்தன் வருந்தியதைப் பொறுக்க முடியாத முருகப்பெருமான் ஒரு தச்சுத் தொழிலாளியின் கனவிற்தோன்றித் தமது பக்தனுக்கு பாதக்குறடு (பாதுகை) செய்து வழங்குமாறு கூறியதுடன் அவரின் தோற்றத்தையும் நேரிற் காண்பித்தார். முருகனின் அன்புக் கட்டளையை ஏற்ற தச்சர் மறுநாட்காலை தமது கடமையை நிறைவு செய்தார். சுவாமிகள் முருகனின் பெருமையை வியந்து மேலும் பக்தி மேலீட்டினால் பல பாடல்களைப் பாடினார்.

**சுவாமிகளின் தவப்பேறும் அற்புதங்களும்**

சுவாமிகள் தமது 41ஆம் வயதில் இராமேஸ்வரச் சூழலிலுள்ள பிரப்பன் வலசை என்னும் மயானத்தில் ஆழமான சதுரக்குழி வெட்டித் தமது நியதியாக ஏற்றுத் தவஞ் செய்ய முற்பட்டார். குழியில் அமரும்போது "குமரகுரு குமரகுரு" என்று உச்சரித்தபடி தியானத்திலிருந்தார். அச்சமயம் பேய்கள் வந்து சுவாமிகளுக்கு இடையூறு விளைவித்தன. சுவாமிகள் முருகனின் திருஆறெழுத்து மந்திரத்தை ஓதிப் பேய்களை விரட்டி விட்டார்.

*ஆசை பேராசையானால் அமைதி விலகி ஓடும்.*

ஏழாம் நாள் அருணகிரிநாதரும் அகத்தியரும் அவ்விடத்திற்கு வந்து உடன் நிற்கப் பழநி முருகன் வந்து காட்சி கொடுத்து உபதேசஞ் செய்தருளினார். பழநி முருகனின் நல்லுப தேசத்துடன் சுவாமிகள் ஆழ்ந்த தவநிலையிலிருந்தார். சுவாமிகள் முப்பத்தைந்தாம் நாள் பூரண சித்தியுடன் வெளியே வந்து பார்த்த போது அந்த நாள் சித்திராபூரணையாக இருந் தது. சதுரக் குழியில் தமக்கு முருகன் அருளிய உபதேசத்தை "தகராலய இரகசியம்" என்னும் அற்புதமான நூலாக வெளிவர அருளினார்.

சுவாமிகளின் நெஞ்சில் உறைந்த முருகனின் ஆணைப்படி சுவாமிகள் தலயாத்திரை களைத் தொடர்ந்தார். சுவாமிகள் ஒரு நாள் நயினார்பிள்ளை என்பவரால் மாலைநேரம் வீட்டிற்கு அழைத்துச் சென்று இரவுநேர உணவை வழங்க ஏற்பாடு செய்திருந்தார். அச்சமயம் அவரின் மகன் ஒரு மூட்டுப்பூச்சியை நசுக்கிக் கொன்று விட்டான். இதனைக் கண்ட சுவாமி கள் இன்று இந்த வீட்டில் ஒரு இழவு நடந்ததாகக் கூறி உணவருந்த மறுத்துவிட்டார். மறு நாள் உணவை உண்டதும் ஜீவ "காருணியம்" தொடர்பான நற்போதனையும் செய்தார்.

## தலயாத்திரைகளும் அற்புதப் பாடல்களும்

1902இல் இவரது யாத்திரை காசியை அடைந்தது. காசியில் குமரகுருபரர் மடத்தில் தங்கினார். அவ்விடத்தில் மடத்தின் பெரியாரால் காவியுடை தரிக்கப்பெற்றார். இவரின் யாத்திரை சிதம்பரத்தை அடைந்தபோது சித்திரத்துட் சித்திரம் வரைந்து சித்திரக்கவி பாடினார். மேலும் இவரின் அகத்திலிருந்த சண்முகப் பெருமானின் விருப்பினால் அகரவரிசையில் (உயிர் எழுத்து 12, மெய்யெழுத்து 18 உட்பட) முப்பது பாடல்களைக் கொண்ட "சண்முக கவசம்" என்னும் அரிய நூலை ஆக்கித்தந்தார்.

## மருத்துவமனையில் சுவாமிகளுக்குதவிய மயில்களும் முருகனும்

சண்முககவசம், நவவீரர், நவரத்தினக்கலிவிருத்தம், தகராலய இரகசியம், சித்திரக்கவி போன்ற அரும்பெரும் தத்துவ நூல்களை எழுதி வழங்கியதுடன் பாதந்தேய நடந்து அரிய பெரிய பணிகளை முருகனின் அருளாசியுடன் போற்றி வந்தவர். ஒரு சமயம் சென்னையில் தங்கியிருந்த போது 1923இல் ஒரு நாள் நெடுஞ்சாலை வழியே சென்றிருந்தார். அச்சமயம் அவ்வழியே வந்த குதிரை வண்டிற் சில்லு இவரின் காலின் மீதேறியதால் இடது கணுக்கால் எலும்பு முறிந்தது. சிகிச்சைக்காக அவ்வூர் மருத்துவமனையிற் சேர்க்கப்பட்டார்.

## மருத்துவ மனையில் நிகழ்ந்த அற்புதம்

இக்கால நிலையில் சுவாமிகள் அகவை எழுபது கடந்த முதியவர். மேலும் ஆசாரம் பேணிக் கடலில் விளைந்த உப்பைச் சேர்க்காத உணவையே உண்டு வந்தார். இவரைப் பரிசோதித்த மருத்துவர் சுவாமிகள் உப்புச் சேர்க்காத உணவை உண்பதால் கால்வருத்தம் சுகப்படுத்த முடியாததெனத் தெரிவித்தார். இதனைக் கேட்டதும் சுவாமிகள் "முருகா, கேவலம் உப்பால் ஆகக் கூடிய காரியத்தை உன் திருவருளால் நிறைவேற்ற முடியாதா" என வேண்டியவாறு உறங்கி விட்டார்.

*சந்தேகம் உள்ளே புகுந்தால் அன்பு வெளியே போய்விடும்.*

அப்போது சுவாமிகள் படுத்திருந்த கட்டிலின் மீது எங்கிருந்தோ வந்த இரு மயில்கள் சுவாமிகளின் பாதங்களைத் தமது நீண்ட செம்பொற்தோகைகளால் வருடின. உறக்கத்திலும் வலியுணர்வுடனிருந்த சுவாமி கள் தமது வலியை நீக்க உதவிய கார ணத்தை விழிப்புடன் நோக்கினார். மயில்கள் இரண்டும் சுவாமிகளின் பாதங்களை வருடி யதை நோக்கியதும் "முருகா" என்றார். அச் சமயம் அங்கு வந்த சிறுவன் சுவாமிகளின் கட்டிலில் அமர்ந்து தமது திருக்கரத்தால் ஊனமுற்ற பாதத்தை லேசாகத் தடவினான். முறிந்த எலும்பு முற்றாகக் குணமடைந்தது.



சுவாமிகள் தமது நோய் குணமடைய வந்து உதவியது முருகனே என்றெண்ணி எழுந்து கைகூப்பி வணங்கினார். அச்சிறுவன் கணப்பொழுதில் மறைந்துள்ளான். தமது கடமை அனுபவத்தால் மாற்ற முடியாதென்ற நோய் குணமடைந்ததை நேரிற் கண்ட மருத் துவர்கள் பெருவியப்படைந்தனர். முருகனின் அருளை ஆரம்பத்திலிருந்தே தமதாக்கிய பாம்பன் சுவாமிகள் தமது நன்றிக்கடனாக 6666 பாடல்களை முருகப்பெருமானின் பேரரு ளால் பாடிச் சைவ உலகை இன்புற வைத்தார்.

முருகனருளையே வியந்து வாழ்ந்த பாம்பன் சுவாமிகள் தமது பூலோக வாழ்வில் தமது நியமப் பணிகளை நிறைவு செய்ததும் 30.05.1929 அன்று மகாசமாதியடைந்தார். மறுநாள் சுவாமிகளின் அடியார்கள் சமாதிக் கடமைகளைப் பயபக்தியுடன் வெகுசிறப்பாக நடாத்தினர். தொடர்ந்து சமாதிக்கான சடங்கு கள், பூசைகளை உரிய காலத்திற் செய்து வழிபட்டனர். உள்ளூர் மற்றும் வெளியூர் பக்தர்கள் சுவாமிகளின் சமாதி நிலையையும் அவரின் அற்புதச் சிறப்புக்களையும் நன்கு உணர்ந்தனர். பாம்பன் சுவாமிகளின் பெரு மைக்காக தனியான நகரமைத்து பெருங் கோயில் கட்டி வழிபட்டு வருகின்றனர்.

இவ்வடியார்களின் பக்தர்களில் முன்னோடியாக முன்னாள் புகைவண்டிச் சாரதியான இராமச்சந்திரன் என்பவர் சுவாமி கள் தவஞ்செய்த சதுரக்குழியைப் பார்த்ததும் ஞான அறிவினால் கவரப்பட்டு அவரின் நூல் களையெல்லாம் முறைப்படி பாராயணஞ் செய்து பெரும்பேறுபெற்றார். இராமச்சந்திர னின் தூண்டுதலால் எண்ணிறைந்த பக்தர் களின் உதவியால் அருகிருந்த இடையர்காடு என்னும் சிறியகாட்டை வெட்டிப் பெருங் கோயிலும் கோபுரமும் கட்டி வழிபாட்டிற்கு ஏற்றவாறு அமைத்து இயங்கவேண்டிய ஏற் பாடுகளையுஞ் செய்தனர். மேலும் ஆலயஞ் சிறக்க வாய்ப்பளித்து பாடசாலை, மருத்துவ மனை, கணனி மையம், தொழிற்பயிற்சி நிலையங்களையும் அமைத்துப் பொது மக்க ளைப் பேணினர்.

பாம்பன் சுவாமிகளின் தத்துவங் களையும் பணிகளையும் பின்பற்றி பய பக்தியுடன் நெறிப்படுத்தி வருகின்றனர். இராமச்சந்திரன் அவர்கள் சுவாமிகளின் சதுரக்குழியைப் பார்த்தது முதல் ஞான உணர் வுடன் யாவரும் கட்டியெழுப்பிய பகுதியை வளப்படுத்தி வருடா வருடம் பலமுன்னேற்றங் களையும் செயற்படுத்தினர். இராமச்சந்திர னின் பணிகளால் பாம்பன் சுவாமிகளின் 6666

பாடல்களும் யாவரும் பாராயணஞ் செய்யவும் அறவாழ்வு வாழவும் உதவினார். இவரின் ஞான உணர்வால் இவர் இராமச்சந்திர சுவாமிகள் எனப் போற்றப்பட்டார். அனைவரதும் பெருமுயற்சியும், பாம்பன் சுவாமி வாழ்ந்த அறவாழ்வும் முருகப்பெருமானின் பெருங் கருணையும் பாம்பன் சுவாமிகளின் சமாதியடைந்த பகுதி பாம்பன் சுவாமி நகர் என்னும் பெயருடன் சைவ உலகை அணி செய்கிறது.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாணத்தில் பிறந்து கொழும்பில் வசித்துவரும் பிரம்மஸ்ரீ கு. சிவராஜசர்மா அவர்கள் ஓர் சிறந்த சமய இலக்கியவாதி ஆவார். சிறுவயதிலிருந்து ஆன்மீகத்தில் மிகுந்த ஈடுபாடுடையவர். இலங்கை வங்கியில் நிறைவேற்று அதிகாரியாகப் பணிபுரிந்த போதிலும் சமயத் தொண்டுகளைத் தொடர்ந்தும் செய்து வந்தவர்.



ஆன்மீகம் சித்த மருத்துவம், மூலிகை மருத்துவம், யோகாசனம் போன்ற துறைகளில் ஈடுபாடுடையவர். இவர் இலங்கையின் பல பாகங்களிலும் சமயச் சொற்பொழிவுகளை நிகழ்த்தியுள்ளார். இவரது ஆக்கங்கள் பலவும் உதயன், வலம்புரி, வீரகேசரி, தினகரன் ஆகிய பத்திரிகைகளில் பிரசுரமாகியுள்ளன. வாழ்க்கைக்கு அருணகிரி, மங்கள மஞ்சரி, குருமலர், இந்துசமய வழிபாட்டு தகவல் திரட்டு ஆகியவை இவர் எழுதி வெளியிட்ட நூல்களில் குறிப்பிடத்தக்க சிலவாகும். இவர் இலங்கை வானொலியிலும் சமயச் சொற்பொழிவுகளை நிகழ்த்தியுள்ளார்.

இவரது சமயப் பணியைப் பாராட்டி சர்வதேச இந்துமத பீடத்தினால் "சிவநெறிச் செம்மல்" என்றும் கந்தர்மடம் பிள்ளையார் ஆலயத்தினால் "சிவசுரபி" என்றும் வண்ணை வெங்கடேஸ்வர வரதராஜப் பெருமாள் ஆலயத்தினால் "பிரசங்க பூபதி" என்றும் பட்டங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவர் சந்நிதியான் ஆச்சிரம ஆரம்பகாலம் தொடக்கம் தொடர்புகளைப் பேணி பல வருடங்களாக தெய்வீகப் பேருரைகளை நிகழ்த்தியுள்ளார். வர்ணம் தொலைக்காட்சியில் தொடர்ந்து ஆன்மீகப் பேருரைகளை நிகழ்த்தி வருகின்றார். ஞானச்சுடரிலும் பல சமயக் கட்டுரைகளை எழுதியுள்ளார். இவரின் தெய்வீகப் பணி மேன்மேலும் சிறக்க சந்நிதியானை வேண்டுகின்றோம்.

*அறிவைவிட ஆற்றலே அதிகம் சாதிக்கும்.*

(தொடர்ச்சி...

# கண்டோம் கதிர்காமம்

– திரு அன்னைதாசன் அவர்கள் –

ஆம்! இப்பொழுது பிரதான வீதியில் இருந்து திரும்பி றொசாட் தமிழ் மகா வித்தியாலயத்தை நோக்கி எமது வாகனம் சென்று கொண்டிருக்கிறது. சிறிது தூரம் சென்றதும் தான் பாதையின் சீரகேடும் பயங்கரமும் தெரிகிறது. மிகமிக உயரமான பகுதியை நோக்கிச் செல்லும் சாலை. எதுவித பராமரிப்பும் இன்றி அந்நாட்களில் எமது வல்லைச் சந்தி தொண்டைமானாறு பாதை இருந்ததுபோல அருகு எல்லாம் உடைந்து ஒடுங்கியிருந்தது. ஒரே ஒரு வாகனம்தான் செல்லக்கூடிய அகலம். முந்த வேண்டுமானால் ஒவ்வொரு குறிப்பிட்ட இடங்கள்தான் உண்டு. ஒன்றில் முன் செல்ல வேண்டும். அன்றேல் பின் சென்றே மறு வாகனஞ் செல்வதற்கு வழிவிடவேண்டும். எமது சாரதி இறங்கி நடந்து பார்த்து வண்டியைச் செலுத்த முடியுமோ என்று ஆய்ந்து ஆய்ந்து தான் வண்டியை ஓட்டிக் கொண்டிருக்கிறார். படு பயங்கர வளைவுகளைத் தாண்டி ஒரு மாதிரியாகப் பாடசாலையை நெருங்கிவிட்டோம். ஆனால் அதற்குமேல் எமது வாகனத்தைக் கொண்டுசெல்ல முடியாது. அனைவரும் இறங்கி கால்நடையாகவே நடந்து ஏறிச் செல்கிறோம். இதன் சாலை ஓரத்திலும் ஓர் ஆலயம் விநாயகர் ஆலயம் போலுள்ளது. ஆனால் எல்லாப் பரிவாரங்களும் உண்டு. சிறிதாக இருந்தாலும் ஓரளவு நேர்த்தியாக அமைத்துள்ளனர்.

கிட்ட நெருங்கியதும் அதோ பாடசாலையென்று எம்மை அழைத்துவந்த யோகேஸ்வரன் அதிபர் அவர்கள் காட்டுகின்றார். மேலே பார்க்கிறோம் இரண்டு மண்டபங்கள் இருவேறு மட்டங்களில் தெரிகிறது. முதலில் இருந்தது பாடசாலை அலுவலகமும் அதனோடு சேர்ந்த வகுப்பறைகளும் அப்பால் தெரிந்ததுதான் எமது விழா மண்டபமாம். அம்மண்டபத்திற்கு எம்மை அழைத்துச் சென்றனர். அவ்வேளை வகுப்பு அறைகளைப் பார்வையிட்டேன். அந்த நாட்களில் எமது பாடசாலைகளை திணைக்களத்தினர் இருவேறு நிலைகளில் பிரித்திருந்தனர். ஒன்று கஷ்டப் பிரதேசப் பாடசாலை, மற்றையது சாதாரண பாடசாலை. அதே காட்சிதான் எனக்குத் தோன்றியது. இது ஓர் கஷ்டப் பிரதேசப் பாடசாலையா? என ஆனால் பிற்பாடு ஆசிரியர்களுடன் தொடர்புகொண்டபொழுது அப்படியானால் இங்கு பல பாடசாலைகள் கஷ்டப் பிரதேசப் பாடசாலை என்ற பகுதிக்குள் சேர்க்கும் நிலையில்த்தான் ஐயா என்றார்கள்.

ஒரு 60’x20’ கொண்ட கட்டிடத்தை தருணத்திற்கேற்ற மண்டபமாக்கும் வண்ணம் ஒரு மேடையும் அமைத்து கச்சிதமாக அமைத்திருந்தனர். ஆசிரிய மாணவ கதிரைகளினாலேயே இருக்கைகளை அமைத்திருந்தனர். மண்டபம் நிறைந்த ஜனத்திரள். பெற்றோர்களிலும் பிள்ளைகளிலும் வறுமையின் சாயலும், அறிவின்மையின் சாயலும் தெரிந்தது. அசல் நாட்டுப்புறப் பாடசாலைபோன்று அனைத்துச் சூழலும்.

அரங்கிற்கு “கம்பன் கலை அரங்கு” எனப் பெயரிட்டிருந்தனர். அதன்கீழே ஒரு

வாசகம் எழுதியிருந்தார்கள். அந்தக் கணத் தில் அவ்விடத்தில் இதைப் படித்த எம்மவர் கள் சிலரின் நெஞ்சங்களை மிகவும் நெருடிய தாக உணர்வுபூர்வ அழகுத் தமிழ் வரிகள். இவ்வளவு பெரிய வசதி வாய்ப்புக்கள் அறிவு மேம்பாடு உள்ள எந்தப் பாடசாலையிலும் இத்தகு வரிகளை இங்கே இன்றுவரை காண வில்லை. அங்கு பொறித்திருந்தார்கள். "வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்" என்ற அந்த வீர வசனம் எம்மை ஒரு கணம் சிலிர்க்க வைத்தது.

தொடர்ந்து வரவேற்பு நடனத்துடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. மிக அற்புதமாக தங்கள் வசதிக்கேற்ற வகையில் பிள்ளைகள் ஆடை அலங்காரங்களுடன் C.D பின்னணி இசையில் ஆடி எம்மை வரவேற்றனர். அறி முக உரையை அதிபர் யோகேஸ்வரனே நிகழ்த்தினார்கள். இப்பொழுதுதான் சந்நிதி யானின் அருட்தூண்டலை அடியேன் உணரக் கூடியதாக இருந்தது. இந்த அதிபரும் இப்பாடசாலை அதிபரும் நண்பர்கள். சந்நிதி யானின் ஆன்மீகப்பணி மலையகத்திற்கும் விரிந்து தொடர்ந்து நடைபெற்றுக் கொண் டிருப்பதை அறிந்தவர் தங்கள் பாடசாலைக் கும் எம்மை அழைக்க ஆவலுற்று அழைத்த செய்தி புரிந்தது. என் மனங்கூட எண்ணியது. ஆம் இத்தகு பாடசாலையைத் தரிசிக்க வைத்ததே அந்த அழகனின் அருள்மட்டு மல்ல அவன் எங்களூடாக இந்த ஏழைப் பள்ளிகளை ஈடேற்ற சங்கல்ப்பித்தான்போலும். அத்துடன் அந்த ஊவா கல்வி வலயத்தில் பல பாடசாலைகள் இத்தகு வசதியீனங்களு டன் உள்ளன என்பதைப் பட்டியலிட்டதுடன் அவர்களது பிரதான கோரிக்கையாக கணித விஞ்ஞான ஆசிரியத் தட்டுப்பாடே காரணம். ஏனைய தமிழ்த்துறைப் பிரிவுகளுக்கு மாண வர்கள் உயர்தரத்தில் கற்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளதால் அவற்றிற்குரிய ஆசிரியர் களைத் தாமே தமது பகுதிகளில் இருந்து பெறும் வாய்ப்பிருந்த பொழுதிலும் A/L விஞ்ஞானப் பிரிவு கற்று ஆசிரியர்களாகும் வாய்ப்பின்மையை வெகு அழகாக விளக்கி இருந்தார்.

ஆம் ஞானச்சுடர் வாசகர்களே! எமது பயணத்தின் அவசியத்தையும் சேவையின் தன்மையையும் உணர்த்தும் ஆவணப் பதிவு கள் இதோ, மலையக மீரியப்பெத்தை மண்சரிவும் தாக்கமும் அதன் எதிரொலியும் 20.02.2016 சந்நிதியான் ஆச்சிரம வெளியீடு பக்கம் 19. பயணம் 7இல் குறிப்பிட்டதை அப்படியே தருகிறேன்.

"ஊவா மாகாணத்தில் கல்வி கற்ற பதினொரு மாணவர்களையும் - உயர் கல்வி கற்கும் நோக்குடன் யாழ்ப்பாணம் அழைத்து- யாழ் பாடசாலைகளில் அவர்களை இணைத்து- கல்விச் செயற்பாடு உள்ளிட்ட அனைத்துத் தேவைகளையும் சைவ மகா சபையும்- சந்நிதி யான் ஆச்சிரமமும் கூட்டாக நிறைவேற்றிக் கொண்டு இருப்பதால், பதினொரு பொறி யியல்- மருத்துவப் பட்டதாரிகள் மலையகத் திற்குக் கிடைப்பார்கள்" இது இங்குள்ள கல்வியியலாளர்களது கருத்தின் சாராம்சம்.

எனவே அன்பான வாசகர்களே எமது இப்பயணப் பணிகள் ஆகக் குறைந்தது ஆறு விஞ்ஞானப் பட்டதாரிகள் ஆவது உருவாக அடித்தளமிட்டுள்ளது என்பது அடியேனது பட்டறிவு.

அதுமட்டுமல்ல மாணவர்களும் கற்று முன்னேற வேண்டும் என்றதுடிப்புடன் விடு முறை நாட்களிலும் கூடிவந்து பங்குபற்றி பயனுறும்பாங்கு எம்மால் உணர முடிகிறது. அதனைத் தொடர்ந்து இம்மாணவர்களின் அடைவு மட்டங்களை அம்மேடையில் அவர் களைப் பற்றிய அதிபர் ஆசிரியர்களே விதந் துரைத்தபொழுது அவ்வேழைப் பிள்ளைகள் இவ்வளவு பின்தங்கிய நிலையில் இருந்த

*இறைவன் விரும்பும் மந்திரம் இன்சொல்.*

பொழுதிலும் இப்படிப் பிரகாசிக்கின்றார்களே என்று எம்மோடு வந்த பலர் தங்கள் அன்பு வெகுமதிகளைப் பிள்ளைகளிற்கு வழங்கி ஆனந்திக்க வைத்த அந்தக் கணங்கள் அற்புதம், ஆனந்தம். நோயுள்ளவனுக்கே வைத்தியம் தேவை. முருகன் சரியான இடத்திற்கு எம்மை அழைத்து வந்து எம்மூடாக இதை வாசிக்கும் அன்புள்ளங்களிற்கு அவர்களின் பெருமைகளையும், தேவைகளையும் தெரியப்படுத்தியிருக்கும் ஓர் தெய்வீக உதவிப் பணிக்கு வாசகர்களை ஊக்குவிக்கும் அற்புத வரிகள் இவை.

ஒரு சிறு மாணவன் அவனும் வலய மட்டத்தில் பரிசு பெற்றவனாம். அவனது தமிழ் வரிகள் அற்புதம். தமிழ் கையாடல் ஆசிரியர்களின் வழிகாட்டலுக்கு அற்புதச் சான்று. கம்பன் கலை அரங்கு என்ற நாமம் அவர்கள் கையாண்ட தமிழால் களை கட்டியது.

(காட்சி தொடரும்...

**வேலுண்டு வினையில்லை!**

வேலுண்டு வினையில்லை மயிலுண்டு பயமில்லை
நீயுண்டு குறைவில்லை சந்நிதி முருகா!
நினைப்புண்டு மறப்பில்லை முருகா! சீருண்டு சிறப்புண்டு
செந்தமிழ்ப் பாட்டுண்டு பேருண்டு புகழுண்டு முருகா!

பெருமைக்கு நீயுண்டுவேல் முருகா! ஊருண்டு
உலகுண்டு உள்ளத்தில் நீயுண்டு முருகா!
காருண்டு கவியுண்டு முருகா!
கருணைக்குநீயுண்டு முருகா நீருண்டு நெருப்புண்டு.

நெற்றியில் கருவுண்டு வீறுண்டு வந்தவா முருகா
வெற்றிகள் தந்தவர முருகா! வானுண்டு மழையுண்டு
வள்ளலும் நீயுண்டு தேனுண்டு அமுதுண்டு முருகா
செல்வச்சந்நிதி ஆற்றங்கரை உண்டு முருகா!

பொன்னுண்டு பொருளுண்டு போற்றிட அருளுண்டு
கண்ணுண்டு கருத்துண்டு முருகா!
வாழ்வுண்டு வளமுண்டு வரவுக்கு உறவுண்டு
காலுண்டு நடையுண்டு சந்நிதி முருகா!

கவியுண்டு இசையுண்டு முருகா!
நெஞ்சுண்டு நினைப்புண்டு நேருண்டு சீருண்டு
கொஞ்சிடும் குழந்தையே முருகா!
கும்பிட அருள் தந்திடும் முருகா!


பூவுண்டு நீருண்டு புண்ணியச் செயலுண்டு
பாவுண்டு பண்ணுண்டு முருகா செல்வச்சந்நிதிக்கு
நிகரில்லை முருகா அன்புண்டு அருளுண்டு
ஆனந்தம் மிகவுண்டு பண்புண்டு.

ஸ்ரீ செல்வச்சந்நிதியில் முருகா!
பக்தியின் சக்தியே முருகா!!


-திருமதி நாகேஸ்வரி கந்தசாமி-

ஞானம் வரும்போது அகங்காரம் அகன்று போகும்.

# படங்கள் தரும் பதிவுகள்



கதிர்காம உற்சவத்தையொட்டி ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்தும் சந்நிதியான் ஆச்சிரமத்திலிருந்தும் நடைபெறும் பாதயாத்திரை நிகழ்வு.






கதிர்காம உற்சவத்தையொட்டி ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்தும் சந்நிதியான் ஆச்சிரமத்திலிருந்தும் நடைபெறும் பாதயாத்திரை நிகழ்வு.



தியானம் செய்வதால் மனம் உறுதியடைகிறது.

# சந்நிதியான் ஞானச்சுடர் வேலழகு

– திரு வ. சிவனேசன் அவர்கள் –

ஞானச்சுடர் வேலழகு ஞாலம் போற்றும் அருளழகு
செங்கமல வடிவழகு செவ்வான ஒளி அழகு
தாமரையின் இலை அழகு தனியான தமிழழகு
தாமரையின் மேலழகன் தனியான பேரழகு
அழகன் என்ற சொல்லுக்கு ஓம் முருகா தனியழகு
ஆழ்கடலின் தனியழகு மலர்வண்ண நிறத்தழகு
இத்தகைய அழகுதனைக் காணுகின்ற மனம் அழகு
இதயகமலம் மலரவைக்கும் ஞானச்சுடர் அழகு என்னே!

வாயில் முகப்பழகு கோபுரம் போல் பேரழகு
முகப்பின்மேல் வேல் நடுவாய் சேவலொடு மயிலழகு
மண்டபம் தனியழகு மாபிள் வண்ண நிறமழகு
மண்டபத்தின் நடுவினிலே நந்தியதன் சிறப்பழகு
தனிநாத மணியழகு கோபுரமோ மலையழகு
பூர்வீக நாதமணி அருளோசை தனியழகு
நாவல் மரம் தனியழகு பூர்வீகப் பேரழகு
அன்பருள்ளம் மலரவைக்கும் சந்நிதியான் பேரழகு.

முதற்பூசை ஏற்றருளும் ஐங்கரனார் தனியழகு
சித்திரம்போல் வடிவுகொண்ட அருட்கோயில் சிறப்பழகு
ஐங்கரனார்முன் அமைந்த அருட் தீர்த்தம் தனி அழகு
சண்முகனார் வாசலிலோ தூபியோ பேரழகு
ஆவலொடு கையெடுப்போர் வாழ்வெல்லாம் அருளழகு
ஆடுமயில் மேலான சண்முகனோ பேரழகு
அருள் லிங்க நாதனான சிவனழகு தனியழகு
அழகுக்கு அழகுதரும் சந்நிதியான் பேரழகு.

மண்டபமோ பேரழகு மனங்குளிரும் தனியழகு
ஆறுதலாய் வீதிசுற்றும் அடியவரின் நடை அழகு
தலவிருட்சம் பேரழகு அற்புதத் தனியழகு
தலவிருட்ச நீழலிலே தவமிருப்போர் சிறப்பழகு
தவமிருக்கும் அடியவரின் பஜனைப்பாடல் ஒலி அழகு
தமை மறந்து ஆடுமன்பர் நடனமது அருளழகு
அடியவரைச் சூழ்ந்துநிற்கும் அடியவர்கள் அரனழகு
ஆனந்த நடமாடும் சந்நிதியான் பேரழகு.

*உழைப்பிலேதான் சுகமே உள்ளது.*

பூவரசின் நீழலிலே லிங்கநாதன் சிறப்பழகு
நாகங்கள் புடைசூழ நாகலிங்கம் பேரழகு
பூசைவேளை அபிசேகம் தனியான சிறப்பழகு
தீர்த்தமதை மருந்தாக அருந்துவது அருளழகு
வாய்கட்டிப் பூசை செய்யும் குருநாதன் அன்பழகு
அமுதூட்டும் பெரும்பூசை ஆனந்தப் பேரழகு
அருளொளியாம் கந்தனவன் கருணையுமோ சிறப்பழகு
வள்ளித்தாய் நாயகனாம் சந்நிதியான் பேரழகு.

வேடர் குலவிளக்கான வள்ளித்தாய் பேரழகு
வேலேந்தி விளையாடும் சண்முகனோ தனியழகு
கதிர்காமத் தாயான வள்ளித்தாய் மனமழகு
மான் மகளாம் வள்ளித்தாய் தவத்தழகோ தனியழகு
உற்சவ காலத்தில் நடக்கும் பூசை சிறப்பழகு
தீர்த்தம் தரும் கிணற்றடி திருவருட் பேரழகு
திருவருள் நிறைந்த இடப் பூவரசு தனியழகு
தினம் தினமும் அருள் வழங்கும் சந்நிதியான் பேரழகு.

பூங்காவனம் தன்னை நினைக்கின்ற மனமழகு
பூங்காவனம் நடக்கும் மண்டபமோ பேரழகு
பூங்காவனத்தன்று வேலவனோ தனியழகு
பாங்கான பக்தர் கூட்டம் அலைமோதும் தனி அழகு
அமுது படைக்கும் மடைப்பள்ளி அன்னையின் தனி அழகு
ஆலிலையில் அமுதூட்டும் அருட்சிறப்பு பேரழகு
சண்முகனார் கோயில் தனியான பேரழகு
சட்டியிலே மா வறுக்கும் சந்நிதியான் அன்பழகு.

சந்தன மண்டபமோ மங்களமாம் தனியழகு
கும்பமது வைத்துப்பூசை செய்கின்ற பேரழகு
குருமூர்த்தங் கொண்டகுரு செய்யும்பூசை பேரழகு
கும்பம் சுற்றிவரும் வேளை சொல்லொணாத அருளழகு
ஆதிமூலம் சென்ற குரு அபிசேகச் செயல் அழ்கு
ஆறுமுக வேலன் அவன் அருள் முழுக்கோ தனியழகு
கோமுகையால் பாலாறு அருட்தீர்த்தப் பேரழகு
தீர்த்தமெனும் திருமருந்தே சந்நிதியான் பேரழகு.

அபிசேகம் சிறப்பழகு அருள்முழுக்கோ தனியழகு
ஐங்கரனின் பூசையது அருள் செறிந்த தனியழகு
சந்நிதியான் வாயிற் பூசை சாந்தி தரும் பேரழகு

ஆதிமூல வேலழகோ சொல்லொணாத அருளழகு
வேலழகன் சண்முகனாய் காட்சிதரும் பேரழகு
அருள்நிறைந்த குருமார்கள் அர்ச்சிக்கத் தனியழகு
ஆறு குருமாருமே தீபமேந்த தனியழகு
சண்முக அர்ச்சனையோ தனியான சிறப்பழகு
சந்நிதியான் ஆதிமூல ஒளிமயமே தனியழகு.

ஆறுமுகன் பஞ்சதீபம் காண மனம் ஒளி அழகு
ஆறுமுக ஜோதிகண்ட அடியவரின் முகம் அழகு
அற்புத வடிவேலன் செய்யும் அருள் சிறப்பழகு
பேரன்புக் குருநாதன் நீறிடுதல் தனியழகு
தீர்த்தமது வழங்குவது சிறப்பான பேரழகு
அடியவர்கள் மனமுருக வணங்குவது தனியழகு
அனைத்துமே சந்நிதியில் அடியவர்கு அழகுதானே.

## கர்வம் நீங்கிய நந்தி

அமிர்தம் வேண்டி பாற்கடலைக் கடைந்தபோது ஆலகால விஷம் உருவானது. அதனைச் சிவபெருமான் உண்டார். இதனால் அவரது உடலில் உஷ்ணம் ஏறியது. அப்போது அவர் எதிரில் இருந்த நந்தியின் மூச்சுக்காற்றுப்பட்டு, சிவபெருமானின் உடல் குளிர்ந்து சாந்தமடைந்தது. இதனால்த்தான் பிரதோஷ காலத்தில் நந்திதேவருக்கும், சிவபெருமானுக்கும் இடையே யாரும் வரக்கூடாது என்று கூறுவதுண்டு. நந்தியின் மூச்சுக் காற்றை தடுக்கும் வண்ணமாக செல்லுதல் கூடாது என்பதாலேயே இந்தக் கட்டுப்பாடு. தன்னுடைய மூச்சுக் காற்றால்த்தான், சிவபெருமானின் உடல் உஷ்ணம் குறைந்தது என்பதை நினைத்து நந்திக்கு கர்வம் தலைக்கேறியது.

இதையறிந்த ஈசன் சினம் கொண்டார். மறுகணமே நந்திதேவர் சித்தம் கலங்கி, தானாகவே சிரிக்கத் தொடங்கினார். இதனைக் கண்ட பார்வதிதேவி, நந்தியிடம் கருணை காட்டும்படி சிவபெருமானை வேண்டினார். இதையடுத்து அரிசியில் வெல்லம் கலந்த காப்பரிசி அருமருந்தாக நந்திக்குக் கொடுக்கப்பட்டது. மேலும் விநாயகரின் விருப்பப்படி நந்திக்கு அறுகம்புல் மாலையும் சூட்டினர். இதனால் நந்தியெம்பெருமான் சிந்தை தெளிந்து மீண்டும் பழைய நிலையை அடைந்தார். இன்றும் பிரதோஷ காலத்தில் நந்தி பகவானுக்கு அறுகம்புல் மாலை சாத்தி, காப்பரிசி நைவேத்தியம் செய்யப்படுவதைக் காணலாம்.

*-பொ. கந்தையா-*

(கட்டுரைத்தொடர் - 20

# சித்தர்களின் ஞானம்

– திரு சிவ மகாலிங்கம் அவர்கள் –

## பதினெண் சித்தர்களில் அகத்தியர்

அகத்தியர் சித்தர்களிலே தலைசிறந்தவராகக் கருதப்படுகிறார். தமிழுக்கு முதலில் இலக்கணம் செய்தவர் அகத்தியர் என்றும், அந்நூல் அகத்தியம் என்று பெயர்பெறும் என்றும் கூறுவர். அது முத்தமிழுக்கும் இலக்கணம் கூறும் நூல் என்பர். ஆனால் அந்நூல் இப்பொழுது கிடைக்கவில்லை. சிற்சில நூற்பாக்கள் மட்டும் உரையாசிரியர்களால் எடுத்தாளப்பட்டுள்ளன.

ஆதி சிவன் பெற்று விட்டான் ஆரிய மைந்தன் அகத்தியன் என்றோர்
வேதியன் கண்டு மகிழ்ந்தே மேவு இலக்கணம் செய்து கொடுத்தான்

எனத் தமிழ் வாழ்த்துப் பாடல் ஒன்றும் அகத்தியரே தமிழ் மொழிக்கு இலக்கணம் செய்தார் என்று கூறுகிறது. திருக்கைலாயத்திலே திருநந்தி தேவரின் மாணவராக இருந்த சுந்தரநாதன் (திருமூலர்) அகத்திய மாமுனிவரைக் காண்பதற்காகவே தமிழகம் வந்தார் எனத் திருமூலரின் வரலாற்றிலும் கூறப்பட்டுள்ளது. "கற்றாரைக் கற்றாரே காமுறுவர்" என்ற வாக்கிற்கு அமையக் குறுமுனி அகத்தியரைக் காண்பதற்காகத் தவயோகி திருமூலர் வருகை தந்திருந்தார்.

அகத்தியருக்கு முருகப்பெருமான் தமிழ் இலக்கணம் கற்பித்தார் எனப் புராணங்கள் கூறுகின்றன. இவர் பொதியமலையிலிருந்து தமிழைப் போதித்து வருகிறார் என்றும் உரைப்பர். அகத்தியருடைய பெயரிலே ஏராளமான வைத்திய நூல்கள் காணப்படுகின்றன. சில மருந்து களுக்கும் இவருடைய பெயர் வழங்கப்படுகிறது. சித்த மருத்துவ முறையை வகுத்தவர்களில் அகத்தியர் தலையானவர் என்றும், ஆயுர்வேத சூத்திரங்களுக்கு இவர் உரை எழுதியிருக்கிறார் என்றும் கூறுவர்.

வியாசருடைய பெயரில் பல நூல்கள் வெளிவந்ததுபோல அகத்தியருடைய பெயரில் பல நூல்கள் வெளிவந்திருக்கின்றன. அகத்தியருடைய பெயரில் சங்க இலக்கியங்களில், புராணங்களில், சித்த மருத்துவத்தில், சோதிடத்தில் பல பாடல்கள் காணப்படுகின்றன. வெவ்வேறு காலங்களில் வாழ்ந்த அறிஞர் பெருமக்கள் அகத்தியர் என்ற பொதுப் பெயரைக் கையாண்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. இவரது பாடல்களில் வேதாந்தக் கருத்துக்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன.

"மாடு தானானாலும் ஒரு போக்குண்டு; மனிதனுக்கோ அவ்வளவுத் தெரியாதப்பா"

என்று உலகியல் வாழ்க்கையை இடித்துரைக்கின்றார் அகத்தியர்.

"உடலுயிரும் பூரணமும் அயன்மாலீசன்
உலகத்தோரறியாமல் மயங்கிப் போனார்
உடலுயிரும் பூரணடி முடியுமாச்சே"

என்று தத்துவக் கருத்துக்களையும் எடுத்துரைக்கின்றார்.

நாவை அடக்கினாலே ஞானியாகி விடலாம்.

மனமது செம்மையானால் மந்திரஞ் செபிக்க வேண்டா
மனமது செம்மையானால் வாயுவை உயர்த்த வேண்டா
மனமது செம்மையானால் வாசியை நிறுத்த வேண்டா
மனமது செம்மையானால் மந்திரஞ் செம்மையாமே.

என்று மனச் செம்மை முதலான அறநெறிகள் பலவற்றையும் எடுத்துரைக்கின்றார்.

சித்த வைத்தியத்திற்கு அகத்திய மாமுனி செய்த பணி அளவிடற்கரியது. இன்றைய மருத்துவ அறிஞர்களும் விடை காணமுடியாது தவிக்கும் பல நோய்களுக்கும், மருத்துவ சந்தேகங்களுக்கும் சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தெள்ளத் தெளிவாக அகத்தியர் விளக்கம் கொடுத்துள்ளார் என்று பதினெண் சித்தர்கள் வரலாறு என்ற நூலில் சி.எஸ். முருகேசன் குறிப்பிட்டுள்ளார். அகத்தியரின் கொள்கைகள் செவிவழியாக, கர்ண பரம்பரையாக தலைமுறை தலைமுறையாகக் கூறப்பட்டு நூல் வடிவம் பெற்றிருக்கலாம் என்பதே ஆய்வாளர்களின் கருத்தாகும்.

அகத்தியர் ஞானம் என்ற பெயரிலே பதினெண் சித்தர் ஞானக் கோவையிலே இருபத்தாறு பாடல்கள் காணப்படுகின்றன. மக்களுக்கு அறிவு புகட்டும் பாடல்கள் சித்தர்களின் மத சமுதாயக் கொள்கைகளை விளக்கும் பாடல்கள். மக்களுக்குப் பகுத்தறிவு உணர்ச்சியை ஊட்டும் கருத்துள்ள பாடல்கள் எனப் பலவகையான பாடல்கள் அகத்தியர் ஞானத்தில் காணப்படுகின்றன.

ஆன்ம விடுதலை பெறுவதற்குரிய வழி யாது? என்று அகத்தியர் கூறுகின்றார். ஆசை, கொலை, களவு ஆகியவற்றைச் செய்யக்கூடாது; கோபத்தை நமது அகத்திலே இருந்து நீக்கிவிட வேண்டும். புண்ணியம் தரும் செயல்களையும் நல்வினையையும் வாழ்வில் செய்ய வேண்டும். தீய செயல்கள் எதனையும் செய்யக்கூடாது. என்றே நமது சாஸ்திரங்களும் கூறுகின்றன. பழிச் சொல்லில்லாதவர்கள் வழியை எண்ணிப் பார்க்கவேண்டும். நல்லோர் காட்டும் வழியைப் பின்பற்றி நடக்க வேண்டும் என வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கான ஆலோசனைகள் பலவற்றைத் தனது பாடலின் ஊடாக வெளிப்படுத்துகின்றார்.

மோட்சமது பெறுவதற்குச் சூட்சஞ் சொன்னேன்
மோகமுடன் பொய் களவு கொலை செய்யாதே
காய்ச்சலுடன் கோபத்தைத் தள்ளிப்போடு
காசினியிற் புண்ணியத்தைக் கருதிக் கொள்ளு
பாய்ச்சலது பாயாதே பாழ்போகாதே
பல வேத சாத்திரமும் பாரு பாரு
ஏச்சலில்லாதவர் பிழைக்கச் செய்த மார்க்கம்
என் மக்காளெண்ணி யெண்ணிப் பாரீர் நீரே.

"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்" என்றே இந்து சமயத் திருநூல்கள் அனைத்தும் கூறுகின்றன. உலகியல் வாழ்க்கையை சாபக்கேடன்றோ, தண்டனையன்றோ இந்து சமயம் குறிப்பிடவில்லை. வரப்பிரசாதம் என்றே கூறுகிறது. உடலும் உயிரும் வேறல்ல. இரண்டும் ஒன்றுதான் என்பது அகத்தியரின் கருத்தாகும். மாயையின் கூறு என்று சொல்லப்படும் உடம்பும், தனியானது என்று கூறப்படும் உயிரும் பூரணம் என்று அழைக்கப்படும் பதியும்

ஒன்றே என்பது இவரின் சிந்தனையாகும். மனிதப் பிறவி எடுத்த ஒருவரும் பாவிகள் அல்ல. ஆனந்தமயமானவர்கள் என்றே வீரத்துறவி சுவாமி விவேகானந்தரும் கூறுகின்றார்.

உலக வாழ்வில் இன்பம் இல்லை; நிலையற்ற உடலை நம்பி வாழ்வது துன்பத்தைத் தரும் எனக் கருதக்கூடாது என்கிறார் அகத்தியர். வயிற்றுப் பிழைப்புக்காகப் பல்வேறு வேடங்களைப் பூண்டு அலைய வேண்டாம். வாய் ஞானம் பேசித் திரிய வேண்டாம். உடல் நிலையற்றது. உலகம் பொய் என்று கூறிக்கொண்டு பரதேசியாக வீடுகள் எல்லாம் இரந்து பிச்சையேற்பவன் மூடன்; தன்னைத் தானறியாத சண்டாளன்; உருவத்தில் மனிதனாக இருந்தாலும் செய்கையில் அறிவற்ற மாடு; இத்தகைய பாவியர்கள், வஞ்சகர்கள், வேடதாரிகள் கூறும் வார்த்தைகளைக் கேட்கவே கூடாது. ஏமாற்றுக்காரர்களின் வலையில் சிக்கக் கூடாது. யார் எதைக் கூறினாலும் நன்றாக ஆராய்ந்து பார்த்தே முடிவுக்கு வரவேண்டும். பிறருடைய பேச்சுக்களைக் கேட்டு புத்தி தடுமாறக் கூடாது. மனத்திலே குழப்பம் ஏற்படாமல் உறுதியுடன் இருக்க வேண்டும் என்பதை சித்த புருஷராகிய அகத்தியரின் பின்வரும் பாடல் தெளிவாக விளக்குகிறது.

வாழாமல் உலகை விட்டு வேடங்கள் பலவும் பூண்டு
வயிற்றுக்காய் வாய்ஞானம் பேசிப் பேசி
தாழ்வான குடிதோறும் இரப்பான் மட்டை
தனை அறியாச் சண்டாளன் முழுமாடு அப்பா
பாழாகப் பாவிகள் தன் சொல் கேளாதே!
பதறாதே! வயிற்றுக்கே மயங்கிடாதே!
கேளாதே! பேச்செல்லாம் கேட்டுக் கேட்டுக்
கலங்காதே! உடல் உயிர் என்று உணர்ந்திடாயே.

உணவு பற்றியோ, உடை பற்றியோ, உறைவிடம் பற்றியோ, உறவு நிலை பற்றியோ சிறிதும் அக்கறை கொள்ளாதவர்கள் சித்தர்கள். வெயிலோ மழையோ, இருளோ, ஒளியோ, காடோ, மேடோ எதைப்பற்றியும் எண்ணாமல் தாம் போகும் போக்கிலே போய்க்கொண்டு இருப்பார்கள். பசி, நோய், புகழ், பழி, விருப்பு, வெறுப்பு, பகை, நட்பு ஆகிய அனைத்தையும் ஒக்கவே நோக்கும் தன்மை உடையவர்களாக இருப்பார்கள். உடலை உகுப்பதற்குத் துளியளவு தானும் அசையாத உறுதி தம்மைத் தாமே கட்டுக்குள் வைத்திருக்கும் பேராண்மை இவற்றின் முழு வடிவமாகவே சித்தர்கள் மிளிர்வார்கள். சாதி சமயப் பிரிவுகள், செல்வம், செல்வாக்கு, பதவி, பட்டம், மண், பொன், பற்று ஆகிய எதிலும் சாராத தன்மை உடையவர்களாகவே சித்தர்கள் இருந்தார்கள். "சாத்திரத்தைச் சுட்டெரித்தால் அவனே சித்தன்" என அகத்தியர் தனது பாடலிலே குறிப்பிடுகின்றார்.

சித்தர்களின் கடவுட்கொள்கை தெளிவானது; திட்டவட்டமானது. இவர்கள் நாத்தமும் பேறக் கடவுள் இல்லை என்று கூறும் நாத்திக வாதிகள் இல்லை. இவர்கள் திருமூலர் குறிப்பிடுவதுபோல "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற கடவுட் கொள்கையை உடையவர்கள்.

"ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு" என்பார் பட்டினத்தார். மனிதர்கள் கடவுளின் பெயரால் கருத்து வேறுபாடு கொண்டு தமக்குள் கலகம் விளைவித்துக் கொள்வதில் சித்தர்களுக்கு ஒரு சிறிதும் உடன்பாடில்லை.

*கற்பனைகள் அனைத்தையும் கடந்தவன் இறைவன்.*

இறைவன் ஒருவன்தான் என்பதை உணர்ந்து அவரை வணங்க வேண்டும். பூமியில் நல்ல மனிதனாக வாழ வேண்டும். தக்க காலத்தில் மண்ணைப் பண்படுத்தி விவசாயம் செய்து தானிய விளைச்சலை உருவாக்க வேண்டும். தீய வழிகளில் மனத்தை விடக்கூடாது. உலகில் திருடர்கள் பலர் திரிவார்கள். இன்னும் பலபேர் வருவார்கள். இனிய வார்த்தைகளைப் பேசி சாதாரண மக்களை மயக்குவார்கள். இப்படியாக வேடதாரிகள்போல் வந்து பசப்பு வார்த்தைகள் கூறி ஏமாற்றுபவர்களின் வலையில் வீழ்ந்து விடக்கூடாது என்று அறிவுரை பகர்கின்றார் அகத்தியர்.

ஒருவனென்றே தெய்வத்தை வணங்க வேணும்;
உத்தமனாய்ப் பூமிதனிலிருக்க வேணும்;
பருவமதிற் சேறு பயிர் செய்ய வேணும்;
பாழிலே மனத்தை விடான் பரமஞானி;
திரிவார்கள் திருடரப்பா கோடா கோடி;
தேசத்திற் கள்ளரப்பா கோடா கோடி;
வருவார்களப்பனே அனேகங் கோடி
வார்த்தையினால் பசப்புவார் திருடர்தானே.

"சத்ய மேவ ஜயதே" (உண்மையே வெல்லும்) என்பது உபநிடத மகா வாக்கியம். மனிதன் என்றால் வாக்கில் சத்தியம் வேண்டும். உள்ளம் தூய்மையாக இருந்தால் வாக்கும் தூய்மையுடையதாக இருக்கும் என்பதை "உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்" என மகாகவி பாரதியாரும் கூறியுள்ளார். பிறரைக் கெடுக்கும் சண்டாளத்தனம் கூடாது. தனது கடமைகளையும் நித்திய கர்மங்களையும் ஒழுங்காகச் செய்தல் வேண்டும். நமது புத்தியைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும். பொய் சொல்லக்கூடாது; புண்ணியச் செயல்களை மறக்கக் கூடாது; வாக்குவாதம் யாரிடமும் செய்யக்கூடாது என மனிதன் செம்மையாக வாழ்வதற்குரிய பல அறிவுரைகளை அகத்தியர் தனது பாடலின் ஊடாக விளக்குகின்றார்.

சத்தியமே வேணுமடா மனிதனானால்
சண்டாளஞ் செய்யாதே தவறிடாதே
நித்திய கர்மம் விடாதே நேமம் விட்டு
நிட்டையுடன் சமாதிவிட்டு நிலை பேராதே
புத்தி கெட்டுத் திரியாதே பொய் சொல்லாதே
புண்ணியத்தை மறவாதே பூசல் கொண்டு
கத்தியதோர் சள்ளிட்டுத் தர்க்கியாதே
கர்மியென்று நடவாதே கதிர்தான் முற்றே.

உடலில் இருந்து உயிர் பிரிந்து சென்றதும் ஊரவர்கள், உறவினர்கள் அனைவரும் வந்து ஒன்று கூடுகிறார்கள்; கதறி அழுகிறார்கள். உயிர் இருக்கும் வரை அன்போடு அழைத்த பெயரை மறந்து விடுகிறார்கள். பிணம் என்ற அஃறிணைப் பெயரைத்தான் சூட்டி நிற்கிறார்கள். சுடுகாட்டிற்கு உடலை எடுத்துச் சென்று தீயில் சுடுகிறார்கள். சாம்பலையும்

*அகத்திலே இருக்கும் பக்தி முகத்தில் தெளிவைத் தரும்.*

தண்ணீரில் கரைத்துவிட்டு இறந்தவரின் நினைப்பை மறந்து வீடு திரும்புகிறார்கள். இவ்வாறு உயிர்போன உடலிற்குச் செய்யப்படும் செயற்பாடுகளை எல்லாம் கூறி நிலையாமைக் கருத்தினைப் பின்வருமாறு திருமந்திரம் தெளிவாக விளக்குகிறது.

ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணம் என்று பேரிட்டு
சூரையங் காட்டிடைக் கொண்டு போய் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந்தார்களே.

உயிர்போன உடலைப் பார்த்துப் பிணம் கிடக்கிறது என்றுதான் மக்கள் அனைவரும் கூறுவார்கள். உடலைவிட்டுப் பிரிந்த உயிர் பஞ்சபூதங்களில் ஒன்றாகிய ஆகாயத்துடன் கலந்து விட்டது என்றும் சிவத்துடன் சேர்ந்துவிட்டது என்றும் வேறு சிலர் கூறுவார்கள். அக்கினியில் தகிக்கப் படல் உடல் நீறாகிவிடும் என்பார்கள். பிறவிநோய் தொடரும் என்பதை அறியாத மானிடர்கள் இப்படிப் பல கருத்துக்களைக் கூறுவார்கள். அறியாமையில் மூழ்கியிருக்கும் இவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து தீய வழிகளையே நாடிச் செல்கிறார்கள் என்கிறார் அகத்தியர்.

பாரப்பா சீவன் விட்டுப் போகும் போது
பாழ்த்த பிணங்கிடக்கு உயிர்போச் சென்பார்
ஆரப்பா அறிந்தவர்கள் ஆரும் இல்லை
ஆகாய சிவத்துடனே சேருமென்பார்
காரப்பா தீயுடன் சேருமென்பார்
கருவறியா மானிடர்கள் கூட்டமப்பா
சீரப்பா காமிகள் தாமொன்றாய்ச் சேர்ந்து
தீய வழிதனைத் தேடிப் போவார் மாடே.

தமிழகத்தின் புரவலராகவும், புண்ணிய புருஷராகவும் போற்றப்பட்டவர் அகத்தியர். புராணங்களில் இவர் சிறப்பித்துக் கூறப்படுகின்றார். தமிழில் உள்ள இலக்கியங்களிலும் வடமொழி வேதங்களிலும் இவரைப்பற்றிய குறிப்புகள் நிறையக் காணப்படுகின்றன. வேத காலத்து ஏழு மகரிஷிகளுள் அகத்தியரும் ஒருவர் என இருக்கு வேதம் கூறுகிறது. இவர் இந்தியாவின் மிகவும் புகழ்பெற்ற புனிதர்களில் ஒருவர். சிறந்த மகானாகவும், யோகியாகவும், குருவாகவும் போற்றப்படுகிறவர். உயரத்தில் ஐந்து அடிக்கும் குறைவானவர் என்ற படியால் அனைவராலும் "குறுமுனி" என்று அன்போடு அழைக்கப்பட்டார்.

நூற்றுக்கணக்கான அறிவியல் நூல்கள் அகத்தியர் பெயரில் ஏற்றிச் சொல்லப் பட்டிருக்கின்றன. மருத்துவம், மருந்து தயாரிப்பு, இரசாயனம், வானியல், அறுவைச் சிகிச்சை என்று விஞ்ஞானத்தின் பல்வேறு கனங்களில் இவருடைய பெயர் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. கிரேக்கர்களிடையே ஹிப்போகிரட்டீஸ் மருத்துவர்களின் தந்தை என்று போற்றப்பட்டதுபோல தமிழர்களிடையே அகத்தியர் பிரபல்யம் பெற்றிருந்தார்.

(தொடரும்...

பூரண ஞானம் ஏற்படும்போது மனிதன் மௌனமாகி விடுகிறான்.

# மலேசியாப் பயணத்தின் முன்னோடி:

– திரு செ. மோகனதாஸ் சுவாமிகள் –

எனது கடந்தகால வாழ்வை எண்ணுமிடத்து பாடசாலையில் கல்வி கற்கும் காலம் ஒரு பொழுதுபோக்குக்காக ஸ்ரீமத் மயில்வாகனம் சுவாமி அவர்களால் நிர்வகிக்கப்பட்டு வந்த ஆனந்த ஆச்சிரமத்துடன் இணைந்து அங்கே இடம்பெறும் அன்னதான செயற்பாடுகளுக்கு இயன்ற அளவு சரீரத் தொண்டு புரிந்து வந்த என்னை அவரது கடைக்கண் பார்வைமூலம் ஆட்கொண்டதன் பிரகாரம் முற்றுமுழுதாக சந்நிதி வேலவனது திருவருளுக்கும் ஸ்ரீமத் மயில்வாகனம் சுவாமி அவர்களின் குருவருளுக்கும் பாத்திரமாகி அன்னதானக் கந்தன் என்று அவனியெல்லாம் உள்ள அடியார்கள் மனதில் நின்றுறையும் வேலவனது அன்னதானச் செயற்பாட்டை இடைவிடாது நிறைவேற்றும் பணியின் நிமித்தம் ஆச்சிரம வளாகத்தில் முன்னெடுத்து வருகின்றேன்.



அதன் பிரகாரம் கடந்த பல வருடங்களாக ஆச்சிரம செயற்பாட்டில் ஈடுபட்டிருந்த என்னை தனக்காற்றும் பணியுடன் தல யாத்திரைகளை மேற்கொள்வதற்கு சந்நிதி வேலவன் அனுக்கிரகம் புரிந்ததன்மூலம் 2006ஆம் ஆண்டு பங்குனிமாத நடுப்பகுதியில் எனது முதல் தல யாத்திரையாக தமிழ்நாட்டில் உள்ள தலங்களைத் தரிசிக்கும் பேறு எனக்குக் கிட்டியது. அதனைத் தொடர்ந்து 2009ஆம் ஆண்டில் இருந்து 2013ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் வட இந்தியத் தல யாத்திரையில் ஈடுபடுவதற்கு சந்நிதியான் தனது பேரருளை வழங்கி பல வட இந்தியத் தலங்களோடு தமிழ்நாட்டில் உள்ள தலங்களையும் தரிசித்த அனுபவங்களை கடந்தகால ஞானச்சுடர் மலரில் தொடராக எழுதியிருந்தேன். வருடாவருடம் இவ்வித தல யாத்திரைமூலம் ஒருவித ஆன்மபலம் பெறுவதற்கும், பலவித அனுபவங்களையும், இறைவனின் அனுக்கிரகங்களையும்

பெற்றுக்கொள்வதற்கும் வழிகோலியது என்றே கூறலாம். இவ்வகையான செயற்பாட்டினை கதிர்காம உற்சவ காலங்களிலும் ஆச்சிரமத்திலிருந்து அடியார்களை அழைத்துச்சென்று பல தலங்களினூடாக வழிபாடு செய்து வருவதும் ஆச்சிரமப் பணிகளில் ஒன்று. 2014ஆம் ஆண்டு வட இந்தியத் தலயாத்திரையில் ஈடுபடுவதற்குரிய வழிவகைகளைச் செய்யும்போது அவ்வருட கதிர்காம உற்சவம் ஒழுங்கின் பிரகாரம் நடைபெறாமல் பின்தங்கிய நிலையின் காரணமாக என்னால் அவ்வருட தல யாத்திரையில் பங்குபற்ற முடியாத சூழ்நிலை ஏற்பட்டதனால் கதிர்காம உற்சவ காலத்தில் இடம்பெறும் எமது வழமையான செயற்பாட்டில் ஈடுபட்டேன். இந்தியத் தலயாத்திரையில் என்னால் பங்குபற்ற முடியாமல் போய்விட்டதே என்ற கவலை ஒருபுறம் இருந்தாலும் ஏதோ ஒரு காரணத்தை முன்னிட்டுத்தான் சந்நிதியான் இந்த யாத்திரையை தவிர்த்துள்ளான் என்ற எண்ணம் என் மனதில் எழுந்தது.



2014ஆம் ஆண்டு இறுதியில் மலையகத்தில் இடம்பெற்ற மீரியப்பெத்தை மண்சரிவு காரணமாக மாதம் ஒரு தடவை இரண்டு நாள் நானும் எனது குழுவினரும் மலையகம் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு எம்மால் ஆன நிவாரணங்களை வழங்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டு வருகின்றோம். எனது வட இந்திய யாத்திரைக்குரிய நிதி அனைத்தும் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளுக்கு பயன்படுத்தப்பட்டது. இதுகூட சந்நிதியானது அருளாடல் என்றே கூறலாம்.

இவ்வகைச் செயற்பாட்டில் மாதாமாதம் நாம் ஈடுபட்டுக்கொண்டிருக்கும்போது 2015ஆம் ஆண்டு பங்குனிமாதம் எம்மால் மேற்கொள்ளப்பட்ட மலையகப் பயணத்தின்போது எம்மோடு இணைந்து அப்பயணத்தில் ஈடுபட்ட இலங்கை வங்கியில் கடமையாற்றும் திரு த. கணேசமூர்த்தியின் உறவினரும் மலேசியாவில் நீண்டகாலமாக வாழ்பவராகிய திரு கதிர்காமர் செல்வராஜா அவர்களும் எம்முடன் இணைந்து மலையகப் பயணத்தில் கலந்துகொண்டிருந்தார். அதன் பயனாக மலையகத்தில் பல இடங்களுக்கும் எம்மோடு வந்து எமது பணியின் பலாபலன்களை எடைபோட்டபடி தனது மனதில் எழுந்த எண்ணங்களை எம்முடன் பகிர்ந்து கொண்டார். அவரது எண்ணத்தில் ஒரு செயற்பாடாக என்னை மலேசியாவுக்கு அழைப்பித்து அங்கேயுள்ள பலவித ஆலயங்களையும் தரிசிக்கச் செய்யவேண்டும் எனும் முனைப்புடன் திரு கணேசமூர்த்தியிடம் என்னை அழைத்துக்கொண்டு மலேசியா வரும்படி அழைப்பு விடுத்திருந்தார். இவ் அழைப்புத்தான் மலேசியா தல யாத்திரைக்கு விதையாக மாறி என் மனதில் நல் விருட்சமாக வளர்ந்தது

(தொடரும்....

*அன்பற்ற வாழ்க்கை மரணத்திற்கு ஒப்பானது.*

# வைகாசிப் பெருவிழா

-தொகுப்பு -

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் வருடா வருடம் நடைபெற்றுவரும் வைகாசிப் பெருவிழா 20.05.2016 வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் ஆரம்பமாகியது.



விழாவின் முதல் அங்கமாக ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் இடம்பெற்ற பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து ஆச்சிரம மண்டபத்தில் விழா ஆரம்பமாகியது. வழமைபோன்று நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளின் ஆசியுரை இடம்பெற்று நிகழ்வு ஆரம்பமாயிற்று.

அவர்கள் தனதுரையின்மூலம் சந்நிதியான் ஆச்சிரமம் பின்புலமாக இருந்து நடாத்தும் இவ்விழா கடந்த பல வருடங்களாக மிகவும் சிறப்பாக நடைபெறுவதோடு தகைமை பெற்றோருக்குரிய விருதுகளையும் வழங்கி பெருமைப்படுத்துவது காலத்தின் தேவையாக இருந்தது. ஆனால் நிகழ்கால வோட்டத்தில் அடிபட்ட எமது சமுதாயத்தில் தகைமை பெற்றோரைக் காண்பது அரிதாகவே உள்ளது. அதன் அடிப்படையில்












பேரவையின் இச் செயற்பாடு கடந்த இரண்டு மூன்று வருடங்களாக இடம்பெறவில்லை என்று கூறியதோடு மேன்மேலும் பேரவையின் செயற்பாடு மேன்மையுற சந்நிதியானை வேண்டி தனது ஆசியுரையை நிறைவு செய்தார்.

ஆசிஉரையினைத் தொடர்ந்து தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய மாணவர்களின் கலைநிகழ்வுகள் இடம்பெற்றது. அந்நிகழ்வுகளை அப்பாடசாலையைச் சேர்ந்த அதிபரும் ஆசிரியர்களும் வருகைபுரிந்து நெறிப்படுத்தினார்கள். உண்மையில் மாணவ மாணவிகளின் நிகழ்வுகள் யாவும் பாராட்டும் படியாக அமைந்திருந்தது.

நிகழ்வின் அடுத்தபடியாக செஞ்சொற் செல்வர் இரா. செல்வவடிவேல் தலைமையில் இடம்பெற்ற "இன்று மக்களுக்கு பெரிதும் பயன்படும் இலக்கியம் இராமாயணமா, மகாபாரதமா" எனும் கருத்தாடலில் ஆசிரியர்களான T. கருணாகரன், S. கம்சன், S. செந்தூர்ச்செல்வன், T. தயாபரன் ஆகியோர் பங்குபற்றி சமூகத்துக்குத் தேவையான கருத்துக்களை முன்னிலைப் படுத்தி தமது வாதத் திறமையை முன்நிறுத்தி மண்டபத்தில் கூடியிருந்த மக்களின் ஏகோபித்த பாராட்டைப் பெற்றனர்.





விழாவின் இறுதி நிகழ்வாக வறுமைக் கோட்டுக்குட்பட்ட ஒரு குடும்பத்தினரின் பிள்ளைகளின் கற்றல் செயற்பாட்டுக்காக ஒரு துவிச்சக்கரவண்டி வழங்கப் பட்டது.

வருடாவருடம் நடைபெறும் விழாவிற்கு பேருதவி புரிந்து விழாவைச் சிறப்பித்த அனைவருக்கு நன்றிகூறியதோடு விழா நிறைவு பெற்றது.

*உழைப்பு உடலை வலிமையாக்கும், துன்பங்கள் மனதை வலிமையாக்கும்.*

| | | | |
|---|---|---|---|
| ம. ஸ்ரீகாந்தன் | | அச்சுவேலி தெற்கு | 5000. 00 |
| த. கணேசமூர்த்தி | இலங்கை வங்கி | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| வ. துரைராசா ஒஸ்காலேன் | | உரும்பராய் | 2500. 00 |
| செ. நவரத்தினராசா | (கப்பூது) | குப்பிளான் | 5000. 00 |
| பாக்கியரெட்ணம் இரும்பகம் | | சங்கானை | 5000. 00 |
| இ. இராசநாயகம் | துர்க்கா மரக்காலை | சண்டிலிப்பாய் | 2000. 00 |
| M.S.K. மகேஸ்வரன் | | தாவடி வடக்கு | 2000. 00 |
| S. சுந்தரலிங்கம் (செல்வம்ஸ்) சிவலிங்கப்புளியடி | | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| மகாராணி புடவையகம் பெரியகடை | | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| வ. இராசையா c/o. இ. இராஜேஸ்வரன் | | கேணியடி திருநெல்வேலி | 2000. 00 |
| க. தர்மலிங்கம் J.P | | நீர்வேலி | 1000. 00 |
| Dr சி. இராசலிங்கம் | இளை. வைத்திய பொறுப்பதிகாரி | அச்சுவேலி | 1000. 00 |
| A.S.S. இராமச்சந்திரன் மாலிசந்தி | | அல்வாய் | 2000. 00 |
| ஐ. சண்முகலிங்கம் ஆசிரியர் கரணவாய் | | கரவெட்டி | 2000. 00 |
| சி. சரவணப்பெருமாள் | | கரணவாய் தெற்கு | 1000. 00 |
| பிரம்மஸ்ரீ ச. வைத்தியநாதக் குருக்கள் | | பொலிகண்டி | 2000. 00 |
| Dr E. கனகரெத்தினம் | கொற்றாவத்தை | வல்வெட்டித்துறை | 1000. 00 |
| திருமதி தவமலர் சுரேந்திரநாதன் மயிலியதனை | | தொண்டைமானாறு | 2000. 00 |
| சுந்தர்சன்ஸ் | | மானிப்பாய் | 3000. 00 |
| சி. நாகலிங்கம் | லிங்கம்ஸ் | கரணவாய் தெற்கு | 2000. 00 |
| வ. ஆறுமுகம் அதிபர் | | ஆவரங்கால் | 2000. 00 |
| த. சிவகுருநாதன் | துவாரகா வெதுப்பகம் | கரணவாய் | 3500. 00 |
| லிங்கம் கூல்பார் | | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| ஜெகதீஸ்வரன் தர்மவதனி | | U.K. | 10000. 00 |

## ஆன்மிகச் சிந்தனை

எல்லா மனிதர்களிடமும் இறைவனைக் காண்பது என்பதுதான் ஆன்மிகத்தில் மிகவும் உயர்ந்த நிலையாகும். கடவுளைத் தேடி நீங்கள் எங்கே அலைகிறீர்கள்? மற்றதைவிட மனிதனிடம் கடவுள் சிறப்பாகத் தென்படுகிறார். ஆன்மிகத்தில் நாட்டமுள்ள மனிதர்களுக்கிடையிலும், தூய பக்தனிடமும் இறைவன் அதிகமாகத் தென்படுகிறார். பக்தனின் இதயம் இறைவனின் வரவேற்பறையாகும். இறைவன் எங்கோ தொலைதூரத்தில் இருக்கிறான் என்று நினைப்பது ஆன்மிகத்தில் ஒரு நிலை. அதைவிட பலமடங்கு உயர்ந்து இறைவன் நம் உள்ளத்தில் இருக்கிறான். நல்லெண்ணங்கள், சத்தியம், தூய்மை, அன்பு, அமைதி, சமாதானம், தொண்டு ஆகியவை ஆன்மிக வாழ்க்கைக்கு முக்கியமானது.

*சொல்லின் மேன்மை செயலில் தொணிக்கவேண்டும்.*

தமிழகத் திருக்கோயில் வரிசை:

# திருவாவடுதுறை

–வல்வையூர் அப்பாண்ணா–

ஆ+அடுதுறை= பசுக்கள் நிறைந்துள்ள காவிரிக் கரையிலுள்ள ஊர். இது சோழநாட்டின் தென்கரைத் தலம். மயிலாடுதுறை→ கும்பகோணம் சாலையிலுள்ள ஆதீன வளைவு உள்ள இடத்தினூடாக உள்ளே போனால் கோவிலை அடையலாம். வளைவுக்கு அண்மையில் "நரசிங்கன் பேட்டை" எனப்படும் புகையிரத நிலையம் உள்ளது. திருவாவடுதுறை ஆதீனமும்- அதன் நிர்வாக அமைப்பும் மிகப் பரந்துபட்டன. ஆதீனமும் கோவிலும் அருகருகே உள்ள காரணத்தால் கோவில் நன்கு பராபரிக்கப்பட்டு சிறப்பாக உள்ளது. திருமாளிகைத் தேவர் வாழ்ந்த இடமே தற்போது திருவாவடுதுறை நிர்வாகச் செயலகம் அமைந்துள்ள இடம் எனப் பரிபாலன சபையினர் கூறுகிறார்கள். இந்த வளாகத்தின் உள்ளேயே திருமாளிகைத் தேவர் ஆலயமும் உள்ளது. நரசிம்மன் எனும் அரசரின் படையெடுப்பு வேளையில், கோவில் திருமதில்களில் இருந்த நந்திகள் எல்லாவற்றையும் உயிர்பெற்றெழச் செய்து நரசிம்மனை விரட்டியமையால் ஆலயச் சுவர்களில் தற்போது நந்திகள் எதுவும் இல்லை எனவும், இந்த அற்புதத்தை நிகழ்த்தியவர் திருமாளிகைத் தேவரே எனவும் வரலாறு கூறுகிறது.

எண்ணற்ற சிறப்புக்களைக் கொண்ட திருத்தலம் திருவாவடுதுறை:

1). இறைவி பசு வடிவில் வழிபட்ட ஸ்தலம்

2). தன் தந்தையின் வேள்விக்காகத் திருஞானசம்பந்தர் இறைவனிடம் பொற்கிழி பெற்ற இடம்.

3). சுந்தரர் உடற்பிணி தீரப் பிரார்த்தித்த இடம்.

4). திருமூலர் தங்கியிருந்து தவஞ்செய்து "திருமந்திரம்" அருளியது.

5). போக சித்தருடைய மாணவராகிய திருமாளிகைத் தேவர் பல அற்புதங்கள் செய்த திருக்கோவில்.

6). இறைவன் முசுகுந்தனுக்கு மகப்பேறு அருளி இத்தலத்தைத் திருவாரூராகவும், தம்மைத் தியாகேசராகவும் காண்பித்தமை.

7). திருமூலர், திருமாளிகைத் தேவர் சமாதிகள் உள்ள இடம்.

கோமுக்தி நகர், அரசவனம், முத்தி ஷேத்திரம், கோகழி, சிவபுரம், பிரமபுரம், அகத்தியபுரம், தருமநகர், நந்திநகர் முதலான வேறுபல பெயர்களும் இத்தலத்திற்குண்டு.

கிழக்கு நோக்கிய திருவாவடுதுறைத் திருக்கோவில் 5 நிலைக் கோபுரம் கொண்டு பொலிவுடன் திகழ்கிறது. கோபுரத்திற்கு எதிராக அகன்ற - நேர்த்தியான படிக்கட்டுக்களைக் கொண்ட ஸ்தல தீர்த்தமான "கோமுக்தி தீர்த்தம்" உள்ளது. கோபுரத்தின் இரு புறமும் அழகான பண்டிகையுடன் வலது பக்கம் விநாயகரும், இடது பக்கம் சுப்பிரமணியரும் அமர்ந்துள்ளனர். கோபுர வாசல் தாண்டி அகன்ற- நீண்ட நடைபாதையில் கால் வைத்து

போட்டி மனப்பான்மை இருக்கிற வரையில் மனநிறைவு உண்டாகாது.

உள்ளே போகிறோம். வலது பக்கமாக "ஆதிகோமுக்தீஸ்வரர்" தனிச் சந்நிதி காணப்படுகிறது. அந்த சந்நிதியின் முகப்பு வாசல் மேலே சிவனின் மடியில் அம்பாள் அமர்ந்தபடியுள்ள சுதைச் சிற்பம் உள்ளது. அருகே அன்னதான மண்டபம் உள்ளது. இடது புறமாக உள்ள ஒரு மண்டபத்தில் சிறுசிறு சேதங்களுக்குட்பட்ட சிவன், தெட்சணாமூர்த்தி, கணபதி, லக்குமி போன்ற பல தெய்வ கல் விக்கிரகங்கள் வைக்கப்பட்டுள்ளன. இந்த விக்கிரகங்கள் சேதமடைந்த காரணங்கள் கண்டறியக்கூடியதான எந்த விபரமும் அங்கில்லை என்பதுடன் இவற்றிற்கு பூசை வழிபாடுகளும் இல்லை.

அடுத்துள்ள ஒரு முகப்பு மண்டப வாசலின் மேலே, மையத்தில் சிவன் அம்பாள் நின்றபடியான அமைப்பு, வலதுபுறம் கணபதி, அடுத்து சிவலிங்கத்தின்மீது பசு பால் சொரிந்தபடியுள்ள அமைப்பு, இடது புறம் முருகனும் சுதைச் சிற்பமாக உள்ளனர். இந்த முகப்பு வாசலின் உள்ளே இரு புறமும் உள்ள சந்நிதிகளில் விநாயகரும் முருகனும் வீற்றுள்ளனர். உமையம்மை பசுவாக மாறி இறைவனைத் தொழவந்த வேளையில் துணையாக வந்த விநாயகரும் முருகனும் இவர்களேயாவர். முகப்பு வாசலின் தொடர்ச்சியாக உள்ள மண்டபத்தில் ஒரு பெரிய பீடம் (பலிபீடம் போன்ற அமைப்பில்) காணப்படுகிறது.

தனது தந்தையான சிவபாதவிருதையரின் வேண்டுகோளை ஏற்று, அவரது யாகத்திற்காகப் பணமுடிப்பு ஒன்றினை இறைவனிடம் கேட்டு நிற்கிறார் திருஞானசம்பந்தர். இந்த வேளையில் திருவாவடுதுறையில் சம்பந்தர் பாடிய பதிகம் "இடரினும் தளரினும்..." என்று தொடங்கும் பாடலாகும்.

இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உன்கழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே.
இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

திருவாவடுதுறையில் சம்பந்தர் பாடிய இப்பதிகம் ஏனைய பதிகங்களைவிட வித்தியாசமானது. நாலடியின் மேல் "வைப்பு" என்று இரண்டு வரிகள் மேலதிக பாவாகக் கொண்டது. விருத்தப்பா நான்கடியில் நிறைவுபெறும். அதன்மேல் இரண்டு அடிகள் தொடர்கிறது இப்பா. பதிகத்தின் ஒவ்வொரு பாடல் இறுதியிலும் "இதுவோ எமை ஆளுமாறு..." என வரும் இரு அடிகளும் பதிகத்தின் பத்துப் பாடல்களிலும் மீண்டும் மீண்டும் வரும் சிறப்பினை அன்பர்கள் நோக்க வேண்டும். இப் பாடற் சிறப்பினைப் பெரியபுராணம் (பாடல் இல: 2323) இவ்வாறு கூறுகிறது.

எடுத்த வண்டமிழ்ப் பதிகநா லடியின்மேல் இருசீர்
தொடுத்த வைப்பொடு தொடர்ந்தஇன் னிசையினால் துதிப்பார்
மடுத்த காதலில் வள்ளலார் அடியினை வழுத்தி
அடுத்த சிந்தையால் ஆதரித் தஞ்சலி அளித்தார்.

பதிகம் பாடி நிறைவு பெற்றதும் பூதகணம் ஒன்று ஆயிரம் பொற்காசுகள் அடங்கிய பணமுடிப்பு ஒன்றினை (மேற்குறித்த) பீடத்தின்மீது வைத்தது. இதனைப் பெரியபுராணம் (பாடல் இல: 2324) இவ்வாறு கூறுகிறது.

நச்சி இன்தமிழ் பாடிய ஞானசம் பந்தர்
இச்சை யேபுரிந் தருளிய இறைவர்இன் அருளால்
அச்சி றப்பருள் பூதமுன் விரைந்தகல் பீடத்து
உச்சி வைத்தது பசும்பொன்ஆ யிரக்கிழி ஒன்று.

இப் புனிதம் வாய்ந்த கற்பீடத்தினை நாமும் தொட்டு வணங்கிக் கொள்கிறோம். பீடத்திற்கு முன்பாக மிகப் பெரிய நந்தி ஒன்றுள்ளது. நந்தியின் செவிகளுக்கும் - கொம்புகளுக்கும் மட்டும் கவசம் இடப்பட்டுள்ளது. மற்றொரு நுழைவாசல் தாண்டி உட்சென்றால் இதுவே வெளிப்பிரகாரம். வடமேற்கு மூலையில் உள்ள திருமூலர் சந்நிதி தவிர இந்தத் திறந்த பிரகாரத்தில் வேறு சந்நிதிகள் எதுவுமில்லை.

சைவத் திருமுறைகளுள் திருமூலர் அருளிய "திருமந்திரம்" பத்தாம் திருமுறையாகக் கொள்ளப்படுகிறது. திருமூலர் மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்து, ஆண்டுக்கு ஒரு பாடலாக 3000 பாடல்கள் பாடினார் எனத் திருமூலர் வரலாறு கூறினாலும் - அவர் நீண்ட காலம் வாழ்ந்தார் என்பதையே இக்கூற்றுக் குறிப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். திருமந்திரம் ஏட்டுச் சுவடிகள் திருவாவடுதுறை மடத்தில் மறைவாக வைக்கப்பட்டிருந்தது எனவும், ஏழாம் நூற்றாண்டிலே வாழ்ந்த சீர்காழிப் பிள்ளையாரே அதனை வெளிப்படுத்தினார் எனவும்- திருமந்திரம் பாடல் நூலின் முற்குறிப்பான திருமூலர் வரலாற்றில் உள்ளது. அவரது சந்நிதியே வடமேற்கு மூலையில் உள்ளது. இங்கிருந்தபடி பார்த்தால் வடகிழக்கு மூலையில் அம்பாள் சந்நிதியின் பின்புறம் தெரிகிறது. புதிதாக வர்ணம் தீட்டப்பட்ட அம்பாள் கோவில் பண்டிகைகள்- காலைநேர சூரிய ஒளியில் ஜொலிக்கின்றன. அம்பாள் சந்நிதியை சுற்றி வந்து அம்பிகை **ஒப்பிலாமுலையம்மை**யைத் தரிசனம் செய்கிறோம். நான்கு திருக்கரங்களுடன்- புன்சிரிப்புடன்- நின்ற திருக்கோலத்தில்- அழகிய அலங்காரத்துடன் அருள்பாலிக்கிறார் அம்பிகை. அம்பாள் கோவிலின் மண்டபச் சுவரில் தெரிவுசெய்யப்பட்ட 18 திருமந்திரப் பாடல்கள் எழுதப்பட்டுள்ளன. 6, 20, 51, 67, 95, 109, 140, 193, 203, 317, 934, 1789, 1849, 2290, 2325, 2453, 2953, 2971 இலக்கமுடைய திருமந்திரப் பாடல்களே அவை. அம்பாள் வாசலில் சிறிய பிரதோச ரிஷபம் வைக்கப்பட்டிருந்தது.

அம்பாள் தரிசனத்தை முடித்துக்கொண்டு ஒரு அடிக் கோபுர வாசல் வழியாக நுழையும்போது இரு புறமும் (அடிக் கோபுரத்தின் உள்ளேயே) அறைகள் போன்ற அமைப்பில் கண்ணாடிப் பேழைகளில் மெய்கண்ட சாத்திரம், பன்னிரு திருமுறைகள், பண்டார சாத்திரங்கள் (12 தர்ம போதனைகள். அவை உண்மையில் எனக்குப் புரியவில்லை.) மற்றும் கிடைத்தற்கரிய பழைய ஓலைச் சுவடிகள், பழைய புத்தகங்கள் ஆகியன வைக்கப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன. மண்டபம் நடுவே தம்பம்- பலிபீடம்- நந்தி காணப்படுகின்றன. உள்ளே இரு மண்டபங்களுக்கு அப்பால் நேராக கருவறை தெரிகிறது. உள் மண்டபத்தின் வலது புறத்தில் ஸ்ரீ தியாகராஜர் சந்நிதி காணப்படுகிறது. ஒரு பக்கச் சுவரில் அப்பரின் திருத்தாண்டகமும், திருமூலரின் "சிவனோடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை" எனும் திருமந்திரப் பாடலும் எழுதப்பட்டுள்ளது. நடு மண்டபத்தில் உள்ள சிறிய இரண்டு நந்திகளில் ஒன்று உலோகத்தால் ஆனது. கருவறை வாசலில் துவார பாலகர்களுக்குப் பதிலாக வலதுபுறம் பிள்ளையாரும், இடது புறம் முருகனும் உள்ளனர். உள்ளே கருவறையில் லிங்கவடிவில் "மாசிலாமணீஸ்வரர்" அருள் பாலிக்கிறார். "கோமுக்தீஸ்வரர்" எனும் திருநாமமும் இவருக்குண்டு. கோஷ்ட

ஆற்றல் உள்ள இடத்தில் அகம்பாவமும் தானே வந்து சேர்கிறது.

மூர்த்தங்களாக தலவிநாயகர், அகத்தியர், ஆலமர் செல்வன், லிங்கோற்பவர், பிரம்மா, துர்க்கை உள்ளனர். சண்டிகேசருக்கு தனிச் சந்நிதி காணப்படுகிறது.

உட்பிரகாரத்தை வலம் வரும்போது கிழக்கில் (வலது பக்கம்) சூரியன்- தன் தேவியர் இருவருடனும் உள்ள சந்நிதியும், சுந்தரரின் உற்சவத் திருமேனியையும் தரிசிக்கலாம். தென் சுற்றில் நந்திகேஸ்வரர், ஸ்ரீ விஸ்வநாதர், ஸ்ரீ விசாலாட்சி, மாணிக்கவாசகர், திருமுறை கண்ட விநாயகர், அடுத்து வரிசையாக அறுபத்துமூவரும் உள்ளனர். மேற்குச் சுற்றில் பிரகாரப் பாதையைவிட்டு ஐந்து படிகள் மேலேறி நடந்தால் ஸ்ரீ கன்னி விநாயகர், ஸ்ரீ ஞானாம்பிகை, ஸ்ரீ காளத்தீஸ்வரர், ஸ்ரீ பாண்டியலிங்கம், கொங்கணேஸ்வரி அம்பாளைத் தரிசிக்கிறோம். அடுத்திருப்பது ஸ்ரீ சுப்பிரமணியர் சந்நிதியாகும். இச்சந்நிதி வழமைக்கு மாறாக கருவறைக்கு சரி பின்புறமாக அமைந்திருப்பது வித்தியாசமான அம்சமாகும். தொடர்ந்தும் ஸ்ரீ சரஸ்வதி, ஸ்ரீ மீனாட்சி, ஸ்ரீ சொக்கலிங்கம், ஸ்ரீ சேரலிங்கம், ஸ்ரீ மகாலெட்சுமி ஆகியோர் வரிசையாக உள்ளனர்.

மீண்டும் கிழக்குச் சுற்றின் இடது புறம் பார்த்தால் லிங்கத்தின்மீது பால் சொரியும் ஒரு சொரூபம், ஸ்ரீ சோழலிங்கம், சனிபகவான், வைரவர், ஸ்ரீ பஞ்சலிங்கம், சந்திரன் உள்ளனர். சனி பகவானுக்குத் தனிச் சந்நிதி இருப்பதைத்தவிர நவக்கிரக மண்டபம் எதுவும் இங்கில்லை.

ஒரு அற்புதத் திருக்கோவில் தரிசனம் பூரணமாகக் கிடைக்கப்பெற்ற மனநிறைவோடு திருவாவடுதுறைத் திருக்கோவிலைவிட்டு வெளியே வருகிறோம்.

"மஞ்சனே மணியுமானாய் மரகதத் திரளுமானாய்
நெஞ்சுளே புகுந்துநின்று நினைதரு நிகழ்வினானே
துஞ்சம் போதாக வந்து துணையெனக்காகி நின்று
அஞ்சல் என்றருள வேண்டும் ஆவடுதுறையுள்ளானே"

-அப்பர்-




ஆடம்பரமற்ற எளிய வாழ்க்கை அறநெறிக்குத் துணை செய்யும்.

# ஆனிமாத வாராந்த நிகழ்வுகள்

**03.06.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து..."

வழங்குபவர் :- திரு ஐ. சண்முகலிங்கம் அவர்கள்

[இளை. ஆசிரியர்]

---

**10.06.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

விடயம் :- "இன்னிசை"

வழங்குபவர் :- நுண்கலைமாணி திருமதி வானதி மகிந்தன் அவர்கள்

[ஆசிரியை - வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி]

**(பக்கவாத்திய சகிதம்)**

---

**17.06.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "கந்தபுராணம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை]

---

**24.06.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்**

# ஞானச்சுடர் ஆனிமாத வெளியீடு

வெளியீட்டுரை :- பிரம்மஸ்ரீ கு. தியாகராஜசர்மா (நீர்வைமணி) அவர்கள்

மதிப்பீட்டுரை :- திரு க. நவரத்தினம் அவர்கள்

[இளை. ஆசிரியர், நெல்லியடி]

**222ஆவது மலர்**

பதிவு இல. *QD/160/NEWS/2016*

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

